Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk
விலை 40 ரூபா • தீபம் 161 • 14.10.2018

சூரியன் பதிப்பகம்
சூரியன் பதிப்பகம் தற்போது புதிய முகவரியில்
காகிததாதிகள் விநியோகத்தர்கள்
புதிய கச்சேரி அருகாமை,
523, திருநகர் வீதி, கிளிநொச்சி 077-2882142



"முதலமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்"

புலிகளின் ஆயுதக்கப்பல் ரூட் •

கல்முனை களேபரங்கள் முடியுமா? •

மட்டு ரயில் நிந்தவூர் வருமா? •

## 24ம் திகதி என்ன நடக்கும்?

## அப்பத்தை நினைத்து சிரித்த மைத்திரி, மஹிந்த

## ஜெஸ்ஸி VS ஜானு 6 வித்தியாசங்கள்!

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் குடும்பத்துடன் சுவைத்து மகிழ்ந்திட
YARL AHI Ice Cream
யாழ் அகி ஐஸ்கிறீம்
ஒருமுறை விஜயம் செய்து சுவைத்துப் பாருங்கள்
திருமணநாள் மற்றும் பிறந்தநாள் பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும் ஏனைய விழாக்களுக்கும் வாகன வசதியுடன் வழங்கப்படும்.
குறிப்பு : மேலதிக விபரங்களை அறிந்திட www.yarlahi.comஐ பார்வையிடவும்.





இல:-46,உதயநகர் மேற்கு கிளிநொச்சி T.P:-021-7917585,0770232328






coustomer is king





# 24ம் திகதி என்ன நடக்கும்?

வடக்கு முதலமைச்சர் என்ன செய்ய போகிறார்? என்ற கேள்வி கொஞ்சநாளில் புதிய கட்சியை அறிவிக்கிறாரா? என்று வந்து நின்றது. இப்பொழுது, எப்பொழுது அறிவிக்கிறார்? என்று ஆகி விட்டது. இந்த கேள்விகளை கவனமாக பார்த்தால், ஒரே திசையை நோக்கி நகர்வது தெரியும்.

ஆம். முதலமைச்சர் தனிக்கட்சி ஆரம்பிக்கப் போகிறார் என்பதே இப்போதையை லேட்டஸ்ட் தகவல். அதற்கான முன்னாயத்தங்கள் எல்லாம் துரிதமாக நடந்து கொண்டிருப்பதாக தெரிகிறது. மாகாணசபையின் ஆயுளும் முடிகிறது, தனிவழி முயற்சிகளும் தீவிரம் பெற்றுள்ளது என்ற நிலையில் பரபரப்பை எகிற வைத்துள்ளது முதலமைச்சரின் 24ம் திகதி கூட்டம்.

வரும் 24ம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, அந்த கூட்டத்தில் தனிக்கட்சி அறிவிப்பு வெளியிடுவாரா? என்ற கேள்விகளே இப்பொழுது அதிகம் பேசப்படுகின்றன.

24ம் திகதி முதலமைச்சர் தனிக்கட்சி அறிவிப்பு வெளியிடுவாரா?

முதலமைச்சரின் ஆலோசகர்கள், அவரது அணியிலிருக்கும் உள்விவகாரங்கள் தெரிந்தவர்களுடன் இது குறித்து பேசினோம். அந்த தகவல்களின் ஒரு பகுதியை தீபம் வாசகர்களிற்காக தருகிறோம்.

ஒக்ரோபர் 23ம் திகதி வடமாகாணசபையின் ஆயுள்காலம் முடிவடைகிறது. வடமாகாணசபையின் ஆயுள்காலம் முடிவதற்கு முன்னர், தனி அணி பற்றிய எந்த அறிவித்தலையும் விடுவதில்லையென்ற உறுதியான முடிவை முதலமைச்சர் எடுத்திருப்பதாக சொல்லப்படுகிறது. காரணம், "தன்னை இந்த இடத்திற்கு அழைத்து வந்தது கூட்டமைப்பு. அந்த பதவியில் இருக்கும் வரை கூட்டமைப்பிற்கு எதிரான நகர்வுகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பிப்பது முறையல்ல" என முதலமைச்சர் நினைப்பதாக தெரிகிறது. அவருக்கு நெருக்கமானவர்களுடன் நடக்கும் கலந்துரையாடல்களிலும் இதை அழுத்திக் குறிப்பிட்டிருக்கிறார்.

கடந்த ஒரு மாதமாகவே, தனக்கு நெருக்கமானவர்கள் அடுத்த தேர்தலில் தன்னுடன் இணைந்து நிற்பார்கள் என கருதுபவர்களுடன் பேச்சு நடத்தி வருகிறார். அப்படி சில மாகாணசபை உறுப்பினர்களுடனும் பேசியிருக்கிறார்.

அந்த சந்தர்ப்பத்தில் "உடனடியாக கட்சி அறிவிப்பு விடமாட்டேன்" என தெளிவாக சொல்லியிருக்கிறார்.

அப்படியானால் முதலமைச்சரின் நகர்வு என்ன என அவர்கள் சந்தேகத்துடன் கேட்க, தனது திட்டத்தை விபரமாக குறிப்பிட்டிருக்கிறார்.

"கட்சி, கூட்டணி பற்றி யாரும் சிந்திக்க தேவையில்லை. மாகாணசபை கலைந்ததும், தமிழ் மக்கள் பேரவையின் மூலம் ஒரு மக்கள் இயக்கத்தை கட்டியெழுப்புவோம். ஒவ்வொரு ஊருக்கும் செல்வோம். அரசியல்கைதிகள் விடுதலை, நில விடுவிப்பு, அரசியல்தீர்வு என போராடுவதற்கு நிறைய விசயங்கள் உள்ளன. அகிம்சைரீதியிலான போராட்டத்தை விடாமல் தொடர்வோம். போராட்டங்களை தொடர்ந்து கொண்டிருக்கும் சமயத்தில் ஏதாவது தேர்தல் வந்தால் நாமும் அதில் போட்டியிட வேண்டுமென மக்கள் நினைத்தால் போட்டியிடுவோம். அப்போது எமது நிலைப்பாட்டை ஏற்று யாரெல்லாம் எம்முடன் வருகிறார்களோ, அவர்களை ஏற்றுக்கொள்வோம்" என்று தனது அணியிலுள்ள மிகச்சிலரிற்கு திட்டத்தை முதலமைச்சர் சூசகமாக தெரிவித்துள்ளார்.

ஆக, இப்போதைக்கு முதலமைச்சர் கட்சியையோ, கூட்டணியையோ அறிவிக்கும் எண்ணத்தில் இல்லையென்றுதான் தெரிகிறது.

ஆனால், முதலமைச்சர்தான் அப்படி எண்ணத்தில் இல்லையே தவிர, தமிழ் மக்கள் பேரவைகாரர்கள் அப்படியான எண்ணத்துடன் மட்டுமே இருக்கிறார்களாம். முதலமைச்சரை வைத்து எப்படியாவது கட்சியை தொடங்க வைத்து விட வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், மற்ற கட்சிகளில் இருந்து உடைந்து வருபவர்களை ஒன்றிணைத்து, முதலமைச்சர் தலைமையில் ஒரு கூட்டணி அமைக்கலாமென அவர்கள் முயற்சிக்கிறார்கள். பேரவை பிரமுகர்கள் ஒவ்வொரு வாரமும் தவறாமல் முதலமைச்சரை சந்தித்து இதை வலியுறுத்தி வருகிறார்கள். இந்த சந்திப்புக்களில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இரண்டாம் நிலை தலைவர் ஒருவரும் தொடர்ச்சியாக கலந்து கொண்டு வந்திருக்கிறார்.

இந்த நிலையில் மிக அண்மையில் கஜேந்திரகுமார் ஜெனீவா புறப்படுவதற்கு முன்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர்கள், முதலமைச்சரை சந்தித்து, சுரேஷ் பிரேமச்சந்திரனை இணைக்காமல் கூட்டணி அமைக்கலாமென தெரிவித்தனர். எனினும், தனது அணியில் சுரேஷ் ஒரு அங்கமாக இருப்பார் என்பதை முதலமைச்சர் கொஞ்சம் அழுத்தமாக தெரிவித்துள்ளார். இது பற்றிய பேச்சு நீள, முதலமைச்சர் வித்தியாசமான ஒப்ஷன் ஒன்றை முன்னணிக்கு கொடுத்துள்ளார்.

"நீங்கள் என்னுடன்தான் கூட்டணி வைக்கிறீர்கள். ஆசன பங்கீட்டில் இரண்டு தரப்பாக பிரிக்கலாம். அதில் பிரச்சனையில்லை. ஆனால் அதை நான் யாருக்கு பகிர்கிறேன் என்பதில் தலைபோடாதீர்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ் எனது தரப்பில் எமது கட்சிக்குள்ளால் களமிறங்கும். நீங்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியுடன் ஒப்பந்தம் செய்ய தேவையில்லை" என்ற விளக்கத்தை கொடுத்து முன்னணியை மௌர்சலாக்கியிருக்கிறார்.

இதற்குள் முதலமைச்சர் தரப்பில் கட்சியொன்றை வாங்கி பதிவுசெய்யும் முயற்சியும் நடக்கிறது. ஏனெனில் இப்பொழுது புதிய கட்சிகள் பதிவுசெய்ய முடியாது. பதிவு செய்யப்பட்டவற்றை வாங்குவதே வழி. முதலமைச்சர். அணியிலுள்ள பெண் அரசியல்வாதியொருவர்தான் கட்சியை வாங்கும் விசயத்தை கையாள்கிறாராம்.

இந்த நிலைமையில்தான் முதலமைச்சரின் 24ம் திகதி கூட்டம் பற்றிய தகவல்கள் லீக் ஆகி, அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. 24ம் திகதி என்ன கூட்டம், முதலமைச்சர் என்ன சொல்ல போகிறார் என்ற எதிர்பார்ப்பு பரவலாக எழுந்துள்ளது.

முதலமைச்சர் தரப்பில் பேசியதில், இது பற்றியும் சில தகவல்களை பெற்றோம்.

23ம் திகதி மாகாணசபையின் ஆயுள்காலம் முடிவடைகிறது. அன்று மாலை தேனீர் விருந்துபசாரத்துடன் மாகாணசபை கலைகிறது. 23ம் திகதி அமர்வில் யாரும் வழக்கமான அரசியல் பேச்சுக்களோ, குற்றச்சாட்டோ, குத்தல் கதைகளோ கதைக்க அனுமதிக்க மாட்டேன் என்று அவைத்தலைவர் கண்டிப்பாக உறுப்பினர்களிற்கு அறிவித்து விட்டார். 'பரஸ்பரம் பிரியாவிடை மட்டுமே அன்று.

அன்றிரவு (23) யாழ் நகரிலுள்ள விடுதியொன்றில் முதலமைச்சரின் இராப்போசன விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தன்னுடைய அதிகாரிகள், பணியாளர்கள் குழாமிற்கு முதலமைச்சர் விருந்தளிக்கிறார்.

24ம் திகதி தமிழ் மக்கள் பேரவையின் கூட்டம்.

இந்தக் கூட்டம் குறித்த எதிர்பார்ப்பே எழுந்துள்ளது. இதற்காக யாழ் வீரசிங்கம் மண்டபம் முன்பதிவு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் முதலமைச்சர் தனது தனிக்கட்சி அறிவிப்பை வெளியிட வேண்டுமென தமிழ்மக்கள் பேரவை பிரமுகர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். இனியும் தாமதிக்க முடியாதென்கிறார்களாம். தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு எதிராக, ஒரு திரட்சி ஏற்பட்டு வரும் நிலையில், தாமதித்து அது நீர்த்துப்போக விடக்கூடாதென அவர்கள் கருதுகிறார்கள் போல தெரிகிறது. ஆனால், முதலமைச்சர் தனது மக்கள் இயக்கத்தின் மூலம் பகிரங்க அறிவிப்பின்றி செயற்படுவோம் என அவர்களிடம் தெரிவித்துள்ளாராம். இந்த இழுபறி அங்கு நீடித்துக் கொண்டிருக்கிறது.

இதனால், இன்னும் 24ம் திகதி கூட்டத்தில் என்ன நடக்குமென்பது பற்றிய தெளிவான முடிவு எட்டப்படவில்லை. எனினும், முதலமைச்சர் தனது முடிவை இலகுவில் மாற்ற மாட்டார் என்ற அடிப்படையில், அன்றைய தினம் சடுதியான அறிவிப்புக்களிற்கு வாய்ப்பில்லையென்றுதான் தெரிகிறது.

தனது எதிர்கால பயணம் எப்படியிருக்குமென்பது குறித்த ஒரு கொள்கை விளக்கத்தை மட்டுமே முதலமைச்சர் அறிவிப்பார், தனிக் கட்சி அறிவிப்புக்களிற்கு வாய்ப்பில்லையென்று முதலமைச்சரிற்கு நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர். "அன்றையதினம் தனிக் கட்சி அறிவித்தல் விடுவார் என்று கதையை பரப்பி, கூட்டம் குறித்த எதிர்பார்ப்பை எகிற வைப்பதற்கு யாரோ சிலர் முயற்சிக்கிறார்கள் போலிருக்கிறது. ஆனால் அப்படியான அறிவிப்பொன்றிற்கு வாய்ப்பில்லை. இந்த செய்திகளிற்கும் எமக்கும் பொறுப்புமில்லை" யென்றார்கள்.

சரி, 24ம் திகதி வரை காத்திருக்கலாமே!

கருடன்

வெளியில் இலேசாக தூறிக் கொண்டிருந்த மழையில் நனைந்தபடி வந்தார் கருடர். உடலில் ஒட்டியிருந்த மழைத்துளிகளை சிலிர்த்து,களைந்துவிட்டுஉட்கார்ந்தார்.

"தெற்கை புரட்டிப் போடுகிறது மழை. வடக்கில் இம்முறையும் பெரும் மழையை காணவில்லை. இங்கு மழைவீழ்ச்சி குறைந்து கொண்டு செல்வதை பற்றி யாரும் அக்கறைப் படுவதாகவும் தெரியவில்லை" என சலித்துக் கொண்டார்.

"வடக்கு மாகாணசபையில் ஒரு நீர்க்கொள்கைகூட இன்னும் உருவாக்கப்படவில்லையென்பதை சுற்றிவளைத்து சொல்ல போகிறாரா?" என முந்திக் கொண்டோம்.

"இல்லை. அதைப்பற்றி பேசவில்லை. நிலத்தடி நீர் பற்றிய ஒரு செய்தியுள்ளது. இரண்டு வாரங்களின் முன்னர் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணி கூட்டம் நடந்தது. அதில் கிழக்கு எம்.பி வியாழேந்திரன், புல்லுமலை தண்ணீர் தொழிற்சாலை பற்றி நீண்ட

## கருடன் பக்கம்






பலாலி விமானநிலையத்தில் விஜயகலா மகேஸ்வரன்

# அப்பத்தை நினைத்து சிரித்த மைத்திரி, மஹிந்த... மாநகரசபையை குறிவைத்தும் ஈ.பி.டி.பி!

விளக்கமளித்திருந்தார். நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டதால், இந்தியாவில் எப்படி கிராமங்கள் பாலைவனமாகின என்பதை பற்றி சொல்லி, புல்லுமலை விவகாரத்தில் அரசாங்கம் சரியான நடவடிக்கையெடுக்க வில்லையென் றார்.

கிளிநொச்சி எம்.பி சிறிதரனும் இதைப்பற்றி பேசினார். ஆழ்துளை கிணறுகளின் அதிகரிப்பின் பின்னரே நாட்டில் வறட்சி அதிகரித்துள்ளதாக பேசினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, நிலத்தடி நீரை பாதுகாப்பதன் அவசியத்தை பற்றி பேசினார். தண்ணீர் மாபியாக்களிடமிருந்து நிலத்தடி நீரை பாதுகாப்பதை பற்றி குறிப்பிட்டு, புல்லுமலை தண்ணீர் தொழிற்சாலை தொடர்பான சகல ஆவணங்களையும் தனக்கு சமர்ப்பிக்க வேண்டுமென அதிகாரிகளிற்கு உத்தரவிட்டுள்ளார்.

மாவட்ட ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில் இந்த விவகாரம் சர்ச்சை யானபோது, அந்த திட்டத்தை ஆய்வு செய்ய நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்த குழுவின் அறிக்கையும், திட்டத்திற்கு பாதகமாகவே உள்ளதாக சொல்லப் படுகிறது"

"ம்...கிழக்கில் வேறென்ன தகவல்கள்?"

"கிழக்கு தகவலொன்றை இப்போ

**மைத்திரி, மஹிந்த தரப்புக்கள் இந்த சந்திப்பை மறுத்தாலும், சந்திப்பு நடந்தது உண்மைதான். எஸ்.பி.திசநாயக்கவின் வீட்டில் சந்திப்பு நடந்திருக்கிறது. மைத்திரி தரப்பின் முன்முயற்சியால்தான் இந்த சந்திப்பு ஏற்பாடானது. மஹிந்த, கோத்தபாய, பசில் மற்றும் கூட்டு எதிரணியின் சில முக்கியஸ்தர்கள் முதலில் அங்கு சென்றிருக்கிறார்கள்.**

தைக்கு கொசிப் பாணியில்தான் சொல்லலாம். சமயம் வரும்போது விபரமாக சொல்கிறேன். கிழக்கு மாகாணத்தில் இடமாற்றங்கள், பதவி உயர்வுகள் போன்றவற்றிற்கு உயர் பதவியிலுள்ள ஒருவரின் மனைவியைத்தான் எல்லோரும் பிடிக்கிறார்களாம். கையில காசு, வாயில தோசை பாணியில் அம்மணி யும் காரியத்தை கச்சிதமாக முடித்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இப்பொழுதுதான் விசயம் மெல்ல மெல்ல சர்ச்சையாக தொடங்கி யுள்ளது."

"தெற்கு அரசியலில் பெரும் பரபரப்பு நிலவுகிறதே. மைத்திரி, மஹிந்த சந்திப்பு என்றெல்லாம் சூடாக செய்திகள் வருகிறதே"

"ம்.. அதைப்பற்றி ஆங்கில ஊடகங் களில் நிறைய தகவல்கள் வந்து விட்டன. நமது வாசகர்களிற்காக சில விசயங்களை தருகிறோம். மைத்திரி, மஹிந்த தரப்புக்கள் இந்த சந்திப்பை மறுத்தாலும், சந்திப்பு நடந்தது உண்மைதான். எஸ்.பி.திசநாயக்கவின் வீட்டில் சந்திப்பு நடந்திருக்கிறது. மைத்திரி தரப்பின் முன்முயற்சியால்தான் இந்த சந்திப்பு ஏற்பாடானது. மஹிந்த, கோத்தபாய, பசில் மற்றும் கூட்டு எதிரணியின் சில முக்கியஸ்தர்கள் முதலில் அங்கு சென்றிருக்கிறார்கள்

பின்னர் மைத்திரி தனக்கு நெருக்கமான சிலருடன் சென்றிருக்கிறார். மைத்திரி, மஹிந்த, கோத்தபாய, பசில் மட்டும் பேச்சு அறைக்குள் இருக்க, மற்றவர்கள் வெளியில் காத்திருந்தனர்.

சம்பிரதாய நலன் விசாரிப்பின் போது, என்ன பானம் அருந்தப் போகிறீர்கள் கோப்பியா, தேனீரா என எஸ்.பி சாதாரணமாக கேட்டிருக்கிறார். மஹிந்தவுடன் உட்கார்ந்து அப்பமும், கோப்பியும் சாப்பிட்டு விட்டே மைத்திரி மற்றப்பக்கம் தாவியிருந்தார். அதன்பின் தெற்கு அரசியலில் அப்பம், கோப்பிக்கு ஒரு அரசியல் அர்த்தம் இருக்கிறது. எஸ்.பி அப்படி கேட்டதும், அறையிலிருந்த எல்லோரும் சிரித்திருக்கிறார்கள். பின்னர் க்ரீன் ரீ அருந்த முடிவெடுத்தனர்.

மைத்திரி கொலை சதியிலிருந்து மஹிந்த ஆரம்பித்து, நீண்ட நேரம் பேசியிருக்கிறார். ஜனாதிபதி கொலை சதி தகவல் வந்தும் பிரதமரும், பொலிஸ்மா அதிபரும் அதில் அக்கறை காட்டவில்லை, நாங்கள் எவ்வளவுதான் அரசியல் எதிரிகளாக இருந்தாலும் அது அரசியல்ரீதியாக மட்டுமே. இப்படி தனிப்பட்டரீதியில் குறிவைப்பதில்லை. நாட்டின் பொருளாகாரத்தை [illegible]காமை செய்ய சரியான [illegible] என ஐ.தே. [illegible] பதுக[illegible]யான குற்றச்சாட்டை

தொடர்ச்சி 8-ம் பக்கம்...



# 'ஜெஸ்ஸி'க்கும் 'ஜானு'வுக்கும் 6 வித்தியாசங்கள்!

## VTV vs 96

### த்ரிஷா...!

தமிழ் திரையுலகில் ரசிகர்களுக்குப் பிடித்த நாயகியாக பதினைந்து ஆண்டுகளைத் தாண்டித் தொடர்கிறார். இடையிடையே சர்ச்சைகள், விமர்சனங்கள், வயதானவர் என்று குறிப்பிடும் மீம்ஸ்கள் வந்தாலும் 'சாமி' மாமிக்கு இருந்த அதே சார்ம் 'விண்ணைத் தாண்டி வருவாயா' ஜெஸ்ஸிக்கு இருந்தது, '96' ஜானுவுக்கும் இருக்கிறது.

இத்தனை வருடங்களில் 50க்கும் மேற்பட்ட படங்களில் பலவிதமான பாத்திரங்களில் த்ரிஷா நடித்திருந்தாலும் அனைத்தையும் தாண்டி இதுவரை ரசிகர்கள் மனதில், 'இந்த உலகத்தில எவ்வளவோ பொண்ணுங்க இருந்தும் நான் ஏன் சார் அவளை லவ் பண்ணேன்' என்று லவ் பண்ண வைத்தது 'ஜெஸ்ஸி'தான்.

அண்மையில் வெளியாகியுள்ள '96' படத்தில் த்ரிஷா நடித்துள்ள 'ஜானு' பாத்திரம் 'ஜெஸ்ஸி'க்கு டஃப் கொடுக்கிறது. 'காதலே காதலே தனிப்பெருந்துணையே' என 2000ஸ் கிட்ஸையும் காதலில் கரைய வைக்கிறாள் 'ஜானு'. இந்த இரு பாத்திரங்களின் ஈர்ப்புக்குக் காரணம் அசால்ட்டான நடை, அதிக அலங்காரமில்லாத அழகு என புற தோற்றம் மட்டுமல்ல, இருவரின் அகத்தோற்றமும்தான். இவர்களால் கிறங்கிப் போனது கார்த்திக்கும் ராமும் மட்டுமல்ல ரசிகர்களும்தான். 'ஜெஸ்ஸி'க்கும் 'ஜானு'வுக்கும் ஒற்றுமைகள் என்ன, வித்தியாசங்கள் என்ன...

ஜெஸ்ஸிக்கு சினிமா, பாடல்கள் எல்லாம் ரொம்ப தூரம். கேளிக்கைகள் அவள் குடும்பத்துக்கு ஆகாது. குடும்ப நிகழ்ச்சிகளில், சேர்ச்களில் கிட்டார்களுடன் இசைக்கப்படும் இயேசு பாடல்கள்தான் அவளது பாடல்கள். அவள் பார்த்தது மொத்தம் ஐந்து படங்கள்தான். கார்த்திக் திரைப்பட இயக்குனராகப் போகிறேன் என்று சொல்லும்போதே அவள் கிட்டத்தட்ட முடிவு செய்துவிடுகிறாள், இது நடக்காதென்று. ஆனால், ஜானு (எ) ஜானகிதேவி சுற்றியிருப்பவர்களை தன் பாடல்களால் வசீகரிப்பவள். அவள் பாட மேடையேறினால் நண்பர்கள் தங்கள் விருப்பப் பாடல்களை கேட்பார்கள். ஜானு பாடத் தேர்ந்தெடுப்பது மென்மையான பாடல்கள் மட்டுமல்ல. 'சின்னப் பொண்ணு நான், ஒரு சிங்காரப்பூ நான்' என்று அவள் 'ஆச அதிகம் வச்சு' பாடலை அசால்ட்டாக புன்னகைத்துக் கொண்டே பாடி ராமை கிறங்கடிக்கிறாள், நம்மையும்தான். ராம் விரும்பிக் கேட்கும் 'யமுனை ஆற்றிலே' பாடலை மட்டும் பாடாமல் அவனை அலைக்கழிக்கிறாள்.



ஜெஸ்ஸி



ஜானு (எ) ஜானகிதேவி

தோற்றம், ட்ரெஸ்ஸிங் போன்றவற்றில் ஜெஸ்ஸி, ஜானு இருவருமே கிட்டத்தட்ட ஒரு மாதிரிதான். மொடர்ன் டிரஸ் என்றாலும் மிதமான வண்ணங்கள், நாகரிகமான உடைகள், குறைந்த மேக்அப் என சிம்பிளாக ஆனால், ஸ்ட்ரோங்காக நம் மனதில் நுழைகிறார்கள். ஜெஸ்ஸி வளர்ந்தது சென்னை நகரத்தில். ஜானு வளர்ந்தது தஞ்சாவூரில், என்றாலும் சிங்கப்பூர் சென்று வரும்போது சற்றே ஜெஸ்ஸியை நினைவு படுத்துகிறாள், தோற்றத்தில் மட்டும்.

ஜெஸ்ஸி, கார்த்திக்கை தனக்கு பிடித்தபின்பும் கூட அதை பெரிதாக வெளிப்படுத்துபவள் அல்ல. அவன் மீது காதல் வந்தபின்பும் கூட, அதை "உன் கூட கொஞ்ச நேரம் ஸ்பென்ட் பண்ணனும் கார்த்திக், ஏதாவது படம் போலாமா?' என்பதுதான் அவளது அதீத வெளிப்பாடு. கார்த்திக் தன்னை விட இளையவன் என்ற எண்ணம் அவளுக்குள் உண்டு, என்றாலும் அவன் மீது உரிமை எடுத்துக்கொள்ளமாட்டாள். ஆனால், ஜானு தன் வகுப்புத் தோழனான ராம் மீது தனக்கிருக்கும் ஈர்ப்பை சொல்லவில்லையே தவிர பல விதங்களில் வெளிப்படுத்துகிறாள். அவனை மிரட்டுகிறாள், அவனது தயக்கத்தை பல இடங்களிலும் அமைதியாகவே கிண்டல் செய்கிறாள். வளர்ந்து பெண் ஆன பின்பு இன்னும் வெளிப்படையாக ராம் மீது தனக்கிருந்த காதலை பேசுகிறாள்.


சென்னைக்கு வரும் ரயிலில், தனக்கே தெரியாமல் தன்னருகே பயணிக்க கார்த்திக் வருவது ஜெஸ்ஸிக்கு பெரிய மகிழ்ச்சி. வழக்கம் போல அதை காட்டிக்கொள்ளாத அவள், அந்த இரவு முழுவதும் அவனுடன் பேசுகிறாள். அவர்களுக்குள் நெருக்கம் ஏற்படுகிறது. அங்கு ஒரு முத்தம் நிகழ்கிறது. ஒரு முத்தத்திற்குப் பின்னரும் கூட காதலை ஒத்துக்கொள்ளாதவள் ஜெஸ்ஸி. 'நீ என்னை கிஸ் பண்ணீல, அதுதான் ஃபர்ஸ்ட் டைம் கார்த்திக்' என தன் ஒழுக்க எல்லையைப் பற்றி கார்த்திக்கிடம் சொல்பவள். அந்த முத்தத்தைக் கடக்க நினைப்பவள். ஜானுவோ, 'நீ இன்னும் வெர்ஜினா ராம்?' என்று வெளிப்படையாகக் கேட்டு ராமை நிலைகுலைய வைக்கிறாள். அவன் வெட்கப்படும்போது, இவள் சற்றும் தயங்காமல் 'எப்படிடா உன்னை பொண்ணுங்க விட்டாங்க, நீ ஒரு ஆம்பள நாட்டுக்கட்டடா' என்று கேட்கிறாள். ராமிடம் தன்னை வெளிப்படுத்துவதில் அவளுக்கு சற்றும் தயக்கமில்லை. ராமை தனக்கானவன் என்றே அவள் நினைக்கிறாள், பள்ளிக் காலத்திலும் திருமணமான பின்பும்.

தொடர்ச்சி 8-ம் பக்கம்...

# கடந்த வாரம் நடந்தது என்ன?

03 ஒக்ரோபர்


- வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் கூட்டம் நடைபெற்றது. மகாவலி எல் வலயத்தில் முல்லைத்தீவில் இடம்பெறும் குடியேற்றங்கள், நிலம் விடுவிப்பு குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பு கொஞ்சம் காரசாரமாகவே பேசியது. இதற்கு முந்தைய ஜனாதிபதி செயலணி கூட்டத்தில், "முல்லைத்தீவில் மகாவலி திட்டத்தில் சிங்களவர்களிற்கு காணி உரித்து வழங்கப்படவில்லை" என்று ஜனாதிபதி கூறியபோது, பதில் சொல்ல தயாராக யாரும் போயிருக்கவில்லை. ஆனால் இம்முறை கூட்டத்தில், மகாவலி அதிகாரசபையினால் வழங்கப்பட்டிருந்த அனுமதி பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்கள். இதனால் மகாவலி விவகாரத்தில் ஒரு தற்காலிக தீர்வாக, இந்த திட்டத்தில் இறுதி முடிவெட்டப்படும்வரை யாருக்கும் அனுமதி கொடுக்க வேண்டாமென ஜனாதிபதி அதிகாரிகளிற்கு கண்டிப்பான உத்தரவிட்டிருந்தார்.
- இலங்கை அரசியலில் பெரும் புயலை கிளப்பிவிட்டுள்ள நாமல் குமாரவிற்கும் கோத்தபாய தரப்பிற்கும் தொடர்புள்ளதென அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறினார்.
- வடக்கில் தொல்பொருள் முக்கியத்துவம் மிக்க இடங்களிற்கு விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி பிரமுகர்கள் திடீர் விசிற் அடித்தார்கள். முல்லைத்தீவின் குருந்தூர், வவுனியாவின் வெடுக்குநாறி மலைகளிற்கும் சென்றார்கள். இந்த குறூப் வந்தாலே ஏதோ வில்லங்கமென நினைத்தோ என்னவோ, உள்ளூர் இளைஞர்களும் அங்கு குழுமி விட்டனர். வெடுக்குநாறி மலையில் தொல்லியல் திணைக்கள அதிகாரியென தன்னை அடையாளப்படுத்திய ஒருவர், அந்த இடத்தின் தொல்லியல் வரலாற்றை திரித்து, விமல் அணிக்கு சொல்கிறார் என உள்ளூர் இளைஞர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் அங்கு சிறிது பரபரப்பு ஏற்பட்டது.




- வடமராட்சி கிழக்கில் அரச நிலத்தில் அனுமதியின்றி வாடியமைத்து மீன்பிடியில் ஈடுபடுபவர்களை 48 மணித்தியாலத்தில் வெளியேறுமாறு அறிவித்தல் ஒட்டப்பட்டது. சட்டவிரோத மீன்பிடியாளர்களை அங்கிருந்து வெளியேறுமாறு ஏற்கனவே நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அதை பொருட்படுத்தாமல் தொடர்ந்தும் தங்கியிருப்பவர்களையே வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

04 ஒக்ரோபர்

- வடக்கில் ஆவாவை அடக்க இராணுவத்தை களமிறக்க வேண்டுமா என்ற விவாதங்கள் எல்லாம் தீவிரமாக நடந்து கொண்டிருக்க, வடக்கு மிக அமைதியாகவே இருக்கிறது, பயப்படும் படியான நிலைமையெதுவும் அங்கு கிடையாதென வட மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோ தெரிவித்தார். கொழும்பில் செய்தியாளர் சந்திப்பை நடத்தி, "சிறிய குழுவாக ஆரம்பித்தவர்கள், இப்பொழுது கொஞ்சம் வளர்ந்து தமக்குள் சண்டையிட்டுகொள்கிறார்கள். இவர்களால் கொலைகள் எதுவும் நடந்ததில்லை. என்றாலும் அவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கிறோம்" என்றார்.
- வடமாகாணசபையின் 133வது அமர்வில் இம்முறை சிக்கி சின்னாபின்னமானவர் வடக்கு சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன். கடந்த மூன்று வருடங்களாக அவரது குறித்தொதுக்கப்பட்ட நிதியில் வழங்கப்பட்ட மூக்குக்கண்ணாடிகளில் முறைகேடு நடந்துள்ளதாக கடுமையான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. அன்றைய அமர்விற்கு வடக்கு சுகாதார அமைச்சர் சமூகமளிக்கவில்லை.
- யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்க துணை தூதர் றொபேர்ட் கில்ரன், வடக்கு முதலமைச்சரின் வாசஸ்தலத்திற்கு சென்று சந்தித்தார். இதன்போது, மக்கள் இயக்கமொன்றை கட்டி வளர்க்கப் போவதாக முதலமைச்சர் தெரிவித்தார். தூதரின் கருத்துக்களை கவனித்தபோது, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு மீண்டும் குறுகிய கால அவகாசம் வழங்கப்படும் வாய்ப்புள்ளதாக ஊடகங்களிடம் தெரிவித்தார் முதலமைச்சர்.




- தேசிய பொருளாதாரசபை கூட்டம் ஜனாதிபதி மாளிகையில் இரவு நடைபெற்றது. இதன்போது ஸ்ரீஷமி நிறுவன தலைவருடன் ரணில் விக்கிரமசிங்க வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக, எஸ்.பி. திஸநாயக்கா தெரிவித்தார். இறப்பர் பொருட்களை தற்போது தாங்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்வதாக அவர் குறிப்பிட்டபோதே, ரணில் கோபமாக குறுக்கிட்டதாக எஸ்.பி குறிப்பிட்டார்.
- மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் உள்ள எருவில் கிராமத்தில் 11 வயது சிறுமியொருவருக்கு தாயார் சூடு வைத்துள்ளார். இரும்பு கம்பியை காய்ச்சி முகம், கைகளில் சூடு வைத்தார். மறுநாள் பாடசாலைக்கு சென்றபோதே ஆசிரியர்கள் விடயத்தை அறிந்து மாணவியை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.



05 ஒக்ரோபர்

- புலமைப்பரிசில் பரீட்சை வெளியாகின. யாழ் இந்து ஆரம்ப பாடசாலை, சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் மாணவர்கள் தேசிய ரீதியில் இரண்டாமிடத்தை பிடித்தனர். வவுனியா, கிளிநொச்சி மாணவர்கள் மூன்றாம், நான்காம் இடங்களை பிடித்தனர்.
- வல்வெட்டித்துறை திருவிலில் வல்வெட்டித்துறை நகரசபையால் அமைக்கப்பட உத்தேசிக்கப்பட்ட பொது நினைவுத்தூபிக்கு எதிர்ப்பு கிளம்பியது. ஆரம்ப நிகழ்வில் குழப்பம் ஏற்பட்டு கைகலப்பு வரை சென்றது. நினைவுத்தூபி அமைப்பது தொடர்பில் பொலிசார் வழக்கு தாக்கல் செய்ததன் அடிப்படையில், நீதிமன்ற கட்டளையும் வழங்கப்பட்டது.
- நொச்சியாகம பகுதியை சேர்ந்த ஒருவரின் சிறுநீரகத்தில் இருந்த கற்கள் அநுராதபுரம் வைத்தியசாலையில் அகற்றப்பட்டது தொடர்பான செய்திகள் இன்று வெளியாகியிருந்தன. அவரது உடலில் 2 கிலோகிராம் நிறையுடைய கற்கள் அறுவை சிகிச்சைமூலம் அகற்றப்பட்டிருந்தது.



- குருநாகல் மெல்சிரிபுர பண்ணையில் உணவகம் ஒன்றை அமைக்க முயன்ற வர்த்தகரிடம் இருந்து லஞ்சம் பெற்றுக்கொள்ள முயன்ற தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் தலைவர் கைதாகியுள்ளார். இ.தொ.க தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் நெருங்கிய உறவினர் இவர். மத்திய மாகாணசபை தேர்தலில், பொதுஜன பெரமுனவின் கூட்டில், முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கும்படி ஆறுமுகன் தொண்டமானிடம் பேச்சு நடத்தப்பட்டதாக முன்னதாக செய்திகள் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.
- பிரித்தானியாவின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களிற்கான அமைச்சர் மார்க் பீல்டக்கும், எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனுக்குமிடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றது. இனப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், அது செய்யப்படாவிட்டால் நாடு எதிர்கொள்ளவுள்ள அபாயத்தையும் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்



06 ஒக்ரோபர்

- நாட்டில் அரசியல்கைதிகள் என்று யாருமே இல்லையென கூறினார் நீதியமைச்சர் தலதா அத்துகோரல. கண்டியில் சட்டத்தரணிகள் சங்கத்துடன் நடந்த கலந்துரையாடலில் இதனை குறிப்பிட்டார்.
- போதைப்பொருட்கள் வடக்கு மக்களின் அன்றாட உணவைப் போல ஆகி விட்டது. மலையகத்தில் அப்படியான நிலைமையை ஏற்படுத்தக்கூடாது என்றார் வடிவேல் சுரேஷ் எம்.பி.
- அரசியல்கைதிகளை விடுவிக்கக் கோரி யாழ் நகரில் துண்டறிக்கைகள் விநியோகிக்கப்பட்டன.


07 ஒக்ரோபர்

- மலையகத்தில் பெய்யும் கடும் மழையால் களனி

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

கங்கையின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது. களனி கங்கை ஆற்றோரமுள்ள மக்களிற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

- தியவன்ன ஓயாவின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால், நாடாளுமன்றத்திற்குள் வெள்ளம் நுழையாமல் மண்மூடைகள் அடுக்கப்பட்டன. இராணுவத்தினர் இந்த பணியில் ஈடுபட்டனர்.



- கடந்த அரசாங்கம் சட்டவிரோதமாக பெற்றுக்கொண்ட கடன், தற்போது அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செய்ய முடியாமல் இடையூறை ஏற்படுத்தி வருவதாக அமைச்சர் ராஜித சேனாரத்தின குறிப்பிட்டார்.
- புலமைப்பரிசில் பரீட்சையே பிள்ளைகள் எதிர்கொள்ளும் ஒரேயொரு தடைதாண்டல் என பெற்றோர் நம்புவதே, பிள்ளைகள் அதிக சிரமத்தை எதிர்கொள்ள காரணம் என்றார் ஜனாதிபதி.
- இலண்டனிற்கு விஜயம் செய்த வடக்கு ஆளுனருக்கு எதிராக அங்குள்ள தமிழ் மக்களால் ஆர்ப்பாட்ட போராட்டம் நடத்தப்பட்டது.

**08 ஒக்ரோபர்**

- நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற செயலக விசாரணை பிரிவிற்கு வாக்குமூலம் வழங்க சென்ற போது கைது செய்யப்பட்டார். கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் அவர் முற்படுத்தப்பட்டபோது, பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.
- மத்திய மாகாணசபையின் பதவிக்காலம் முடிவடைந்தது.
- பயங்கரவாத விசாரணைப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வா மற்றும் ஊழலுக்கு எதிரான படை அணியின் பணிப்பாளர் நாமல் குமார ஆகியோர் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜராகினர். இவர்கள் அனுமதியின்றி வெளிநாடு செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது.
- அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரி யாழ் பல்கலைகழகம், அச்சுவேலி பகுதிகளில் போராட்டங்கள் இடம்பெற்றன.
- சீஷெல்ஸ்க்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரி பாலவிற்கு, அந்த நாட்டு ஜனாதிபதி டெனி போ இராப்போசன விருந்தளித்தார்.

**09 ஒக்ரோபர்**

- அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ் பல்கலைகழகத்திலிருந்து அநுராதபுரத்தை நோக்கி மாணவர்கள் நடைபயணத்தை ஆரம்பித்தனர்.
- 20வது அரசியலமைப்பு திருத்தத்தை நிறைவேற்ற வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரம்பான்மை அவசியம் என உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.
- தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில் நிதியை 500 ரூபாவில் இருந்து 750 ரூபாவாக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.
- அமெரிக்க டொலர் ஒன்றுக்கான விற்பனை மற்றும் கொள்வனவு பெறுமதிப்படி இலங்கை ரூபா மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 172.34 ரூபாவாக பதிவாகியுள்ளது.
- அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட பொருத்தமானவர் பஸில் ராஜபக்சவே என கோத்தபாய தெரிவித்தார்.

**10 ஒக்ரோபர்**

- அரசியலமைப்பு நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் விபரங்கள் சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த வாரத்திற்குள் அவர்கள் நியமிக்கப்படுவார்கள் என சபாநாயகர் அலுவலகம் அறிவித்தது.
- இழப்பீடுகளிற்கான அலுவலக திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது.
- இராணுவ வீரர்கள் உயிர்த் தியாகம் செய்து மேற்கொண்ட முன்னோடிப் பணிகள் காரணமாகவே நாட்டில் தற்போது நிரந்தர சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப முடிந்துள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மஹேஸ் சேனாநாயக்க தெரிவித்தார்.




அனார்கலி

கிழக்குமாகாணத்தின் முகவெற்றிலை என வர்ணிக்கப்படும் முக்கிய மாநகரமாகக் கல்முனை மாநகரம் திகழ்கின்றது. முஸ்லீம்கள், தமிழர்கள் செறிந்து வாழும் ஏன் சிறுதொகையில் சிங்களவர்களும் சேர்ந்துவாழும் எடுத்துக்காட்டான முக்கிய வர்த்தக மாநகரமாகவும் இது திகழ்கின்றது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடைபெற்ற பின்னர் மாநகர ஆட்சியை புதிய சபை பொறுப்பேற்றிருக்கின்றது.

41 உறுப்பினர்கள் (தமிழ், முஸ்லீம்) மாநகரசபைக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ளதுடன் முஸ்லிம்காங்கிரஸைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் மேயராகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த காத்தமுத்து கணேஷ் பிரதி மேயராகவும் தெரிவுசெய்யப்பட்டு சபை நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றது.

இந்த சபையில் எதிரணி உறுப்பி னர்களென சாய்ந்தமருதுக்கு தனி உள்ளூராட்சிசபை பெறுவதையே முக்கிய நோக்காகக் கொண்டு தேர்தலில் களமிறங்கி தோடம்பழ சின்னத்துடன் தெரிவுசெய்யப்பட்ட சாய்ந்தமருது சுயேச்சை அணி உறுப்பினர்கள் ஒன்பது பேரும், இலங்கை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்களும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த ஐந்து பேரும் இன்னும் சில கட்சி உறுப்பினர்களும் இருந்து வருகின்றனர்.

இந்நிலையில் சபையின் ஆரம்பகால மாதாந்த அமர்வு முதல் இதுவரை இடம்பெற்ற மாதாந்த சபை அமர்வுகளில் ஆளும் தரப்பினருக் கும் எதிரணியினர் எனப்படு வோருக்குமிடையே சுமூகமான நிலைமை காணப்படவில்லையென் பதே பலரது அபிப்பிராயமாகும். இவ்வாறு மாதாந்த அமர்வுகளில் தாக்கங்களும், வாதப்பிரதிவாதங்களும், களேபரமும் வழக்கமான ஒன்றாகவே தொடர்ந்து வருகின்றது.

இதனால் சிலசமயங்களில் மாதாந்த அமர்வுகளை இடைநடுவில் ஒத்தி வைத்தும் முடிவுறுத்தியும் மேயர் றகீப் நிலைமைகளை சமாளிக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டார்.

இந்நிலையில் நிதிக்குழு தெரிவு, இடைக்கால பட்ஜட் தயாரிப்பு, மாநகரசபை குத்தகைக்கு விட்ட அமான வங்கியை உரிய இடத்தி லிருந்து எழுப்பி தனியார் பஸ் தரிப்பிடமாக்குதல் போன்ற எதிரணி யினரின் கோரிக்கைகள் அமர்வுகளில் சர்ச்சைகளையும் வாதப் பிரதி வாதங்களையும் ஏற்படுத்தின.

இதன் உச்சக்கட்டமாகக் கடந்த மாதம் (18.09.2018) இடம்பெற்ற சபை அமர்வில், மாதாந்தசபையின் வரவு

தொடர்ச்சி 23-ம் பக்கம்...



நீர்கொழும்பில் நடந்த திருமண நிகழ்வொன்றில் மைத்திரி, மஹிந்த மணமக்களிற்கு சாட்சி கையொப்பமிட்டனர்.

4-ம் பக்க தொடர்ச்சி...

சுமத்தியிருக்கிறார்.

ஜனாதிபதி கொலை சதியின் பாரதூரதன்மை குறித்து கோத்தபாய பேசியிருக்கிறார். பின்னர் பேசிய பசில், கூட்டரசு இருக்கும்வரை தம்மால், ஜனாதிபதியை ஆதரிக்க முடியாது என்றும், பொது எதிரணிக்குள் கலந்துரையாடல்கள்நடத்தி, கட்சியின் பல மட்டங்களிற்குள் பேசியே ஒரு முடிவை எடுக்கலாமென்றார்.

கூட்டரசில் இருந்து வெளியேறுவது பற்றிய உறுதியான தீர்மானமொன்றை எடுங்கள், அதன்பின் சேர்வது பற்றி சிந்திப்போம், பேசுவோம் என மஹிந்த இறுதியாக குறிப்பிட்டிருக்கிறார். பின்னர் அனைவரும் ஒன்றாக இரவு உணவருந்தியுள்ளனர்.

அதன்பின்னர், மஹிந்தவும், பசிலும் ஒரு கலந்துரையாடல் நடத்தியிருக்கிறார்கள். அது இரகசியமாக நடந்துள்ளது. அந்த விபரங்கள் வெளியாகவில்லை. ஆனால், பொது எதிரணியில் அடுத்த கட்ட நகர்வுகள் குறிப்பாக மைத்திரி தரப்புடன் பேசுவது, காய்களை நகர்த்துவது எல்லாம் பசிலின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது.

இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பது பற்றி ஒன்றிணைந்த எதிரணி பிரமுகர் தினேஷ் குணவர்த்தன, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் செயலாளர் மஹிந்த அமரவீரவிற்கு இடையிலும் ஒரு கலந்துரையாடல் நடந்தது. ஆக, கூட்டரசின் தேனிலவு முடியும் தறுவாயில் நிற்கிறது போலத்தான் தெரிகிறது. இப்போது நடக்கும் பேச்சுக்களால் உடனடியாக ஆட்சி மாற்றமொன்று நடக்குமென்று உறுதியாக சொல்லவும் முடியாதுதான். ஆனால் அதற்கான வாய்ப்புக்கள் உருவாகி வருகின்றன"

"ஓகோ... தெற்கு அரசியல் இனி சூடாகத்தான் இருக்கப் போகிறதென் கிறீர்கள்... சரி, வடக்கு பக்கம் என்ன தகவல்கள்?"

"வடக்கு அரசியல் களத்தில் இந்த வாரம் அவ்வளவு பெரிய திருப்பங்கள் இல்லை. சொல்லும்படியாக ஒரு தகவல்தான் உள்ளது. அது யாழ் மாநகரசபை சம்பந்தமானது"

"சொல்லுங்கள்"


"யாழ் மாநகரசபையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆட்சியமைத்த போது, ஈ.பி.டி.பியின் ஆதரவு பெற்றதாக விமர்சனங்கள் எழுந்திருந்தன. ஆனால் பின்னர் நடந்த சம்பவங்கள் அப்படியான இணக்கப்பாடுகள் ஏற்பட்டதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்து வருகின்றன. அப்படியான இன்னொரு சம்பவம் நடக்கவிருக்கிறது.

விரைவில் யாழ் மாநகரசபையின் வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படும். அப்போது வரவு செலவு திட்டத்தை எதிர்ப்பதென ஈ.பி.டி.பி உயர்மட்டம் முடிவு செய்துள்ளதாக தெரிகிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் முடிவுகளை, தமிழ் தேசிய மக்கள் முன்னணி எதிர்க்கும் என்ற வழமையின் அடிப்படையில், ஈ.பி.டி.பி இந்த முடிவை எடுத்திருப்பதாக தெரிகிறது. ஈ.பி.டி.பியும், முன்னணியும் எதிர்த்தால் வரவு செலவு திட்டம் தோல்வியடைய வாய்ப்புள்ளது என்ற ரீதியில் ஈ.பி.டி.பியின் கணக்குள்ளது. இப்போதைக்கு ஈ.பி.டி.பியின் உயர் மட்டத்தில் பேசப்பட்ட விசயமாக மட்டும் இது இருக்கிறது.

இந்த வாரம் இவ்வளவுதான் தகவல்கள். அடுத்த வாரம் வேறு தகவல்களுடன் வருகிறேன்" என்றபடி பறந்து சென்றார். ●



கார்த்திக் - ஜெஸ்ஸி



ராம் - ஜானு

5-ம் பக்க தொடர்ச்சி...

ஆனால், ஜெஸ்ஸி கார்த்திக்கின் கோட்டுக்குள் வருவதும் போவதுமாக அலைபாய்கிறாள். அவனையும் அந்தப் பதற்றத்திலேயே வைக்கிறாள்.

ஒரு ஊடல் வரும்போது, கார்த்திக் தன்னை தவிர்க்கிறான் என்ற உணர்வு வரும்போது, "இது முடிஞ்சு போச்சு கார்த்திக், திஸ் இஸ் ஓவர்" என்று மிகப்பெரிய முடிவை அவசரமாக, ஆனால் உறுதியாக எடுத்தவள் ஜெஸ்ஸி. அதன் பின்னர் கார்த்திக் பண்ணும் நூற்றுக்கணக்கான ஃபோன் கோல்களையும் எஸ்.எம்.எஸ்களையும் நிராகரிப்பவள். ஆனால், ஜானுவோ சண்டை போட்டுவிட்டுப் போனாலும், அவளே ராமுக்கு ஃபோன் பண்ணி, "எங்க இருக்க ராம், ரொம்ப தூரமா போய்ட்டியா?" என்று கேட்பவள். மீண்டும் வந்து பேசுபவனை ஏற்பவள்.

ஜெஸ்ஸிக்கு நகைச்சுவை உணர்வு மிகக் குறைவு. கார்த்திக்குடன் வரும் கணேஷ் சார் பேசுவதைக் கேட்டு சிறிதே புன்னகைப்பவள். 'அப்பா கேட்டா உன்னை தம்பி மாதிரின்னு சொல்லிக்கலாம்' என்ற மெல்லிய நகைச்சுவைதான் ஜெஸ்ஸிக்கு உள்ளது. ஆனால் ஜானு, காமெடி சென்ஸில் கலக்குபவள். ராம் கேட்ட பாடலை பாடாமல் அவனை படுத்துவதிலும், 'அண்ணியாரே' என்று கூறும் தோழியிடம் (தேவதர்ஷினி நடித்த பாத்திரம்), "நாத்தனாரே... நீங்க மெதுவா நடந்து போய் அந்த கோட்டை தொட்டுட்டு வாங்க" என்று சிரித்துக் கொண்டே தானும் ராமும் தனியாகப் பேசுவதற்காக அவளை அனுப்புவதிலும் அவளது நகைச்சுவை உணர்வு வெளிப்படுகிறது.

இருவருமே சூழ்நிலையால் காதலனை மணக்க முடியாமல் வேறு ஒருவரை மணந்தவர்கள், இருவரின் திருமணத்தின் போதும் அங்கு அவர்களின் காதலர்கள் இருந்தார்கள். ஜெஸ்ஸி, தன் தந்தை முடிவெடுத்து செய்த முதல் திருமணத்தை தைரியமாக நிறுத்துகிறாள், அத்தனை பேர் முன். ஆனால் அடுத்த முறை அவளே முடிவெடுத்து வேறு ஒருவரை மணக்கிறாள். ஜானுவோ, தன் திருமணத்தை நிறுத்த ராம் வருவானா என்று மனதிற்குள் எதிர்பார்த்துவிட்டு வேறு வழியில்லாமல், இருக்கிறானா இல்லையா என்று தெரியாத ஒருவனை எப்படி நம்புவது என்று திருமணம் முடிக்கிறாள்.

ஜெஸ்ஸி, ஜானு இருவருமே வசீகரிக்கும் தேவதைகள்தான். ஜெஸ்ஸி, வெளிப்படுத்துவது கொஞ்சம்தான், ஆனால். அவள், எந்த முடிவிலும் உறுதியானவள். அவள் ஒரு சான்ஸ்தான் தருவாள். ஜானு மனதை வெளிப்படுத்துகிறாள், ஆனால் உள்ளுக்குள் உண்மையில் சற்று பயம் கொண்டவள், ஆனால் எத்தனை முறையும் காதலுக்காக திறந்திருப்பவள். ●



# “முதலமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்”

## வி.மணிவண்ணன் நேர்காணல்

என்.நிதர்ஷன்

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன். தற்போது அரசியலில் பரபரப்பாக கவனிக்கப் பட்டு வரும் இரண்டு வழக்குகளில் தொடர்புபட்டவர். யாழ் மாநகரசபை உறுப்பினராக இருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் இடைக்கால தடைவிதிக்கப்பட்டவர், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் இரட்ணஜீவன் கூலை அச்சுறுத்திய குற்றச்சாட்டிலும் வழக்கை சந்தித்து வருகிறார். ஒரு முன்னிரவு நேரம் அவரது அலுவலகத்தில் சந்தித்து பல்வேறு விடயங்களை பற்றியும் அவருடன் பேசினோம்.

**கேள்வி: நிறைய வாக்குறுதிகள், எதிர்பார்ப்புக்களுடன் யாழ் மாநகர சபைக்குள் நுழைந்தீர்கள். தற்போது உங்களிற்கு இடைக்கால தடைவிதிக்கப்பட்டுள்ளதே?**

**வி.மண்வண்ணன்:** நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 2020 ஆம் ஆண்டு யாழ் நகரத்தை எப்படி மாற்றியமைப்போம் என்று தேர்தல் விஞ்ஞாபனமொன்றை வெளியிட்டு பிரச்சாரத்தை செய்திருந்தோம். ஆனால் ஆட்சி எங்களிடம் கிடைக்கவில்லை. ஆனால் அதற்குப் பிறகும் எங்கள் திட்டங்கள் பரவலாக மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றதென்று அறிந்த வகையில் எங்களுடைய திட்டங்களை முன்னெடுக்க தயாராக இருந்தோம்.

எனினும் நாங்கள் கொடுக்கின்ற திட்டங்களை மாநகரசபையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஆளுங்கட்சி தயாராக இருக்கவில்லை. அவர்கள் நாங்கள் எதனைச் சொன்னாலும், எதனைச் செய்தாலும் அவற்றையெல்லாம் உதாசீனப்படுத்தி தடுத்து நிறுத்தும் வகையிலையே செயற்பட்டனர். நான் ஒரு வீதியைத் திருத்தவோ அல்லது ஒரு மின்குமிழ் வாங்கிக் கொடுத்தாலும் அதனைப் போட மாட்டார்கள். இதனை சபை நடவடிக்கைகளின் போது நாங்கள் பகிரங்கமாகவே தெரிவித்திருக்கின்றோம்.

அவற்றை செய்வதால் எங்களுடையதோ அல்லது எங்கள் கட்சியினுடையதோ பெயர் வந்துவிடும் என்பதால் தடுத்திருந்த போதும் அந்தத் தடைகளையும் தாண்டி சபையின் மராமத்துக்குழுவின் தலைவராக இருந்த அடிப்படையில் எனக்கிருக்கக் கூடிய அதிகாரங்களைப் பயன்படுத்தி சில வேலைத் திட்டங்களை நகர்த்த முற்பட்ட போதும் ஆளுந்தரப்பு தடைபோட்டுக் கொண்டிருந்தது.

இதற்கு மேலாக ஒரு கட்டத்தில் என்னை வெளியேற்றுவதற்கும் வழக்குத் தாக்கல் செய்து இடைக் காலத் தடையையும் எடுத்து வைத் திருக்கின்றார்கள். அதனடிப்படையில் தான் என்னையும் வெளியேற்றி யிருக்கின்றனர்.

**தீபம்: ஆளுங்கட்சியினர் உங்களை ஏன் வெளியேற்றிருப்பதாக கருதுகின்றீர்கள்? மாநகரசபை எல்லைக்குள் வாழவில்லையென்பது ஒரு நியாயமான வாதமில்லையா?**

**வி.மண்வண்ணன்:** மாநகரசபையில் நாங்கள் மக்களுக்கான திட்டங்களை முன்வைத்து நீதியாக நியாயமாக நேர்மையாகச் செயற்பட்டு வருவதாலும் ஆளும் தரப்பின் மோசடிகளை அம்பலப்படுத்தியதாலும் என்னை வெளியேற்ற வேண்டுமென்று நோக்கிலேயே வழக்கும் தொடுக்கப்பட்டது.

ஆனால் என்னைப் போல் பலரும் மாநகரசபைக்குள் வாக்குரிமை இல்லாத சபையில் உறுப்பினராக இருக்கின்றனர். ஆளுந்தரப்பிலேயே இருக்கின்றனர். அவ்வாறு இருந்தாலும் அவர்களை எல்லாம் விட்டு விட்டு, எங்கள் கட்சியை முடக்க என்னை குறிவைத்துள்ளனர்.

**தீபம்: மாநகரசபை எல்லைக்குள் வாழாதவர்கள் ஆளந்தரப்பில் சபைக்குள் இருப்பதாக சொல்கிறீர்கள். அவர்களிற்கு எதிராக நீங்கள் சட்ட நடவடிக்கையிலீடுபடுவீர்களா?**

**வி.மண்வண்ணன்:** நாங்கள் கட்சி அரசியலை அல்லது கீழ்த்தரமான அரசியலை முன்னெடுப்பதற்கு தயாராக இல்லை. அங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மக்களால்தெரிவு செய்யப்பட்டவர்கள்.

கடந்த காலங்களில் எத்னையோ மாநகர முதல்வர்கள் வெளியில் இருந்து வந்தர்கள்தான். யாழ்ப்பாணத்தின் தலையாக இருக்கக் கூடிய யாழ் மாநகரத்தை ஆளுகின்ற ஒருவர் சிறப்பான ஆளுமை மிக்க ஒருவராக இருக்க வேண்டுமென்பது எல்லாக் கட்சிகளுடையதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

கடந்த காலங்களில் இதே தமிழரசுக் கட்சி மாமனிதர் ரவிராஜை கொண்டு வந்திருந்தது. அவர் அப்போது மாநகரத்திற்குள் வாக்குரிமையை வைத்திருக்கவில்லை. அவர் கொழும்பில் வாழ்ந்து வந்தவர். சாவகச்சேரியை பிறப்படமாகக் கொண்டவர். அதேபோல சிவபாலன் கொழும்பில் வாழ்ந்து வந்தவர். யோகேஸ்வரன் கொழும்பில் வாழ்ந்து வந்தவர். அவருக்கும் யாழ்ப்பாணத்தில் எந்தப் பதிவுகளும் இல்லை.

ஒரு முக்கிய சபையின் முதல்வராக வர வேண்டியவர் தகுதியானவராக இருக்க வேண்டுமே தவிர நிச்சயமாக அவர் அதற்குள் இருக்க வேண்டும் என்றோ அதற்குள் இருந்தால் தான் போட்டியிட முடியுமென்றோ எந்தவொரு கட்சியுமே இதுவரையில் பார்க்கவில்லை.

**தீபம்: சமகாலத்தில் இரண்டு வழக்குகளை சந்திக்கிறீர்கள். அடுத்தது தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் ரட்ணஜீவன் கூல் உங்கள் மீது தொடர்ந்த வழக்கு. இப்பொழுது இணக்கசபைக்கு மாற்றப்பட்டுள்ளது. அங்கு தீர்க்கப்பட வாய்ப்புள்ளதா?**

**வி.மண்வண்ணன்:** தேர்தல் நடந்து கொண்டிருந்த நேரத்தில் பக்கச்சார்பாக இருக்கக்கூடாத ஒருவர் எனக்கு வாக்களிக்க வேண்டாமென மக்களிடம் பத்திரிகை மூலம் கோரிக்கை விட்டார். எந்தவொரு ஆணைக்குழு உறுப்பினரும் செய்யாத ஒரு வேலையை இவர் செய்தார்.

நான் மாநகர முதல்வர் வேட்பாளராக வரத் தகுதியற்றவர் என்று ஒரு பத்திரிகையில் எழுதுகிறார். ஏனெனில் தான் எனக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்திருப்பதாகவும் கிரிமினல் குற்றச்சாட்டுடைய ஒருவர் வரக்கூடாதென்றும் எழுதியிருந்தார்.

இதற்கு மேலாக எனக்கு எதிராக ஒரு வழக்கு தாக்கல் செய்யப் பட்டிருக்கின்றது. அந்த வழக்கீட்டின் பிரதியை தமிழரசுக் கட்சியினுடைய சட்டத்தரணி மாகாணசபை உறுப்பினராகவும் இருக்கும் ஒருவர் தன்னுடைய பெயரில் அந்தப் பிரதியை எடுத்திருக்கின்றார். அவருக்கும்; இந்த வழக்கிற்கும் என்ன சம்மந்தம்? இந்த வழக்கீட்டின் பிரதியை எடுப்பதாயின் இந்த வழக்கில் அக்கறையுடைய ஒருவர் தான் எடுக்க வேண்டும்.

அதிலும் இந்த வழக்கில் என் சார்பில் அல்லது இரட்ணஜவன் கூல் சார்பில் தான் அந்தப் பிரதி எடுக்கப்பட வேண்டும். ஆனால் என் சார்பில் அவரை சட்டத்தரணியாக நான் நியமிக்கவில்லை. அவர் யார் சார்பில் இந்தப் பிரதியை எடுத்திருக்கின்றார் என்றால் கூல் சார்பிலேயே எடுத்திருக்கின்றார். ஆகவே அவர்களும் வழக்கின் பின்னணியில் இருக்கிறரர்கள் என்பது தெரிகிறது.

இந்த வழக்கை இணக்க சபையில் தீர்க்க வேண்டுமாக இருந்தால் முறைப்பாட்டாளர் இந்த வழக்கை விலக்கிக் கொள்கின்றேன் என்று சொன்னால் மட்டும் தான் இணக்கப்பாடாக முடிவுறுத்தப்படும். இந்த வழக்கை நான் எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கிறேன். மத்தியஸ்தர் சபையில் அவர் வழக்கை வாபஸ் பெறாவிட்டால் நிச்சயமாக மீண்டும் வழக்கு நீதிமன்றத்திற்குத்தான் வரும்.


**தீபம்: உங்கள் மாநகரசபை உறுப்புரிமைக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதையடுத்து உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யப் போவதாக ஒரு தகவலுள்ளதே?**

**வி.மண்வண்ணன்:** நான் உறுப்பினர் பதவியில் இருந்து விலகிக் கொள்வதாக கட்சிக்கு அறிவித்திருந்தேன். அதனை கட்சியின் தலைமைப்பீடம் ஏற்றுக் கொள்ளவில்லை. மாநகரசபையில் என்னுடைய செயற்பாடுகள் இடை நிறுத்தப்பட்டிருக்கின்ற காரணத்தாலும் வழக்கு நடவடிக்கைகள் நீண்டு செல்கின்ற பட்சத்தில் எங்களுடைய கட்சியின் உறுப்புரிமை அங்கு பாதிக்கப்படலாம் என்பதால் வேறு ஒருவரை நியமிப்பதற்கு ஏதுவாக நான் விலகிக்கொள்ளும் நிலைப்பாட்டையே கட்சித் தலைமைப் பீடத்திற்குத் தெரிவித்திருந்தேன்.

ஆனால் தலைமைப்பீடம் அந்த முடிவை ஏற்க மறுத்தது. நான் தொடர்ந்தும் மாநகரசபையிலே இருக்க வேண்டிய அவசியம் இருப்பதாகவும் இத் தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்து பார்க்கலாம் எனத் தீர்மானித்ததன் அடிப்படையில் மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு வெளியாகும் வரை தொடர்ந்தும் மாநகர சபைக்குள் இருப்பதென்ற முடிவை நாங்கள் எடுத்துள்ளோம்.

**தீபம்: மாநகரசபையின் கடந்த**

தொடர்ச்சி 24-ம் பக்கம்...



# சாம்பார் நம் உணவுப் பாரம்பர்யத்தின் உன்னதம்!

இரா. சந்தில்குமார்

**சா**ம்பார்... நம் பாரம்பர்ய உணவு, விருந்துகளில் பிரதானமான சேர்மானம். ருசிக்காகவே இதைத் தேடி ஓடுபவர்களும் உண்டு; 'இன்டைக்கும் சாம்பாரா?' என்று சலித்துக்கொள்பவர்களும் உண்டு. ஆனாலும், தவிர்க்கவே முடியாதது சாம்பார். பாரம்பர்யப் பெருமை, சுண்டியிழுக்கும் ருசி அனைத்தையும் தாண்டி இதன் மருத்துவ குணம் இன்றைக்குப் பல நாட்டு உணவியலாளர்களையும், மருத்துவர்களையும் சாம்பாரை ஆச்சர்யத்துடன் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. குறிப்பாக, குடல் புற்றுநோயைத் தடுக்கும் ஆற்றல் இதற்கு உண்டு என்கிற காரணம்.

காலம் காலமாக வீட்டிலிருக்கும் பெரியவர்கள், பலவிதமான நோய்களைத் தீர்க்கும் சக்தி சாம்பாருக்கு உண்டு' என்று சொல்லி வந்திருக்கிறார்கள். அண்மையில், மணிபால் பல்கலைக்கழகம் சாம்பாரை வைத்து ஓர் ஆய்வையே மேற்கொண்டு, அது உண்மைதான் என்று சொல்லியிருக்கிறது. 'சாம்பார், நம் குடல் பாதையை பாதிப்பதில்லை. அதோடு, புற்றுநோயை உருவாக்கும் கார்சினோஜென் (Carcinogen) என்கிற மூலப்பொருளைத் தடுக்கும் ஆற்றலும் அதற்கு உண்டு' என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.'இந்த ஆற்றலைத் தருவது சாம்பார் பொடியில் சேர்க்கப்படும் மூலப் பொருள்கள்தான்' என்றும் குறிப்பிடுகிறார்கள்.

மும்பையிலிருக்கும் டாடா மெமோரியல் இன்ஸ்டிட்யூட்ன் புற்றுநோய் ஆய்வு நிறுவனம் (Cancer Research Institute), இந்திய உணவுகள் குறித்து நடத்திய ஓர் ஆய்வில், நம் உணவுகளில் சேர்க்கப்படும் மஞ்சளுக்கு புற்றுநோயைத் தடுக்கும் சக்தி உண்டு என்பது தெரிய வந்திருக்கிறது. சாம்பாரில் சேர்க்கப்படும் மூலப் பொருள்களில் மஞ்சள் மிக முக்கியமானது.

**எதையும் காரண, காரியத்தோடு செய்து வந்திருக்கிறார்கள் நம் முன்னோர். நம் உணவுப் பாரம்பர்யத்தில் சாம்பாரை முதன்மைப் படுத்தியதற்கு அதன் மருத்துவ குணமும் காரணம். இது குறித்து விரிவாகப் பேசுகிறார் மருத்துவர் கு.சிவராமன்.**

"வரலாற்றின் அடிப்படையில் பார்த்தாலே, நம் உணவுமுறை காலங்காலமாகச் செதுக்கப்பட்டு வந்திருக்கிறது என்பது புரியும். முதலில் நாம் பசிக்காக மட்டுமே சாப்பிட்டோம். பிறகு கிடைத்ததை உண்டது போய், ருசியைத் தேடி மனம் ஓடியது. 'இந்தக் கனியின் சுவை இப்படி இருக்கும், இந்தக் கிழங்கின் சுவை இப்படி இருக்கும்' எனப் புரிந்துகொண்டு நமக்குப் பிடித்த ருசியில் சாப்பிடப் பழகிக்கொண்டோம். மனிதன் நாகரிகமடைந்த காலத்தில், பசியையும் ருசியையும் தாண்டி உணவை நோய்க்கான மருந்தாகவும், உடலை உறுதிப்படுத்தக்கூடியதாகவும் இருக்கும்படி பார்த்துக்கொண்டோம்.

அடுத்ததாக, வெயில், மழை, குளிர் போன்ற சீதோஷ்ண நிலையையொட்டியும் மலை, காடு, சமவெளி போன்ற வாழும் நிலங்களுக்கு ஏற்றவாறும் உணவுமுறை மாறியது. படையெடுப்புகளின் மூலமாக சில வாசனையூட்டும் சுவையூட்டும் பொருள்களும், பிற இன மக்களின் உணவுகளும் நம் உணவோடு சேர்ந்துகொண்டன. இப்படித்தான் நம் உணவு கலாசாரம் கட்டமைக்கப்பட்டது. உணவுகள் அனைத்தும் மக்களின் தேவை சார்ந்தும், உடல் ஆரோக்கியம் சார்ந்தும் மட்டுமே உருவாக்கப்பட்டன. உணவால் மனிதர்களுக்கோ மற்ற உயிரினங்களுக்கோ எந்தவிதக் கோளாறுகளும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் மிகுந்த கவனமாக இருந்தார்கள் நம் முன்னோர்.

அந்தக் காலத்தில், தேவையற்ற உணவு, குப்பை உணவு என எதையும் பிரித்துச் சொன்னதில்லை. கடந்த 25 ஆண்டுகளில்தான் நம் உணவுமுறையில் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. மாற்றம் என்பது வரவேற்கக்கூடியது. அந்த மாற்றம் பழையநிலையைக் கொஞ்சம் மேம்படுத்துவதாக இருக்க வேண்டும். இப்போது நம் உணவு முறையில் ஏற்பட்டிருக்கும் மாற்றம், சுவையையும் குதூகலத்தையும் மட்டுமே பிரதானமாக முன்னிறுத்துகிறது. ஆரோக்கியத்துக்கான விஷயமாக எதுவும் இல்லை. அதனால்தான் ஏராளமான நோய்கள் பெருகிவிட்டன."

இப்போது இளைஞர்களால் விரும்பிச் சாப்பிடப்படுவது பீட்சா. அதில் ஆரோக்கியத்துக்கான அம்சம் என்று எதுவுமே இல்லை. சுவைக்காகவும் வயிற்றை நிரப்பவும்தான் அது உதவுகிறது. அந்த மாதிரியான



உணவுகளை செரிமானம் செய்ய நம் உடலில் உள்ள ஜீன்கள் பழகியிருக்காது. ஆனால், நாம் பல வருடங்களாகச் சாப்பிட்டுவரும் இட்லி அப்படி அல்ல. சாம்பார், ரசம், மோர் என ஒவ்வோர் உணவிலும், நாம் சாப்பிடும் உணவு வரிசையிலும்கூட ஒரு மருத்துவ அறிவியல் இருக்கிறது.

'பஃபே' என்ற பெயரில் எந்த உணவை, எதற்காகச் சாப்பிடுகிறோம் என்று தெரியாமலேயே சாப்பிடுவதும், எதற்கடுத்து எதைச் சாப்பிட வேண்டும் என்ற தெளிவில்லாமல் சாப்பிடுவதும்தான் நடக்கிறது. உதாரணமாக, சாப்பாட்டுக்கு முன்னர் சூப் அருந்தும் பழக்கம் பெருகிவருகிறது. குளிர்ப் பிரதேசங்களில் வாழும் மனிதர்களுக்கு எளிதில் பசியெடுக்காது. நன்றாகப் பசியெடுக்க வேண்டும் என்பதற்காகவே முதலில் சூப் அருந்துகிறார்கள். நம் சீதோஷ்ண நிலைக்கு அது அவசியமே இல்லை. 'பசியோடு இருக்கும் வயிற்றில்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

## நம் பாரம்பர்ய உணவின் மேன்மை!

மருத்துவர் கு.சிவராமன்

"**கா**லையில் அருந்தும் தேநீரைக்கூட ஒரே மாதிரியானதாக அனைவரும் குடிக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. அவரவர் உடல்நிலைக்கு ஏற்றதை அருந்தலாம். அடிக்கடி தலைவலிக்கு உள்ளாகிற ஒருவர் தேநீரில் இஞ்சி கலந்து அல்லது சுக்கு, மல்லியைக் காய்ச்சி, பனை வெல்லம் சேர்த்துக் குடிக்கலாம். சளி பிரச்னை இருப்பவர்கள் கரிசலாங்கண்ணி, முசுமுசுக்கை கலந்த தேநீர் குடிக்கலாம்.

காலைச் சிற்றுண்டிக்கு இட்லி சிறந்தது. இட்லியுடன் வடை சேர்த்துச் சாப்பிடலாம். அதிலும், உளுந்து வடை குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் மிகவும் சிறந்தது. மதியம் சாம்பார், ரசம், மோருடன் சோறு சாப்பிடலாம். இரவு உணவாக இட்லி, தோசை, அப்பம் சாப்பிடலாம். வெறும் பழத்துண்டுகள் மட்டும் சாப்பிடுவதும் நல்லது. நீரிழிவு நோய் பாதிப்புள்ளவர்கள் கோதுமை ரவை உப்புமா சாப்பிடலாம். இரவு நேரத்தில் உடல் சூட்டை ஏற்படுத்தும் உணவுகளைச் சாப்பிடக் கூடாது. அசைவ உணவுகளைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிட வேண்டும்.

முதலில் இனிப்பான ஓர் உணவைச் சாப்பிட வேண்டும். அதற்காக முதலில் ஸ்வீட்ஸ் சாப்பிடக் கூடாது, பழத்துண்டுகளைச் சாப்பிட வேண்டும். அதற்கடுத்து சாம்பாருடன் சாதம் சாப்பிட வேண்டும். குழம்புடன் காய்கறிகள் சாப்பிடும்போது உடலுக்குத் தேவையான அத்தனை சக்தியும் கிடைத்துவிடும். சாம்பாரில் நாம் சேர்க்கும் பொருள்களில் ஏராளமான மருத்துவ குணங்கள் நிரம்பியிருக்கின்றன. புற்றுநோயைத் தடுப்பதற்கான ஆற்றல் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்கான ஆராய்ச்சிகள் நடந்துவருகின்றன. அதற்கடுத்தாக, ரசம் சாதம் சாப்பிட வேண்டும்.

ரசத்தில் சேர்க்கப்படுகிற நறுமணமூட்டிகளான மிளகு, சீரகம், இஞ்சி, பூண்டு, கொத்தமல்லி போன்றவை வெறும் மணமூட்டிகள் மட்டுமல்ல, ஜீரண சக்தியை மேம்படுத்த உதவுபவை. ரத்தச் சர்க்கரையின் அளவைக் குறைத்து, குடல் பாதிப்பால் ஏற்படும் கழிச்சல் போன்ற பாதிப்புகளைச் சரிசெய்பவை. செரிமானத்தில் ஏதும் கோளாறுகள் ஏற்படாமல் தவிர்க்க, கடைசியாக மோர் சாதம் சாப்பிட வேண்டும். மோர், இயற்கை அமில நீக்கியாகச் (Antacid) செயல்பட்டு அல்சர் போன்ற பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்கும். கடைசியாக பாக்கும் வெற்றிலையும் சேர்த்த தாம்பூலம் துவர்ப்புச் சுவைக்காகச் சாப்பிட வேண்டும். இதுவே நம் பாரம்பர்ய மற்றும் சரியான உணவு வரிசை."

சூப் இறங்கும்போது வயிறு புண்ணாவதற்கான வாய்ப்புகளே அதிகம்' என்கிறார்கள் மருத்துவர்கள்.

**எந்த சீஸனில் எந்தெந்த உணவுகளைச் சாப்பிடலாம் என்பதை விளக்குகிறார் உணவியல் நிபுணர் தாரிணி கிருஷ்ணன்.**

"நவம்பர், டிசம்பர், ஜனவரி தவிர்த்து மற்ற மாதங்களில் காலையில் பெரும்பாலும் பழைய சோறுதான் நம் உணவாக இருந்தது. அதுதான் நம் உடலுக்கும் நல்லது. சோற்றில் தண்ணீர் ஊற்றி, ஒரு நாள் இரவு முழுவதும் வைத்திருப்பதால் அதில் நல்ல பக்டீரியா உருவாகிவிடும். அதைச் சாப்பிடும்போது உடலுக்குத் தேவையான ஆற்றல் கிடைத்துவிடும்.

மதிய உணவில் முதலில் பாயசம் அல்லது பழங்கள் சாப்பிட வேண்டும். அது உணவு செரிமானத்துக்குத் தேவையான அமிலங்களைச் சுரக்கச் செய்யும். நம் அன்றாட வேலைகளைச் செய்வதற்கு புரதச்சத்து மிக அவசியம். அதற்காகக் காய்கறிகள், ஒரு கப் சாம்பாருடன் சேர்த்து சாதம் சாப்பிட வேண்டும். சாம்பாரில் ஏராளமான மருத்துவ குணங்கள்கொண்ட பொருள்கள் சேர்க்கப்படுகின்றன. இதில் சேர்க்கப்படும் துவரம்பருப்பு புரதச்சத்து நிறைந்தது. மஞ்சள்தூள் கான்சரைத் தடுக்கும். மிளகு, மல்லி போன்றவை சளி, இருமலைச் சரி செய்யக்கூடியவை; செரிமான சக்தியையும் மேம்படுத்துபவை. கறிவேப்பிலையில் இரும்புச்சத்து மிகுந்திருக்கிறது. புளியில் இரும்புச்சத்தோடு நார்ச்சத்தும் நிறைந்திருக்கிறது. சாம்பாருக்காகச் சேர்க்கப்படும் காய்கறிகளிலும் நார்ச்சத்துகள் அதிகளவில்

**உலகளவில் ஏராளமான மக்களுக்குப் பெருங்குடல் புற்றுநோய் பாதிப்பு இருக்கிறது. நம் உணவு முறை. குறிப்பாக சாம்பாரில் நாம் பயன்படுத்தும் மஞ்சள் போன்ற மசாலாப் பொருள்களில் ஆண்டி ஆக்ஸிடன்ட்கள் நிறைந்திருக்கின்றன.**

இருக்கின்றன. சாம்பார் இல்லாமல், குழம்பு வகைகளைச் சாப்பிடும்போது பருப்புத் துவையல் சேர்த்துக்கொள்ளலாம். சாம்பாருக்கு அடுத்ததாக, செரிமான சக்தியை மேம்படுத்துவது ரசம்.

பருப்பு ரசம், வேப்பம்பூ ரசம், மிளகு ரசம், சீரக ரசம் இப்படி நம் உணவு மரபில் பல ரச வகைகள் உள்ளன. அனைத்துமே மருத்துவப் பலன்களை அள்ளித்தருபவை. கடைசியாக தயிர், மோருடன் உணவை நிறைவுசெய்ய வேண்டும். மோரில் நன்மை செய்யக்கூடிய பக்டீரியா அதிகமாக இருக்கின்றன. பீன்ஸ், கரட் போன்ற காய்கறிகளோடு சிறுபருப்பு சேர்த்து, கூட்டாக செய்து சாப்பிடுவது அவசியம். வாரத்தில் ஓரிரு நாள்கள் தவிர மற்ற நாள்களில் உணவில் பருப்பு கண்டிப்பாக இருக்க வேண்டும். அசைவ உணவுகள் சாப்பிடுபவர்கள் முட்டை, மீன், சிக்கன் போன்ற உணவுகளை வாரத்தில் ஒரு முறை அல்லது இரு முறை சாப்பிடலாம்.

சீதோஷ்ண நிலைக்கேற்ப சில உணவுகளைத் தவிர்ப்பதும், சேர்த்துக்கொள்வதும் நம் பாரம்பர்ய வழக்கம். ஆடி, புரட்டாசி போன்ற மாதங்களில் முட்டையைத் தவிர மற்ற அசைவ உணவுகளைத் தவிர்த்துவிடுவது நல்லது. ஜூலை முதல் செப்டம்பர்வரை மொச்சை போன்ற தானிய வகைகள் அதிகமாகக் கிடைக்கும். அந்தக் காலங்களில் தானிய வகைகளை உணவில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். கோடைக்காலத்தில் பூசணிக்காய், சுரைக்காய், புடலங்காய் போன்ற நீர்க் காய்கறிகள் அதிகமாகக் கிடைக்கும். அப்போது அவற்றை அதிகமாகச் சாப்பிட வேண்டும். அந்தந்த சீஸனுக்கு விளையும் காய்கறிகளைச் சாப்பிடுவதே சிறந்த உணவுமுறை.

ஒரு காலத்தில் நம் உணவுமுறை அப்படித்தான் இருந்தது. உடலுக்குத் தேவையான சத்துகள் நாம் உண்ணும் உணவுகளின் மூலமாகவே கிடைத்தன. ஆனால், இப்போது நம் வாழ்க்கையைப் பீடித்திருக்கும் 'பஃபே' முறையில் வணிக நோக்கம்தான் இருக்கிறது. அதிகமான எண்ணெய், அதிகமான மசாலா என நம் ஆரோக்கியம் குறித்த எந்த அக்கறையும் இல்லாமல்தான் உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. கொடுக்கும் பணத்துக்காக அதிகமாகச் சாப்பிடுவதால் செரிமானக் கோளாறுகள்தான் ஏற்படுகின்றன. புளி சாதம், லெமன் சாதம், தக்காளி சாதம் போன்ற கலவை உணவுகளை அடிக்கடி சாப்பிடக் கூடாது. வாரத்துக்கு ஒரு முறை அல்லது இரு முறை சாப்பிடலாம். இர்வில் இட்லி, தோசை, அடை போன்ற உணவுகளைச் சாப்பிடலாம். இதுதான் சரியான உணவுமுறை. இதைப் பின்பற்றினால் எந்த நோயும் நெருங்காது."

**சாம்பாருக்கு புற்றுநோயைக் குணப்படுத்தும் ஆற்றல் இருப்பதாகச் சொல்லப்படுவது உண்மைதானா?**

"உலகளவில் ஏராளமான மக்களுக்குப் பெருங்குடல் புற்றுநோய் பாதிப்பு இருக்கிறது. நம் உணவு முறை. குறிப்பாக சாம்பாரில் நாம் பயன்படுத்தும் மஞ்சள் போன்ற மசாலாப் பொருள்களில் ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் நிறைந்திருக்கின்றன. இவற்றுக்கு குடல் புற்றுநோயைத் தடுக்கும் ஆற்றல் இருக்கிறது" என்கிறார் புற்றுநோய் சிறப்பு மருத்துவர் சரவணன்.

**நம் பாரம்பர்ய உணவுமுறையை விட்டுவிட்டு, 'ஃபாஸ்ட் ஃபுட்' உணவுகளை அதிகமாகச் சாப்பிடுவதால்தான் குடல் புற்றுநோய் போன்ற உடல்நலப் பிரச்னைகள் அதிகமாவதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா?**

"இன்றைய உணவுமுறை மிகவும் தவறாக இருக்கிறது. காலை உணவையே பலர் தவிர்த்து வருகிறார்கள். இது மிகவும் தவறு. இதனால், மூளை வளர்ச்சியில் தொய்வு ஏற்படும். காலையில் அதிகமாகவும், மதியம் அதைவிடக் குறைவாகவும், இரவு நேரத்தில் இன்னும் குறைவாகவும் சாப்பிட வேண்டும். ஆனால், நாம் சாப்பிடும் முறை அப்படியே தலைகீழாக இருக்கிறது.

இரவு நேரத்தில் பலர் பரோட்டா போன்ற கடினமான உணவுகளைச் சாப்பிடுகிறார்கள். பரோட்டா உடல்பருமனை ஏற்படுத்தக்கூடியது. பெருங்குடல் புற்றுநோய், கல்லீரல் புற்றுநோய் போன்ற பாதிப்புகள் ஏற்படும். மூட்டுப் பிரச்னைகள், இதய பாதிப்புகளும் ஏற்படலாம். எனவே, துரித உணவுகளை அடிக்கடி சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். உணவுகளைப் பொறுத்தவரை பழங்காலத்தில் நாம் பின்பற்றி வந்த நடைமுறையே சரியானது" என்கிறார் குடல்நல மருத்துவர் மகாதேவன்.


அலோபதி முதல் சித்தா வரை எல்லா மருத்துவமும் இப்போதுள்ள உணவு முறைகளை தவறென்றே சொல்கின்றன. நம் பாரம்பர்ய உணவு முறைக்கு மாறுவதொன்றே நோய்களிலிருந்து தற்காத்துக்கொள்ள நமக்கிருக்கும் ஒரே வழி. அதற்கு நல்ல உதாரணம், நான் உணவல்ல, மருந்து!' என்று அழுத்தமாகச் சொல்லும் சாம்பார்.


### ஒரு கப் சாம்பாரில் என்னவெல்லாம் இருக்கின்றன?

| | | |
|---|---|---|
| கலோரிகள் | - | 308 |
| பொட்டாசியம் | - | 265 மி.கி. |
| கொழுப்பு | - | 9 கிராம் |
| பொட்டாசியம் | - | 265 மி.கி. |
| நார்ச்சத்து | - | 3 கிராம் |
| சர்க்கரை | - | 3 கிராம் |
| புரதம் | - | 15 கிராம் |
| சோடியம் | - | 14 மி.கி |

அதோடு இரும்புச்சத்தும் வைட்டமின் சியும் இருக்கின்றன.


கார்போஹைட்ரேட் குறைவு என்பதால், இதில் கிளைசெமிக் இண்டெக்ஸ் குறைவாக இருக்கிறது. எனவே, இது சர்க்கரை நோயாளிகளுக்கும் ஏற்றது.





## பஃபே... வேண்டாமே!

'பஃபே' என்கிற முறையே அடிப்படையில் தவறு. நின்றுகொண்டும் பேசிக்கொண்டும் சாப்பிடுவது கூடாது. உணவின் அத்தனை ருசிகளையும் நன்றாக, மனதார ரசித்துச் சாப்பிட வேண்டும். 'பஃபே' முறையில் நாம் வேகவேகமாகச் சாப்பிடுகிறோம். அளவுக்கதிகமான உணவுகளைச் சாப்பிடுகிறோம். 'பஃபே' முறையால் உணவு வீணாவது தவிர்க்கப்படும் என்கிற கருத்து ஏற்புடையதல்ல. அமெரிக்காவில் ஒரு நாளைக்கு 'பஃபே' முறையில் வீணாகும் உணவு, 22 நாடுகளுக்கு ஒரு வருடத்துக்கான உணவாக இருக்கிறது என்கிறது ஒரு புள்ளிவிவரம். இலையில் பரிமாறிச் சாப்பிடுவதிலும் சில பிரச்னைகள் இருக்கின்றன. சில விழாக்களில் ஏற்கெனவே இலையில் உணவுகளைப் பரிமாறி வைத்துவிடுவார்கள். அது ஆரோக்கியமானதுமல்ல, உணவுகள் வீணாவதற்கான வாய்ப்புகளும் அதில் அதிகம். நமக்கு எது தேவை, எவ்வளவு தேவை என்பதைக் கேட்டு வாங்கிச் சாப்பிடும் முறையே சரியானது.



# தன்னைத்தானே சுட்ட ஒற்றைக்கண் சிவராசன்!



## ராஜிவ் காந்தி கொலை 49
### புலிகள் சிக்கிய கதை

✎ கே.ராகோத்தமன்

ஒருவேளை போலீஸ் வந்திருக்கும் விஷயம் சிவராசனுக்குத் தெரிந்திருக்குமானால், மிருதுளாவை அவர் பிணைக்கைதியாகப் பிடித்துவிடக் கூடும்.

வேறேதேனும் வகையில் உயிர்ச் சேதம் இல்லாமல் அவர்களை மயக்கமடைய வைத்து, பிறகு பிடிக்க முடியுமா என்றெல்லாம் ஆலோசித்தார்களே தவிர, அதிரடிப் படையை உடனே உபயோகிக்கும் எண்ணமே மேலதிகாரிகளுக்கு இல்லை.

இது மிகவும் பொறுமையைச் சோதிப்பதாக இருந்தது. இரவு முழுவதும் அந்த வீட்டைச் சுற்றி வெறுமனே நின்றுகொண்டிருந்தோம். உள்ளே துளி சத்தமும் இல்லை.

ஆள்கள் இருப்பது எங்களுக்குத் தெரியும்.

ஆனால் அவர்கள் மிகவும் கவனமாகவே இருந்தார்கள். வெளியே கேட்கிற ஒவ்வொரு சத்தத்தையும் அசைவையும் அவர்கள் கவனிக்கக் கூடும் என்று நினைத்தோம்.

ஏற்கெனவே, சின்ன சாந்தன் கைதாகி, அளித்த வாக்குமூலத்தில், யாராவது ஒருவர் காவலுக்கு நில்லாமல் சிவராசன் தூங்கமாட்டார் என்று சொல்லியிருந்தார். எனவே அசம்பாவிதங்கள் இன்றி இந்த ஒப்ரேஷன் முடியவேண்டுமே என்று கவலையாக இருந்தது.

மாலை நேரம் அந்தச் சாலை வழியே சென்ற ஒரு டிரக் வண்டி பழுதாகி நின்றது. உள்ளே இருந்த ஆள்கள் கீழே இறங்கினார்கள்.

அதனால் ஏற்பட்ட சிறு சலசலப்பில், அந்த வீட்டுக்குள் இருந்த சிவராசன் குழுவினர் விழித்துக்கொண்டார்கள்.

உடனே சரமாரியாகச் சுடத் தொடங்கினார்கள். சுமார் அரைமணிநேரம் இந்தத் துப்பாக்கிச் சூடு நீடித்தது. கறுப்புப் பூனைப் படைகளும் திரும்பச் சுட்டார்கள்.

இதற்குள் டெல்லியில் இருந்து இன்னும் கொஞ்சம் சிறப்பு அதிரடிப் படை வீரர்களை அனுப்பிவைத் திருப்பதாகச் செய்தி வந்தது!

எதற்கு?

புரியவில்லை. தாக்குதல் வேண்டாம் என்று உத்தரவிட்டுவிட்டு வீரர்களை அனுப்பும் லாஜிக் சுத்தமாகப் புரியவில்லை. ஆனால் தாக்க வேண்டியது எங்களுக்குக் கட்டாயமாகிப் போனது. தற்காப்புக்காக மேற்கொள்ளப்பட்ட அந்த எதிர்த்தாக்குதலில் இரண்டு அதிரடிப் படை வீரர்களுக்கு குண்டடிபட்டது.

டாக்டர், சயனைட் முறியடிப்பு மருந்து, ஆம்புலன்ஸ் என்று சகல ஏற்பாடுகளும் அந்தப் பத்தொன்பதாம் திகதி காலை வேளையில் அந்த வீட்டு வாசலுக்கு வந்துவிட்டன. அதுவரை ஒலித்துக்கொண்டிருந்த குண்டுச்சத்தம் அப்போது அடங்கிவிட்டது.

இதற்குமேல் காத்திருக்க வேண்டாம் என்று முடிவு செய்து அதிரடிப் படையினரை உள்ளே போகக் கேட்டுக்கொண்டோம். டெல்லியிலிருந்து வந்திருந்த என்.எஸ்.ஜி. கமாண்டோ படையினர் அவர்கள்.

யாருக்கும் நம்பிக்கை இல்லை. இது பிழை. பெரும்பிழை. ஒரு முழு இரவு அவர்களுக்கு அவகாசம் கொடுத்து, காலை விடிகிற நேரம் கதவைத் தட்டுவதை என்னவென்று சொல்ல?

உடன் இருந்த கமாண்டோக்களை, அவர்களது திறமையை எங்கள் அதிகாரிகளே நம்பாத அபத்தம் அது.

வேறு வழியில்லாமல் இறுதிக்கட்ட நடவடிக்கையை அன்று காலை எடுக்க, வீட்டை உடைத்து உள்ளே சென்றபோது பிணங்களே எங்களை வரவேற்றன.

சிவராசன், சுபா, நேரு, சுரேஷ் மாஸ்டர், டிரைவர், அம்மன் மற்றும் ஜமுனா என்கிற ஏழு பேரின் உடல்கள் அங்கே கிடந்தன. ஆறு பேர் சயனைட் அருந்தி உயிர்விட்டிருக்க, சிவராசன் தன் நெற்றிப்பொட்டில் சுட்டுக்கொண்டு இறந்திருந்தார்!

அதிர்ச்சி என்று சொல்லமாட்டேன்.

அந்த இரவு முழுவதும் நாங்கள் வெறுமனே அந்த வீதியில் காத்திருக்க நேர்ந்தபோதே இதுதான் நடக்கப்போகிறது என்பது தெரிந்துவிட்டது. என்ன காரணம் என்று தெரியாமலேயே நடவடிக்கை எடுக்க முடியாமல் கைகட்டி நின்றிருந்த அவலத்தை நொந்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

ஆனால் ஒரு திருப்தி இருந்தது. 'இந்திய போலீஸ் முடிந்தால் கொலையைச் செய்தது யாரென்று கண்டுபிடிக்கட்டும்' என்று லண்டனில் உட்கார்ந்துகொண்டு அறிக்கை விட்டாரே கிட்டு! அதை நாங்கள் செய்தோம்.

வெற்றுப் பலகை போல் இருந்த வழக்கில் ஆரம்பமே எதுவென்று தெரியாமல் தேடத் தொடங்கி, மூன்று மாத காலத்துக்குள் கொலைக் குற்றத்தில் சம்பந்தமுள்ள அத்தனை பேரையும் ஒருவர் விடாமல் (சிவராசன் மரணத்துக்குப் பிறகு ரங்கன், சுசீந்திரன், அறிவு, இரும்பொறை, என்று பலபேரை அடுத்தடுத்துப் பிடித்துவிட முடிந்தது.

ஏற்கெனவே பிடிபட்டு விசாரணையில் இருந்தவர்கள், 'ரிசர்வ்' செய்து வைத்திருந்த தகவல்களையும் அதன்பின் ஒவ்வொன்றாக வெளியிடத் தொடங்கிவிட்டிருந்தார்கள். திருச்சி சாந்தனின் இருப்பிடத்தை ஒருவழியாக ரங்கன் மூலம் பிடித்து, அவரைப் பிடிக்கச் சென்று முடியாமல் அவர் சயனைட் அருந்தி உயிர் விட்டார்) சில சயனைட் மரணங்களைத் தடுத்திருக்கலாம்.

அதிகாரிகளின் மெத்தனத்தாலும் தயக்கத்தினாலும் அது மட்டும் முடியாமல் போய்விட்டது.

ஒரு மாபெரும் தலைவரின் படுகொலை வழக்கை விசாரிக்கச் சென்று, நமது அரசு இயந்திரம் செயல்படும் விதத்தினை முழுமையாகப் புரிந்துகொள்ள அது ஒரு பெரிய வாய்ப்பாக அமைந்தது என்னைப் பொறுத்தவரை முக்கியமான விஷயம்தான்!

காவல்துறை என்கிறோம், உளவுத் துறை என்கிறோம், அதிரடிப்படை என்கிறோம்.சர்வவல்லமை பொருந்திய சட்டம் என்கிறோம். நீதி, நேர்மை, வாய்மை என்று என்னென்னவோ சொல்கிறோம்.

ஆனால் அனைத்துத் தளங்களிலும் சீர்திருத்தப்படவேண்டிய அம்சங்கள் ஆயிரம் ஆயிரம் உள்ளன என்னும் பேருண்மை எனக்கு இந்த வழக்கின்மூலம் தெரியவந்தது.

நமது நாட்டுக்கு அந்நிய சக்திகள் மூலம் உள்ள அபாயங்களைக் காட்டிலும் நம்மிடத்திலேயே உள்ள அபாயங்கள் அதிகம்.

இந்த ஒரு வழக்கை மட்டும் உதாரணமாக எடுத்துக்கொள்வோம். எத்தனை எத்தனை சிடுக்குகள்!

புலன் விசாரணையின்போதும் சரி, பின்னால் வழக்கு நீதிமன்றத்துக்குச் சென்றபோதும் சரி. ராஜிவ் கொலை வழக்கின் தலைமைப் புலனாய்வு அதிகாரி என்னும் முறையில் எனக்கு வழக்கு சுத்தமாக முடிந்த திருப்தியைக் காட்டிலும், முடிந்தபின் மனத்தில் மேலோங்கிய கசப்புகளே அதிகம்.

விவரித்துத் தீராதவை அவை.

(முற்றும்)



சிவராசா, சுபா




சுபா - சயனைடு தற்கொலை

## ஆட்டோ சங்கரின் கதை

# சாராயத்தோடு செக்ரட்டேரியட்டுக்குப் போன கதை!

### இந்தியாவை உலுக்கிய சீரியல் கில்லரின் மரண வாக்குமூலம்: 05



> சாராய வியாபாரத்துக்காக ஒதுங்கியிருந்த புறம்போக்கு நிலத்தை ஜெயந்தி தியேட்டர் பின்புறம் எனக்கே எடுத்துக்கிட்டேன்! போலீஸ்தான் துணை இருக்கே. அந்த இடத்துக்கு 'பெரியார் நகர்'னு பேர் சூட்டினேன்.

சாராய வியாபாரம் ஆரம்பிச்சு சீக்கிரத்திலேயே வியாபாரத்தோட நெளிவு, சுளிவுகளைத் தெரிஞ்சுகிட்டேன். நாவலூர், விருகம்பாக்கம், திருநீர்மலை இப்படி அத்தனை ஏரியாக்கள்ளயும் இருக்கிற சாராயங்களையும் தரம் பிரிக்கிற அளவு வெவரமாயிட்டேன்.

முதல்ல எல்லாம் பஸ்ஸிலே போய்தான் சாராய கேனை எடுத்துக்கிட்டு வருவேன். பஸ்ஸிலே என் பக்கத்திலே கேனை வச்சுக்க மாட்டேன். பின்புறமா அதை வச்சுட்டு நான் டிரைவர் வரைக்கும் நகர்ந்திடுவேன். வழியிலே செக்கிங் வந்தா சரக்கை அம்போன்னு விட்டுட்டு இறங்கி ஓடிரலாமே! தூரத்திலே அவங்க நிற்கறப்பவே மோப்பம் பிடிச்சு இறங்கிடுவேன்....

மின்னல் வேகத்திலே வியாபாரம் வளர்ந்துச்சு!

இந்த மாதிரி வியாபாரங்களே இப்படித்தானே... வளர்ந்தா மின்னல் வேகத்திலே இருக்கும். விழுந்தாலும் இடி விழுந்தது கணக்கா விழும்! பஸ்ஸிலே போய் கொண்டு வந்தா போதாதுன்ற அளவு சரக்கு டிமாண்ட் ஆச்சு. வேனைப் புடிச்சேன்... பிறகு லாரி! பஸ், லாரி, ஆட்டோன்னு பல வாகனங்களில் சரக்குகளைக் கொண்டுவந்தேன்னு ஒற்றை வரியிலே சொல்லிட்டாலும் அப்ப நான் சந்திச்ச அனுபவங்களும் போராட்டங்களும் பயங்கரமானது.

ஒரு தடவை திருநீர் மலைல இருந்து சரக்கை எடுத்துக்கிட்டு வேன்லே வர்றப்ப மதுவிலக்கு போலீஸ் ஜீப்புலே துரத்திக்கிட்டு வந்துடுச்சு. இங்கிலீஷ் படத்திலே வரமாதிரி பயங்கர சேஸிங்!



குறுக்கு வழியிலே தப்பிக்கிறதுக்கும் காரை சாமர்த்தியமா விரட்டி ஓட்டறதுக்கும் சரியான வேன் டிரைவரைத்தான் எப்பவும் பக்கத்திலே வச்சிருப்பேன்! ஆனா, அன்னிக்கு அவங்களுக்கு நல்ல நேரம். ஹைவேஸ்ல எக்கச்சக்கமா மாட்டிக்கிட்டோம். டிரைவர் இறங்கி ஓடியே போயிட்டான்... நான் இறங்குறதுக்குள்ளே வந்து மொய்ச்சுட்டாங்க

மதுவிலக்கு பிரிவு இன்ஸ்பெக்டர், பின்னாடி மிகப்பெரிய போலீஸ் அதிகாரியா சென்னையிலேதான் இருந்தாரு... என்னை நெருங்கி வந்து... "ஏண்டா... சரகத்துக்கு மட்டும்தான் மால் வெட்டுவியா? நாங்களெல்லாம் என்ன பழத்தை வச்சுகிட்டுப் போறதா?"ன்னு கேட்டார். அவர் யாருன்னு தெரிஞ்சா ஆச்சரியப்படுவீங்க. ஒருத்தர் பாக்கியில்லாம எல்லா பெரிய மனுஷங்களையும்... பெரிய மனுஷங்களோட சின்ன மனசுகளையும் இனி வரப்போற அத்தியாயங்களில் சொல்றேன்!

அந்த அதிகாரியோடு பேரம் பேசினேன். அப்பாடா! இனிமே இந்த வழியிலே ஆபத்திருக்காது. ஏழு எட்டு வருஷ கிரிமினல் வாழ்க்கையிலே எத்தனையோ போலீஸ் ஆபீஸர்களைப் பார்த்துட்டேன்... நான் போட்ட எலும்புத் துண்டுகளை தின்றவங்களும் நான் குற்றவாளியாகக் காரணமானவங்களும் பெரிய பெரிய பதவிகளுக்கு ப்ரமோஷன் கிடைச்சுப் போனாங்க... ஆனா நான்? என்னை மட்டும் "சிவலோகப்பதவி'க்கு அனுப்பிட்டாங்க!

எல்லா போலீசுக்கும் இந்த முகம்தான்னு சொல்ல மாட்டேன். நேர்மையா வேலை செய்தவர்களும் உண்டு... அவங்க ரொம்ப அபூர்வம்ன்றது மட்டுமில்லை... எந்த பதவி உயர்வும் கிடைக்காதவங்கன்றதும் எனக்குத் தெரியும். நான் நேர்மையை பத்தி நம்பிக்கை இழந்ததெல்லாம் இந்த இடத்திலேதான். சாராய வியாபாரத்துக்காக ஒதுங்கியிருந்த புறம்போக்கு நிலத்தை ஜெயந்தி தியேட்டர் பின்புறம் எனக்கே எடுத்துக்கிட்டேன்! போலீஸ்தான் துணை இருக்கே. அந்த இடத்துக்கு 'பெரியார் நகர்'னு பேர் சூட்டினேன். 216 பிளாட்டுகளா பிரிச்சு, சுற்றி குடிசைகள் போட்டேன்.

"எப்படியாவது இந்த இடத்துக்குப் பட்டா வாங்கிடு சங்கர்"ன்னு சுகுமார் யோசனை சொன்னார்.

நேரமில்லாததாலே அதைக் கவனிக்காமலே இருந்தேன். ஒருநாள் ஆட்டோவிலே சரக்கை எடுத்துக்கிட்டு வர்றப்ப கார்ப்பரேஷன் லேருந்து ஆட்களெல்லாம் வந்திருக்கிறதா, சொன்னாங்க. பெரியார் நகரைச் சுத்தி கூட்டம் கூட்டமா ஜனம். புறம்போக்கை ஆக்கிரமிச்சிருக்கிறதாலே அப்புறப்படுத்த அதிகாரிங்களெல்லாம் வந்திருந்தாங்க எனக்கு பரபரப்பாயிடுச்சி!

தொழில் நடத்த இடம் வேணுமே... சட்டுனு ஆட்டோவை எடுத்துக்கிட்டு 'கோட்டை'க்குப் போனேன், அவரைப் பார்க்க... செகரட்டேரியட்டை நெருங்குறப்பதான் தெரிந்தது... ஆட்டோவுக்குள்ளே இருந்த 'சரக்கை' இறக்காமலே கொண்டு வந்திருக்கேன்னு. அவ்வளவு சாராயத்தோட கோட்டைக்குப்போன மொத ஆள் நானாகத்தான் இருக்கும். கோட்டையிலே போய் யாரை பார்த்தேன் தெரியுமா? (தொடரும்)



## சோனியா அகர்வால் கலக்கும் மல்லி!

திரைப்பட நடிகை சோனியா அகர்வால் நடிப்பில் புதுயுகம் தொலைக்காட்சியில் திங்கள் முதல் சனிக்கிழமை வரை இரவு 7 மணிக்கு ஒளிபரப்பாகும் 'மல்லி'தொடர் மக்களிடம் பெரும் வரவேற்பு பெற்றுள்ளது. காதலுக்காக குடும்பத்தினரை எதிர்த்துத் திருமணம் செய்தவர்கள் பிரசாத் விேனாதினி தம்பதி. ஒரே குழந்தையான ஷிவானியை நகரிலேயே பெரிய பள்ளியில் படிக்க வைத்து, வேண்டியதை எல்லாம் வாங்கித் தருகிறார்கள். ஆசைப்பட்டது எல்லாம் வாங்கி கொடுத்து நாங்கள் சம்பாதிப்பது எல்லாமே ஷிவானிக்காகத் தான் என்று சொல்லும் பெற்றோர், செய்ய இருக்கும் தவறு என்ன? ஷிவானிக்கு ஏற்பட இருக்கும் பிரச்சினை என்ன? என்பது ரசிகர்களிடம் பெரும் எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தொடரில் விேனாதினியாக சோனியா அகர்வால் நடிக்கிறார். அவருடன் சேது டார்வின், தேனி முருகன், முரளி, சுசித்ரா ஆனந்தன், கிருஷ்ணகுமாரி, பேபிஹரிணி, மாஸ்டர் ஜாக் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.



## கமல் வைத்த விருந்து!

விஜய் தொலைக்காட்சியில் பிக்பாஸ் இரண்டாவது சீசன் நடந்து முடிந்திருக்கிறது. நடிகை ரித்விகா பட்டம் வென்றார். ஐஸ்வர்யா தத்தா இரண்டாம் இடம் பிடித்தார். முதல் சீசனை ஒப்பிடும்போது அந்த அளவிற்கு இல்லை என்றாலும், சண்டை சச்சரவு, மோதல் என நகர்ந்தது. வணிகரீதியாகவும் வெற்றி பெற்றது. பிக் பாஸ் நிகழ்ச்சியை நடத்தி வந்த கமல், அதன் போட்டியாளர்களுக்கு நட்சத்திர ஓட்டலில் தன் சார்பில் விருந்து கொடுத்தார். அப்போது போட்டியாளர்கள் ஒருவருடன் ஒருவர் இணைந்தும், குரூப்பாகவும் செல்பி எடுத்துக் கொண்டனர். கமலுடன் குரூப் போட்டோ எடுத்துக் கொண்டனர். அவர்களுக்கு கமல் விலை உயர்ந்த வீவோ செல்போனை பரிசாக வழங்கினார். சில முக்கியமான போட்டியாளர்கள் இந்த விருந்தில் கலந்து கொள்ளவில்லை. அதற்கான காரணம் தெரியவில்லை.



சின்னத்திரை

## அம்மாவும் மகளும்!

தொண்ணூறுகளில் தொகுப்பாளினியாக அறிமுகமானவர் அர்ச்சனா. இன்றுவரை புதிய தொகுப்பாளினிகளிற்கு கடுமையான போட்டியை கொடுத்துக் கொண்டிருக்கிறார். இப்பொழுது மகளுடன் இணைந்து நிகழ்ச்சியொன்றை தொகுத்து வழங்கவிருக்கிறார். ஜீ தமிழ் சேனலில் இம் மாத இறுதியில் "சூப்பர் மாம்" என்ற ரியாலிட்டி ஷோ ஆரம்பிக்கிறது. இதைத்தான் அர்ச்சனாவும், மகளும் தொகுத்து வழங்கவுள்ளனர். அம்மா மகள்களிற்கான ரியாலிட்டி ஷோ இது.



## கலர்ஸ் டிவியின் திருமணம்!

ஒக்ரோபர் 8ம் திகதி முதல் கலர்ஸ் டிவியில் ஒளிபரப்பாகி வருகிறது திருமணம் தொடர். நாயகி ஜனனியாக ஸ்ரேயாவும், நாயகன் சந்தோஷாக சித்துவும் அறிமுகமாகிறார்கள். விளம்பர மொடலான ஸ்ரேயாவை அப்படியே சின்னத்திரைக்கு அள்ளிவந்துள்ளார்கள். முதலிரவு அறையிலேயே, "எனக்கு இந்த திருமணத்தில் இஸ்டமில்லை. கட்டாயப்படுத்தி செய்து வைத்தார்கள். டைவர்ஸ் பேப்பரில் கையெழுத்து வைத்துவிடுகிறீர்களா?" என நாயகன் கேட்பதுடன் சீரியல் ஆரம்பித்துள்ளது. வழக்கமாக மங்களகரமான சமாச்சாரங்களை தவிர்த்து, பரபரப்பாக ஆரம்பித்திருக்கிறது. கணவனின் மனதை மாற்றி குடும்ப வாழ்வில் திருப்புகிறாளா அல்லது, மனைவி பந்தத்தில் தோழியாக வாழ்ந்து, கணவனின் நோக்கங்களை அடைய தோள் கொடுக்கிறாளா என்பதே கதையென சர்ப்ரைஸ் வைக்கிறது திருமணம் சீரியல் டீம்.




பா.ரஞ்சித் தயாரிப்பில் மரி செல்வராஜ் இயக்கத்தில் கதிர், ஆனந்தி , யோகி பாபு நடிப்பில் வெளியாகியுள்ள படம் 'பரியேறும் பெருமாள்'. அடித்தட்டு சமூகத்தில் இருந்து வக்கீலாகும் கனவுடன் கல்லூரி வரும் பரியேறும் பெருமாள் (எ) பரியன் (கதிர்). கல்லூரியில் ஆங்கிலம் பரியனுக்கு சிக்கல்களை உருவாக்குகிறது. கல்லூரி விரிவுரையாளர்கள் முதல் உடன் படிக்கும் மாணவர்கள், மாணவிகள் என அனைவர் முன்பும் அவமானப்பட்டு நிற்கிறார் பரியன். இடையில் தன்னையே சுற்றிவரும் ஜோ(எ)ஜோதி மகாலட்சுமி (ஆனந்தி). ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவன் உயர் சாதிப் பெண்களுடன் பேசுவது கூட தவறு என்கிற ரீதியில் பிரச்னைகள் உருவாகி ஒவ்வொரு நாளும் பரியனுக்கு வாழ்க்கையே வெறுப்பாகத் துவங்குகிறது. முடிவு என்ன என்பது மீதிக் கதை.

தமிழ் சினிமாவில் எதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தும் நடிகர்கள் மிகக் குறைவு. அந்த குறையை தீர்க்க வந்த மிகச்சிலரில் கதிரையும் இணைத்துக் கொள்ளலாம். தன் செல்ல நாய்க்கு நடந்த கொடூரத்தை எண்ணி கதறி அழுவது, ஏதும் அறியா மாணவனாக கல்லூரியில் கிண்டலுக்கு ஆளாவது, தோழியின் அக்கா திருமணத்திற்கு வந்து சராமாறியான தாக்குதலுக்கு ஆளாகி , அறைக்குள் துவண்டு தவிப்பது என ஒவ்வொருக் காட்சியிலும் ஆச்சர்யமான நடிப்பை வெளிப்படுத்துகிறார். "ஹையோ அப்டிலாம் சொல்லக் கூடாது A For Apple தான் சொல்லணும்", "நான் உன் தேவதையாவேனா" எனக் கொஞ் சிப் பேசி உண்மையாகவே தேவதையாகத் தெரிகிறார் கயல் ஆனந்தி. நடக்கும் பிரச்னை ஏதும் அறியாமல் கதிரை சுற்றி வருவதும், ஏங்குவதுமாக இப்படி ஒரு பொண்ணு கிடைக்கணும்பா என இளைஞர்களை நிச்சயம் ஏங்க வைப்பார். "வா வந்து உக்காரு", "சின்ன சி'யா' இல்லை பெரிய சி'யா' என ஆங்கிலம் தெரியாமல் அலப்பறைக் காட்டும் யோகிபாபுவுக்கு அரங்கமே அப்ளாஷ் கொடுக்கிறது. ஆங்காங்கே சிரிப்பு வெடிகளை சிந்திக்க வைத்து கொடுத்துகிறார்.

படத்தின் அடுத்த முக்கியத்துவம் வாய்ந்த கேரக்டர் கராத்தே வெங்கடேசன். கொலைகார தாத்தாவாக மனிதர் அடி வயிற்றில் சிலிரிட வைக்கிறார். கொஞ்சமும் யோசிக்காமல் கொலை செய்வது, அதே பாணியில் கதிரைக் கொலை செய்ய முயன்று முடியாமல் ரயிலில் சென்று விழுவது என அத்தனை எதார்த்த நடிப்பு. 'ரூமுக்குள்ள தூக்குப் போட்டுச் சாவறதுக்கு சண்டைப் போட்டுச் சாவட்டும்' என்னும் கல்லூரி பிரின்சிபல் பூ ராமு, 'ஏப்பா நான் எதுக்குப்பா கலேசுக்கெல்லாம்' என அப்பாவியாக வளம் வந்து நெஞ்சை கனமாக்கும் கதிரின் அப்பா என படத்தில் பல கேரக்டர்கள் மனதில் நிற்கின்றன.

ஜாதியக் கொடுமை, அடக்குமுறை என மிக அற்புதமாக கையாண்டிருக்கிறார் இயக்குநர். நீல நிற நாய், ரஞ்சித்தின் டச் என்பது தெரிகிறது. படத்தின் முக்கிய அம்சம் சந்தோஷ் நாராயணன். பின்னணியிலும் சரி பாடல்களிலும் சரி மனதை நிறைவாக்கியிருக்கிறார். 'கருப்பி' பாடல் மிகப் பொறுப்பான உருவாக்கம். கிராமத்து பூமி, கரிசல் தேசம், நாய் காட்சிகள், சண்டைக் காட்சிகள், கல்லூரி பாடல்கள் என ஸ்ரீதரின் ஒளிப்பதிவு படத்திற்கு பலம்.

பலரும் சோகமான முடிவை எதிர்நோக்கிக் காத்திருக்கையில் கன்னத்தில் ஓங்கி அறைந்தது போல் ஒரு முடிவு வைத்து குறியீட்டில் எண்ட் கார்டு போட்ட விதத்தில் இயக்குநர் தமிழுக்கு மிக முக்கியமான ஒரு படைப்பைக் கொடுத்திருக்கிறார் என்றே சொல்லலாம். 'நீங்க நீங்களா இருக்கறவரைக்கும் நாங்க நாயா இருக்கற வரைக்கும் எதுவுமே மாறப் போறதில்லை' என உண்மைச் சூழலை உறக்க சொல்லி தவிர்க்க முடியா விழிப்பு உணர்வு படமாக மாற்றியிருக்கிறார் மாரி செல்வராஜ்.



# வண்ணத் திரை

## தெலுங்கு ரீமேக்கில் த்ரிஷா!

ஒளிப்பதிவாளரும், அறிமுக இயக்குநருமான பிரேம் குமார் இயக்கத்தில் விஜய்சேதுபதி, த்ரிஷா இணைந்து நடித்துள்ள 96 படம் அக்டோபர்4 அன்று வெளியானது. படவெளியீட்டுக்கு முன்னதாகவே இப்படம் பத்திரிகையாளர்களுக்கு திரையிடப்பட்டது. பத்திரிகையாளர்களின் பாசிட்டிவ்வான விமர்சனங்களை அறிந்த தெலுங்கு சினிமாவில் பிரபல தயாரிப்பாளரான தில் ராஜு இந்த படத்தை தெலுங்கில் ரீமேக் செய்து தயாரிக்க முன் வந்துள்ளார். இவரும், தெலுங்கு நடிகர் நானியும் சமீபத்தில் 96 படத்தை பார்த்துள்ளார்கள். இந்தப்படம் இருவருக்கும் பிடித்துபோனததால் பெரியவிலை கொடுத்து 96 படத்தின் தெலுங்கு ரீமேக் உரிமையை வாங்கியுள்ளார் தில் ராஜு. 96 படத்தில் விஜய்சேதுபதி நடித்த கேரக்டரில் தெலுங்கில் நானி நடிக்கிறார். கதாநாயகியாக த்ரிஷா நடிப்பதற்கு அதிக வாய்ப்பு இருப்பதாக தெரிகிறது. இந்த படத்தின் அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகிறது!

## விஷால் நல்லவரா? கெட்டவரா?

விஜய் சேதுபதி நடிப்பில் இந்தவாரம் ரிலீஸாகியிருக்கும் 96 படத்தை, மெட்ராஸ் எண்டர்பிரைசஸ் சார்பில் நந்தகோபால் தயாரித்துள்ளார். ஆர்யா நடிப்பில் வெளியான கலாபக் காதலன், ரோமியோ ஜூலியட், வீரசிவாஜி, கத்தி சண்டை உள்ளிட்ட பல படங்களைத் தயாரித்துள்ளது. விஷால் நடித்த துப்பறிவாளன் படத்தை வாங்கி வெளியிட்டது. ரிலீஸ் சமயத்தில் சில படங்களுக்கு பைனான்ஸ் பிரச்சினை வருவது போல, 96 படத்துக்கும் பிரச்சினை வந்தது. 96 படத்தின் மூலம் தயாரிப்பாளர் நந்தகோபாலுக்கு நல்ல லாபம் கிடைத்தது. ஆனால் வீரசிவாஜி, கத்தி சண்ட படங்களினால் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக, 96 படம் வெளிவருவதில் சிக்கல் ஏற்பட்டது. சுமார் 4.5 கோடியை விஜய்சேதுபதி செட்டில் பண்ணுவதாக எழுதிக்கொடுத்த பிறகு 96 படத்தை வெளியிட விஷால் அனுமதி கொடுத்தார். கத்திசண்டை படம் விவகாரம் தொடர்பாக அந்தப்படத்தை தயாரித்த நந்தகோபால், விஷாலுக்கு கொடுக்க வேண்டிய ரூ.1.50 கோடியையும் விஜய் சேதுபதியே கடைசிநேரத்தில் செட்டில் செய்துள்ளார். இந்த விஷயத்தில் விஷாலை கெட்டவராக சித்தரித்து தயாரிப்பாளர்கள் வாய்ஸ் கொடுக்க, இன்னொரு பக்கம் மீடியாக்களில் செய்திகள் வர, வெறுத்துப்போன விஷால், தனக்கு விஜய்சேதுபதி தருவதாக ஒப்புக்கொண்ட 1.5 கோடியை தர வேண்டாம் என்று சொல்லிவிட்டார்.

## மலைப்பாம்புடன் காஜல்!

காஜல் அகர்வால் தற்போது தெலுங்கில் தேஜா இயக்கத்தில் நடித்து வருகிறார். பெல்லம்கொண்டா ஸ்ரீனிவாஸ் கதாநாயகனாக நடிக்கும் இந்தப்படத்தின் படப்பிடிப்பு, தாய்லாந்தில் உள்ள காடுகளில் படமாக்கப்பட்டு வருகிறது. படப்பிடிப்பின் ஓய்வின்போது காஜல் அகர்வால், தனது தோளில் மிகப்பெரிய மலைப்பாம்பை தூக்கி மாலையாக அணிந்திருக்கும் வீடியோ காட்சி வைரலாகி வருகிறது. ஆரம்பத்தில் கொஞ்சம் பயமும், டென்சனும் இருந்தாலும் சில நிமிடங்களிலேயே குழந்தையைப்போல ஜாலியாக விளையாட ஆரம்பித்து விட்டாராம் காஜல்.

## அனுபமாவின் ஆசை!

பிரேமம் படத்தில் அறிமுகமான அனுபமா பரமேஸ்வரன், தமிழில் தனுஷ் நடித்த கொடி படத்தில் அறிமுகமானார். தற்போது தெலுங்கில் பிசியான நடிகையாக இருக்கிறார். ஆரம்பத்தில் கவர்ச்சிக்கு தடா போட்டு வந்த அவர், தற்போது ஓரளவு மிதமான கவர்ச்சி நாயகியாக உருவெடுத்திருக்கிறார். அனுபமா பரமேஸ்வரனுக்கு சினிமாவில் பின்னணி பாட வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டுள்ளது. சிறுவயதில் இருந்தே நான் நன்றாக பாடுவேன். அதனால் யாராவது இசையமைப்பாளர்கள் பாட அழைத்தால் அதை எனது அதிர்ஷ்டமாக கருதுவேன் என்று கூறியுள்ளார். இப்போதைய நடிகைகளில் ஸ்ருதிஹாசன், ஆண்ட்ரியா, ரம்யா நம்பீசன் உள்பட சிலர் பின்னணி பாடி வருவது தெரிந்ததே. அந்த பட்டியலில் விரைவில் அனுபமா பரமேஸ்வரனும் இணைந்து விடுவார் என்று தெரிகிறது.

## பிரபாகரனாக பாபி சிம்ஹா

வில்லன், ஹீரோ என மாறி மாறி பயணித்து வரும் நடிகர் பாபி சிம்ஹா, தற்போது ரஜினியின் பேட்ட, அக்னிதேவ் உள்ளிட்ட சில படங்களில் நடித்து வருகிறார். இந்நிலையில், அடுத்தப்படியாக விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வேடத்தில் நடிக்க உள்ளார். பிரபாகரனின் வாழ்க்கையை மையமாக வைத்து உருவாகும் இப்படத்தை ஸ்டூடியோ 18 நிறுவனம் தயாரிக்கிறது. சீறும் புலிகள் என பெயரிடப்பட்டுள்ள இப்படத்தை லைட்மேன், நீலம் படங்களை இயக்கிய வெங்கடேஷ் குமார் இயக்குகிறார். இவர், மறைந்த இயக்குநர் பாலுமகேந்திராவிடம் உதவி இயக்குநராக இருந்தவர். இவர் இயக்கிய நீலம் படம் சென்சார் பிரச்னையால் ரிலீஸாகவில்லை.

அஸ்மிதா

## ஷில்பாவை நெகிழ வைத்த சல்மான்!

பாலிவுட் நடிகை ஷில்பா ஷெட்டி பீக்கில் இருந்தபோது நடிகர் சல்மான்கானுடன் சேர்த்து கிசுகிசுக்கப்பட்டவர்களில் ஒருவர். இருவரும் அடிக்கடி டேட்டிங் சென்று வருவார்கள் என்றுகூட சொல்லப்பட்டது. சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் பேசிய ஷில்பா ஷெட்டி, சல்மான்கான் தனக்கு நல்ல நண்பராக இருந்தார் என்றும் அவருடன் டேட்டிங் சென்றதில்லை என்றும் கூறியுள்ளார். மேலும் தன்னை சல்மான் கான் நெகிழவைத்த ஒரு சம்பவத்தையும் குறிப்பிட்டுள்ளார். படப்பிடிப்பு, அல்லது பார்ட்டிக்கு சென்றுவிட்டு வரும்போது ஷில்பாவை வீட்டில் இறக்கிவிடும் சல்மான், அவரது தந்தையுடன் பார் டேபிளில் அமர்ந்து சில பெக்குகளை உள்ளே தள்ளியபடி கொஞ்ச நேரம் பேசிவிட்டு செல்வாராம். ஷில்பாவின் தந்தை இறந்த செய்தி கேட்டதும், அவரது வீட்டிற்கு சென்ற சல்மான்கான் நேராக அந்த பார் டேபிளில் சென்று அமர்ந்துகொண்டு குலுங்கி அழ ஆரம்பித்து விட்டாராம். சல்மான்கான் பற்றிய நினைவு வரும்போதெல்லாம் இந்த நிகழ்வு மனதில் தோன்றி தன்னை நெகிழ வைத்து விடுகிறது என மேலும் கூறியுள்ளார் ஷில்பா ஷெட்டி.



# “அய்யய்யோ... ஆளை விடுப்பா” - செல்வராகவனிடம் கெஞ்சினேன்!

## ரமேஷ் கண்ணா எழுதும் ‘திரையிடாத நினைவுகள் 8’

இன்று தமிழ் சினிமாவில் உயரத்தில் இருக்கும் பலரை ஆரம்ப காலத்தில் பார்த்த யாரும் அவர்கள் இப்படி வருவார்கள் என்று எண்ணியிருக்க மாட்டார்கள். 'ஆசை' படத்தில் ஆட்டோ ஓட்டிய, 'கிழக்குச் சீமையிலே' படத்தில் கூட்டத்தோடு கூட்டமாக நின்ற எஸ்.ஜே.சூர்யா 'வாலி', 'குஷி' இயக்குவார் என்று யாருக்கும் அப்போது தெரியவில்லை. அஜித்திற்கு தெரிந்திருந்தது, அதுவும் அவரை நன்கு கவனித்தபின்.

ஏன், பாக்யராஜ்...? முதலில் ஒரு ஸீன், பிறகு ஒரு கதாபாத்திரம், பிறகு ஹீரோ, பின்னர் வரிசையாக வெள்ளிவிழா படங்கள்... யாருக்குத் தெரியும், அவர் இப்படி வருவாரென்று? பாரதிராஜா சாரே எதிர்பார்த்திருக்கமாட்டார். என்னை எடுத்துக்கங்க, 'நேரா பாரதிராஜா அல்லது பாலச்சந்தர்கிட்ட அசிஸ்டன்ட்டா சேர்றோம், படம் இயக்குறோம், அப்படியே ஹீரோ ஆகுறோம்'னு நினைச்சுகிட்டுதான் வந்தேன். எத்தனை வருஷம் ஆச்சு, எங்கெங்கோ சுத்தியாச்சு ஒரு படம் எடுப்பதற்குள்.

விக்ரம், விஜய் சேதுபதி எல்லாம் சிறந்த எடுத்துக்காட்டுகள்... யாருக்குத் தெரியும் அவுங்க இவ்வளவு பெருசா வருவாங்க ஒரு நாள் என்று. இப்படி எதையும் கணிக்க முடியாதது சினிமா வாழ்க்கை. ஆனால், உள்ளுக்குள் ஒரு நெருப்பு, விடாம, எத்தனை கஷ்டத்திலும், அவமானத்திலும், நிராகரிப்பிலும், காத்திருப்பிலும், பசியிலும், வலியிலும் அணையாம எரிந்தால்... நடக்கும். நமக்குள் நெருப்பு இருக்கணும். சில பேருக்கு சீக்கிரம் நடக்கும், சிலருக்கு லேட்டா நடக்கும், ஆனால் உள்ளே அந்த நெருப்பு இருந்தால்தான் நடக்கும்.


அப்படி நெருப்புடன் வந்து சினிமா உலகில் ஒளிர்பவர்கள் ரெண்டு பேரைத்தான் இன்னைக்கு உங்களுக்கு அறிமுகப்படுத்தப் போறேன். உங்களுக்கு அறிமுகமானவங்கதான், நல்லா தெரிஞ்சவங்கதான். ஆனா, எனக்குத் தெரிஞ்ச அவங்களை, அந்தப் பக்கத்தை உங்களுக்குத் தெரியாதல்லவா? அதைத்தான் அறிமுகப்படுத்துறேன். ஃப்ரண்ட்ஸ் படம் ஷூட்டிங் நடந்துகொண்டிருந்தப்போ ஒரு நாள்... என்னைப் பார்க்க புது டைரக்டர் ஒரு பையன் வந்திருந்தார். கஸ்தூரி ராஜா பையன் என தெரிந்தது. "சொல்லுப்பா..." என்று அவருடன் பேச அமர்ந்தேன். கொஞ்சம் கொஞ்சமாக நல்ல கேரக்டர்கள் செய்துகொண்டிருந்த நேரம். கதாபாத்திரங்கள் குறித்து எனக்கே ஒரு எதிர்பார்ப்பு மனதில் உருவாகியிருந்தது. கொஞ்சமாவது கவனிக்கப்படும் பாத்திரம், முக்கியமான பாத்திரங்களாக மட்டும்தான் அப்போ நடிச்சுக்கிட்டுருந்தேன். அந்த மைண்ட் செட்டோட உட்கார்ந்து பேச ஆரம்பித்தேன்.

கதை சொல்லும் முன், நேரே என் கேரக்டரை சொன்னார். நான் ஒரு நிமிஷம் ஷாக் ஆயிட்டேன். "என்னது ஸ்கூல் வாசல்ல செக்ஸ் புக் விக்கணுமா?" என்றேன். "ஆமா சார், ஆனா முக்கியமான ரோல் சார். ஆரம்பம்தான் இப்படி, பின்னாடி நல்லா மாறிடும் சார் கேரக்டர்" என்றார். "நானே இப்போதான் நல்ல நல்ல கேரக்டரா நடிச்சுக்கிட்டு இருக்கேன். இப்போ போய் இப்படி ஒன்னு சொல்றியே... அய்யயோ... ஆளை விடுப்பா" என்று கொஞ்சம் இறங்கி கெஞ்சியே விட்டேன். செல்வராகவன் விடவில்லை. 'இன்னும் டெவலப் பண்றேன் சார், முழு கதை கேளுங்க' என்று அவரும் கெஞ்ச, பின்னர் "சரிப்பா...பண்றேன். ஆனா, சொன்னது குறையாம படம் எடுக்கணும்" என்று அந்தப் படத்தில் இறங்கத் துணிந்தேன்.

முதல் நாள் ஷூட்டிங்... ஸ்கூல் வாசலில் உட்கார்ந்து புத்தகங்கள் விக்கும் காட்சி. 'அந்த' மாதிரி புத்தகங்கள்தான் மெயின். "படம் பாத்துட்டு தந்தர்றேன்"னு ஒரு பையன் புக்கை எடுப்பான். "படத்துக்குதான்டா காசே, படம் இல்லாட்டி எவன் வாங்குவான், குட்றா" என அவனை அதட்டி புத்தகத்தைப் பிடுங்குவேன். இப்படி போனது அந்தக் காட்சி. கூட நடிச்சதெல்லாம் சின்னச் சின்ன பசங்க. எனக்கு சுத்தமா நம்பிக்கையே வரல. குழப்பமாவே இருந்தேன். 'இது நல்ல படம்தானா? தேவையில்லாம வந்து மாட்டிகிட்டோமா'னு யோசிச்சுகிட்டே ப்ரேக்ல உட்கார்ந்துருக்கேன். எதிர்ல ஒல்லியா, வெட வெடன்னு ஒரு பையன் வந்து உட்கார்ந்தான். "சார்... எப்படி சார் இப்படியெல்லாம் நடிக்கிறீங்க?" என்று கேட்ட அந்தப் பையன் தனுஷ். "டேய்... இதெல்லாம் பெரிய நடிப்பா? அடப்போப்பா, நானே என்ன குழப்பத்துல இருக்கேன்னு தெரியாம நீ வேற" என்று சலிப்போடு பதில் சொன்னேன்.

கஸ்தூரிராஜாவின் இன்னொரு மகனான இவரும் படத்தில் நடிக்கிறார் என்பது அப்புறம் தெரிந்தது. ஏதோ 'அந்த ஒரு படத்துக்கு ஏற்ற சின்ன பசங்களையா கூப்பிட்டுருக்கார். அதுல தனுஷும் ஒருத்தர்' என்னும் அளவிலேயே அப்போது தனுஷைப் பற்றி நான் நினைத்தேன். செல்வராகவனுக்கு தனுஷை வைத்து பெரிய திட்டங்கள் இருந்தது எனக்குத் தெரியாது. ஆனால், அந்தப் படத்தில், முன்பு என்னிடம் சொன்னது போலவே என் கேரக்டரை நல்லா டெவலப் பண்ணியிருந்தார் செல்வராகவன். ஊட்டியில் இரவு இரண்டு மணிக்கெல்லாம் ஷூட்டிங் நடக்கும், கடுமையா உழைச்சது அந்த டீம். இறுதிக் காட்சியில் சென்டிமென்ட்டா வருவது போல வைத்து என் கேரக்டரை நல்லா உருவாக்கியிருந்தார். எனக்கு அதெல்லாம் பார்த்துதான் நிம்மதியே வந்துச்சு.

படம் வெளிவந்தது... 'இயக்கம் கஸ்தூரிராஜா' என்ற டைட்டிலுடன். முதலில் போஸ்டர்கள், விளம்பரங்களையெல்லாம் பார்த்து வேற மாதிரி நினைச்சு ரசிகர்கள் வந்தாலும், படத்தைப் பார்த்த பின் அவர்கள் எண்ணம் மாறியது. 'மணி' என்ற அந்த கேரக்டரையும் அதில் என் நடிப்பையும் பலரும் பாராட்டினார்கள். பாடல்களும் சூப்பர் ஹிட், படமும் சூப்பர் ஹிட். உடனே 'காதல் கொண்டேன்' ஆரம்பிச்சு, படமும் வெளிவந்து, தமிழ்நாடே அந்த ரெண்டு பேரையும் திரும்பிப் பார்த்தது. சினிமா வட்டத்துல எங்க பார்த்தாலும் அவுங்களைப் பற்றியும், 'காதல் கொண்டேன்' படம் பற்றியும்தான் ஒரே பேச்சு. தனுஷ் நடிப்பில் கலக்கிட்டார். தனுஷைப் பார்த்தபோது சொன்னேன், "தனுஷ்... நீ என்கிட்ட கேட்டீல, எப்படி சார் நடிக்கிறீங்கன்னு, நான் நடிச்சதெல்லாம் நடிப்பில்லை. எதுவுமே தெரியாத மாதிரி இருந்து இப்படி நடிச்சு இருக்கீல நீ, இதுதான்யா நடிப்பு" என்று. சிரித்தார், அடக்கத்தோடு.



அதன் பின் தனுஷுக்கு நானே ஒரு ஸ்க்ரிப்ட் ரெடி பண்ணினேன். 'ஓடிப்போலாமா'னு டைட்டில். கதை தனுஷுக்கு ரொம்பப் பிடிச்சு ஓகே பண்ணிட்டார். கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில், பிரமிட் நடராஜன் தயாரிப்பதாக முடிவு பண்ணி வேலைகளெல்லாம் தொடங்கின. நம்ம பழைய ராசி சும்மா இருக்குமா? என்னதான் வெற்றிகளைப் பார்த்தாலும் பழைய எஃபக்ட்ல இந்தப் படமும் நின்றுவிட்டது. பிரமிட் நடராஜனுக்கு திடீரென சில பிரச்சனைகள். அப்படியே கைவிடப்பட்டது 'ஓடிப்போலாமா' படம். அதன் பின்னர் தனுஷ் கே.எஸ். ரவிக்குமார் இயக்கத்தில் நடிக்கவே இல்லை. அந்தப் படத்தையும் நாங்க வேற யாரையும் வச்சு எடுக்கல. இப்பவும்கூட தனுஷுக்கு ஏற்ற கதைதான் அது. அந்தக் கதை, தனுஷுக்காகக் காத்திருக்கு. சரியென்று சொன்னால் பண்ணிடலாம்.

இன்றைக்கு தனுஷ் இருக்கும் உயரம் மிகப்பெரியது. அன்று, ஒல்லியா, சாதாரணமா, யாருமே கவனிக்காத ஒரு பையனா உள்ள வந்த தனுஷ் இன்றும் கிட்டத்தட்ட அதே உடம்போடுதான் இருக்கார். ஆனா, உலகையே தன்னை கவனிக்க வைக்கிறார். பாடுவது, எழுதுவது, இயக்கம் என எல்லாவற்றிலும் வெற்றி. செல்வராகவனும் அப்படித்தான். 'துள்ளுவதோ இளமை' எடுத்தவர் '7ஜி ரெயின்போ காலனி', 'புதுப்பேட்டை', 'ஆயிரத்தில் ஒருவன்' எல்லாம் எடுப்பாரென்று பலர் நினைத்திருக்கமாட்டார்கள்.

இந்த ரெண்டு பேருக்குள்ளயுமே அந்த நெருப்பு இருந்துருக்கு. அது இன்னும் அணையாம இருக்கு. பெரிய வெளிச்சமா அவ்வப்போது ஒளிருது. எனக்கு ஒரே சந்தோஷம் என்னன்னா, அவங்களோட முதல் படத்தில் நான் இருந்தேன் என்பதுதான். **(தொடரும்)**

# மட்டக்களப்பு ரயில் பாதை நிந்தவூரைத் தொட்டுச் செல்லுமா?

கலாபூசணம்
ஏ.எல்.எம். சலீம்

இலங்கையின் நீண்ட ரயில் பாதைகளுள் ஒன்றான கொழும்பு, மட்டக்களப்பு ரயில் பாதை. மட்டக்களப்பின் தெற்கே பொத்துவில் வரை விரிவாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை பல்லாண்டு காலமாக நீடித்து வருகின்றது. மட்டக்களப்பு தென் பகுதியில் குறிப்பாக அம்பாறை மாவட்டத் தமிழ், முஸ்லிம் மக்கள் இந்த ரயில் பாதை விரிவாக்கத்தின் மூலம் ரயில் பயணங்களை இலகுவாக மேற்கொள்ளவும், தமது பிரதான உற்பத்திகளான நெல், மீன் மற்றும் தானியங்களை வெளிப்பிரதேசங்களுக்கு எடுத்துச் சென்று பொருளாதார வளம் பெறவும் வாய்ப்புக்கள் ஏற்படும்.

பிரதேச அபிவிருத்திக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் மிக அவசியமெனக் கருதப்படும், மட்டக்களப்பிலிருந்து சுமார் 115 கிலோ மீற்றர் தூரத்திலான (பொத்துவில் வரை) இந்த ரயில் பாதை விரிவாக்கம் மூலம் இடம்பெறும் ரயில் சேவைக்கான கனவு என்றுதான் நிறைவேறுமோ? என்ற மக்கள் ஆதங்கம் நீடித்தே வருகின்றது. சுதந்திரத்துக்குப் பின் மாறி, மாறி வந்த அரசுகள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கும், ரயில் சேவை விரிவாக்கத்துக்காக புதிய ரயில் பாதைகளை அமைத்து வருகின்ற போதிலும், மேற்படி கிழக்கிலங்கை ரயில் பாதை விடயத்தில் பாரா முகமே காட்டிவருகின்றன.

ஆனால், நடைபெற்று வந்த ஒவ்வொரு தேர்தலிலும் அம்பாறை மாவட்டத்தில் நடந்த முக்கிய தேர்தல் பரப்புரை மேடைகளில் ஆட்சித் தலைவர்களும், தேசியக் கட்சித் தலைவர்களும் மட்டக்களப்பு ரயில் சேவையை தெற்கே பொத்துவில் வரை அல்லது அக்கரைப்பற்று வரை விரிவாக்கித் தருவோம் என்ற வாக்குறுதியை அள்ளி வீசாத சரித்திரமே இல்லை எனலாம்.

மறைந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாச தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தில் வர்த்தக, வாணிப, கப்பல் துறை அமைச்சராக பதவி வகித்த மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூர் ஈரான் இஸ்லாமியக் குடியரசுக்கு சென்றிருந்த வேளையில், மட்டக்களப்பில் இருந்து பொத்துவில் வரை ரயில் சேவையை விஸ்தரிப்பு செய்வதற்கு உதவுமாறு விடுத்த வேண்டுகோள், அந்நாட்டு அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பொறியியலாளர் குழுவொன்று இங்கு அனுப்பி வைக்கப்பட்டு, ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் அன்றைய மதிப்பீட்டு அறிக்கையின்படி 400 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்கும் ஈரான் முன்வந்திருந்தது.

எனினும் அப்போது வடக்கு கிழக்கில் நிலவிய யுத்த சூழ்நிலை மற்றும் நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக மர்ஹூம் மன்சூர் மேற்கொண்டு வந்த முயற்சி தடைப்பட்டது. என்றாலும் அரசியல் அதிகாரம் அற்ற நிலையிலும் அவர் மரணிக்கும் வரை இவ்விடயத்தில் மிக ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு வந்தார். ஆனால் அவரது நீண்டகால கனவு நனவாகவில்லை.

இறுதியாக கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது 2014 டிசெம்பர் 29 ம் திகதி கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசல் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில், இன்றைய நல்லாட்சியின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மட்டக்களப்பு ரயில் சேவையை பொத்துவில் வரை விரிவாக்கும் வாக்குறுதியை அளித்திருந்தார்.

இதனை ஞாபகமூட்டி, கல்முனை மாநகரசபை மாதாந்தக் கூட்டமொன்றிலும் முன்னாள் பிரதிமேயர் ஏ.எல். அப்துல் மஜீத் பிரேரணை ஒன்றை முன்மொழிந்து, நிறைவேற்றி, ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப் பட்டமையும் இங்கு சுட்டிக்காட்டத் தக்கது.

அன்று இலங்கையில் சட்டநிருபண சபை, சட்டநிறைவேற்று சபை ஆகிய இரு சபைகளை உள்ளடக்கிய சட்ட சபை நடைமுறையிலிருந்த போது மதிப்புக்குரிய அமரர். ஈ.ஆர். தம்பி முத்து நியாயவாதி, இந்தப் பகுதியின் (கிழக்கின்) பிரதிநிதியாகக் கடமையாற்றினார்.

அந்தக் காலத்தில் சிறந்த கல்விமானும், மதியூகியும், வாதிடும் திறமை வாய்ந்தவருமான அவர்



மிகுந்த சிரமத்துடன் போராடி மட்டக்களப்புப் பகுதி இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் ரயில் சேவை மூலம் தொடர்புகொள்ளவாய்ப்பிருக்க வேண்டுமென்றும். அதற்காக மட்டக்களப்பின் தெற்கே முப்பதுமைல் தொலைவிலுள்ள நிந்தவூர்வரை புகையிரதச் சேவை விரிவாக்கப்பட வேண்டுமெனவும், அதற்கென மட்டக்களப்பு வாவியின் குறுக்கே ஓர் பாலம் அமைக்கப்பட வேண்டுமெனவும், தீர்மானமொன்றை நிறைவேற்றுவதில் வெற்றிகண்டார்.

அதன் படி மட்டக்களப்பின் தெற்கே நிந்தவூர் வரையும் ரயில் பாதை அமைப்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, பணமும் ஒதுக்கப்பட்டு, வேலையும் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கெனவே கல்லடிப் பாலமும் அமைக்கப்பட்டது மட்டுமன்றி, இந்தக் கல்லடிப் பாலம் மட்டக்களப்பு ரயில் பாதைக்கு நேரே கட்டப்பட்டிருப்பதும் தெற்கே நிந்தவூர் வரையான ரயில் நீடிப்புக்காகவே என்பதும் சான்றாகும். மேலும், அப்போதைய அரசினால் அச்சிடப்பட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்ட பெரிய இலங்கைப் படங்களில் போடப்படுகின்ற ரயில் பாதை என இந்த மட்டக்களப்புரயில் பாதை நிந்தவூர் வரை குறிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் சகல பாடசாலைகளுக்கும் அப்பொழுது விநியோகிக்கப்பட்ட இலங்கைப் படங்கள் இதற்குச்சான்றெனினும், அநேகர் இந்த உண்மையை அறியாதிருந்தனர். ஆனாலும். ஆட்சியினர் தேவைக்காக மட்டக்களப்புப் பட்டினம் வரை ரயில் பாதையை அமைத்து விட்டு, அத்துடன் நிறுத்திக் கொண்டனர். மட்டக்களப்புத் தென்பகுதி சுதேசிகளின் நலன் அன்று அவர்களுக்குப் பெரிதாகப்படவில்லை. அதாவது வறண்ட காட்டுப் பிரதேசங்களுக்கூடாக (அன்று) ரயில் சேவையை விரிவாக்கி விட்டு. செல்வச் செழிப்புகளும் சனப்பெருக்கமும் நிறைந்த நிந்தவூர் வரையுள்ள ரயில் பாதை விரிவாக்கத்தைக் கைவிட்டனர்.

மட்டக்களப்பு தென் பகுதியிலுள்ள களுவாஞ்சிக்குடி, மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, சாயந்த மருது, காரைதீவு, நிந்தவூர், சாம்மாந்துறை, இறக்காமம், சென்ரல் கேம்ப், அட்டாளைச்சேனை, அக்கறைப்பற்று, திருக்கோவில், பொத்துவில் முதலான பிரதேச தமிழ், முஸ்லிம் மக்கள் இன்று தமது போக்குவரத்துக்கென ரயில் சேவையைப் பெற, பல்வேறு சிரமங்கள், காலவிரயங்களுக்கு மத்தியில் மட்டக்களப்புக்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. குறிப்பாக ஆசனப் பதிவுகளை மேற்கொள்வது கூட முயற்கொம்பாகவிருப்பதுடன் அதற்கென ஒரு முழு நாளையே செலவிட வேண்டியுள்ளது.

நல்லாட்சி அரசாங்கமானது பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியும் தேர்தல் வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்றியும் வருகின்ற போதிலும் கல்முனையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதி மாத்திரம் இன்னும் வெற்று வக்குறுதியாகவே இருந்து வருகின்றது.

இந்நிலையில் சபாநாயகர் தலைமையில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட அரச உயர்மட்ட தூதுக்குழுவில் பங்கேற்றிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், இக்கோரிக்கையை இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் வலியுறுத்தியுள்ளார். இதனைக் கவனத்தில் கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்திய அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வ வேண்டுகோள் ஒன்றைமுன்வைப்பதன் மூலம் அமைச்சர் ஹக்கீமின் கோரிக்கை வலுப்பெறும் என்பதுடன் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி தருவதற்கும் உதவும்

எனவே தேர்தல் கால வெற்று வாக்குறுதியாகவும், வரும் அரசியல் தலைமைகளுக்கு உள்ளூர் அரசியல் வாதிகள் சொல்லிக் கொடுத்துச் சொல்லும் வாக்குறுதியாகவும் இந்த விடயம் தொடரக்கூடாது. பிரதேச அரசியல்வாதிகள். தமிழ், முஸ்லிம் மக்களின் தலைவர்கள் எனப்படுவோர் இன்றைய நல்லாட்சி அரசுக்கு அழுத்தம் கொடுத்து, மட்டக்களப்புத் தென்பகுதிக்கான ரயில் சேவை விரிவாக்கத்துக்கு ஆவன செய்ய இனியாவது முன் வரமாட்டார்களா? மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

# காட்டுப் பிரதேசத்தில் நிறைவடைந்த பயணம் 15




ஸாகிரெப் பேருந்து நிலையத்தில் அதிக நேரம் நாங்கள் காத்திருக்கவேண்டியிருக்கவில்லை. பத்து நிமிடங்களுக்குள்ளேயே சாரதியும் அவரது உதவியாளர் ஒருவரும் வந்து பேருந்தின் கதவுகளைத் திறந்துவிட்டார்கள். அந்த நிலையத்தில் எங்களைத் தவிர நாலைந்து பேர்தான் நின்றார்கள். அவர்கள் எல்லோருமே உள்ளூர் பிரயாணிகள் என்பது புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. அதிக பிரயாணிகள் இல்லாததைக் கண்டவுடனேயே ஏற்கனவே பிரயாணச் சீட்டு வாங்கியிராத எங்களை ஏற்றிச்செல்லச் சாரதி மறுக்கமாட்டார் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. மற்றப் பயணிகள் எல்லோரும் ஏறிக்கொள்ளும்வரை காத்திருந்தேன்.

பேருந்துச் சாரதியை அணுகி மத்திய பேருந்து நிலையத்தின் கணணியில் கோளாறு காரணத்தால் எங்களால் பயணச்சீட்டு எடுக்க முடியவில்லை என்பதை விளக்கி எங்களை ஏற்றிக்கொள்ள முடியுமா என்று கேட்டேன். நாங்கள் சுற்றுலாப் பிரயாணிகள் என்பதைக் கண்டுகொண்டு எந்த இடத்தில் இறங்கவேண்டும் என்று கேட்டார் சாரதி. நான் என்னிடமிருந்த தங்குமிட விடுதியின் விலாசத்தைக் காட்டி அங்கே அறை ஒழுங்குசெய்திருப்பதைச் சொல்லி, அதற்காக எந்த நிறுத்ததில் இறங்கிக்கொள்ளவேண்டும் என்பதைச் சாரதிதான் விளக்க வேண்டும் என்றேன்.

இந்த இருட்டுக்குள் எங்கள் பயணப் பெட்டிகளுடன் எங்கெங்கே அலையவேண்டி வருமோ என்று மிகவும் கவலையுடன் யோசித்துக் கொண்டிருந்த எங்களுக்கு அந்தப் பேருந்துச் சாரதியின் நடத்தை மிகவும் சந்தோசமாக இருந்தது என்பதைச் சொல்லத் தேவையில்லை. பயணச்சீட்டுக்கான தொகையை எங்களிடம் வாங்கிக்கொண்டார் சாரதி. பயணச்சீட்டொன்றும் தரவில்லையே என்றெல்லாம் அச்சமயத்தில் நான் யோசிக்கவே இல்லை. இப்படியான ஒரு தருணத்தில் எதிர்பாராத உதவி கிடைத்ததைவிட வேறென்ன வேண்டும்?

நேரத்துக்குப் புறப்பட்டது அந்தப் பேருந்து. மொத்தம் நாலே நான்கு பயணிகள்தான் இருந்தார்கள் பேருந்தில். அந்தப் பெரிய பேருந்துக்குள் அவர்கள் இருந்ததே தெரியவில்லை. நாங்கள் இறங்கவேண்டிய இடத்தைச் சேர சுமார் இரண்டரை மணிக்கு மேலாகும் என்று சொல்லிய சாரதி நாங்கள் இறங்கவேண்டிய இடம் வரும்போது சொல்வதாகச் சொல்லி, தனக்குப் பின்னால் முதல் வரிசையிலிருந்த ஆசனத்தில் எங்களை இருக்கச் சொன்னார். மகன் கதிர் தான் தனியே இன்னொரு ஆசனத்தில் இருக்கப்போவதாகச் சொல்லிவிட்டான்.



நாங்கள் டுப்ரோவ்னிக் நகரிலிருந்து வந்த பேருந்து ஒரு கடுகதி தொலைதூரச் சேவைப் பேருந்து. விரைவாக ஓடியதுடன் மிகவும் குறைவான இடங்களிலேயே நின்றது. இது ஸாகிரெப் புறநகர்களூடாகப் போகும் பேருந்து என்பதால் நகரைச் சுற்றிவளைத்துப் போகும் என்று சொன்னார் சாரதி. எங்கள் பிரயாணத்தில் ஸாகிரெப் நகரைச் சுற்றிப் பார்ப்பது என்ற திட்டம் இருக்கவில்லை என்பதால் இதை ஒரு நகரச் சுற்றுலாப் பயணப் பேருந்து என்று நினைத்துக்கொள்ளும்படி சொல்லிச் சிரித்தார் அவர்.

நகரின் முக்கிய வீதிகளுக்கூடாக ஓட ஆரம்பித்த பேருந்து குடியிருப்புப் பிராந்தியங்களுக்குள்ளுள் போய்ச் சுற்ற ஆரம்பித்த பின்பு ஆங்காங்கே சிலர் ஏறி, இறங்கத் தொடங்கினார்கள். அப்படிப் பயணிப்பவர்களில் பெரும்பாலானோரிடம் மாதப் பயணங்களுக்கான பயணச் சீட்டு இருந்தது. சிலர் மட்டும் பயணச் சீட்டு வாங்கிக்கொண்டார்கள். நகரப் பேருந்துகளில் சாரதிகள் கூடியவரை கையில் பணம் வைத்துக்கொள்ள விரும்புவதில்லை. ஏனெனில் அவர்களிடம் பணம் இருப்பின் வழியில் யாராவது தாக்கி அவர்களிடம் பணத்தைப் பறித்துக் கொள்ளலா்ம். அதனால், பேருந்து ஊழியர்களின் சங்கத்தினர் பயணச்சீட்டுக்களை ஒரு அதற்கான அலுவலகங்களில் மட்டும் வாங்கிக்கொள்ளும்படி கோரி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் அங்கே.

நான் வசிக்கும் சுவீடனிலும் நிலைமை அப்படித்தான். புறநகர்களின் ஊடாகப் பேருந்துகள் இரவில் போகும்போது மிகக் குறைவான பயணிகளே இருப்பார்கள். அதனால், சாரதிகளைத் தாக்கிவிட்டு அவர்களிடம் இருக்கும் பணத்தைப் பறித்தெடுப்பது சில தடவைகள் நடந்திருக்கிறது. எனவே, தற்போது சுவீடன் பேருந்துகளில் பணம் கொடுத்துப் பயணச் சீட்டு எவருமே வாங்கமுடியாது. கைப்பேசிகளின் மூலம் குறிப்பிட்ட இலக்கத்துக்கு அழைத்துப் பயணச் சீட்டுக்களுக்கான கட்டணத்தைப் பயணிகள் தமது வங்கிக் கணக்கிலிருந்து செலுத்திவிட்டுச் சாரதியிடம் அதைக் காட்டலாம். அல்லது பேருந்தில் நேரடியாகத் தங்கள் வங்கி அட்டையிலிருந்து பயணச்சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம். கிரவேஷியாவிலும் அதேபோன்ற வழக்கத்தையே கொண்டுவர விரும்புகிறார்கள் என்று சொன்னார் பேருந்துச் சாரதி.


நாட்டின் மக்கள் அதிகம் வசிக்காத இடங்களின் ஊடாக எங்கள் பயணம் தொடர்ந்தது என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. ஐரோப்பியக் கோடை இரவு நேரத்தில் அத்தனை வேகமாக இருட்டி விடுவதில்லை. ஆனாலும், இரவு ஒன்பது மணியைத் தாண்டி விட்டதால் இருள் ஆக்கிரமிக்க ஆரம்பித்திருந்தது. அதிலும் நாங்கள் அடர்த்தியான காட்டுப் பகுதிகளின் ஊடாகப் பயணித்ததால் இருளை இன்னும் கடுமையாக உணர முடிந்தது. மனிதர்களும் வாழாத பகுதியாததால் வீடுகளும் அதிகமில்லை. இடைய்டையே சிறு சிறு கிராமங்களை மட்டும் தாண்டினோம். தனியே ஒரு மூவர் இருக்கையில் இருந்து வெளியே பார்த்துக்கொண்டிருந்த கதிர், அதிலேயே படுத்து உறங்கிவிட்டான். சாரதியும் மௌனமாக வாகனத்தை ஓட்டிக்கொண்டிருந்தார்.

இரவு சுமார் பதினொரு மணியிருக்கும், சாரதி என்னிடம் "இன்னும் பத்து நிமிடங்களில் நீங்கள் இறங்குமிடம் வந்துவிடும்," என்று சொன்னபோது. களைப்பில் எனது கண்கள் அடிக்கடி தானே மூடிக்கொண்டிருந்தன அந்தச் சமயத்தில். சுதாரித்துக்கொண்டு எழும்பி மகனை எழுப்பி, இறங்கவேண்டிய இடம் வருகிறது என்றேன். கண்ணைக் கசக்கிக்கொண்டு கனவு ராஜ்யத்திலிருந்து எழும்பினான்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

# MONEY மனேஜ்மென்ட் 02

## வங்கி சேமிப்புக் கணக்கு ஏன் அவசியம்?



பணப் பரிமாற்றம், பங்குச் சந்தை, மியூச்சுவல் ஃபண்ட் போன்ற நிதித் திட்ட முதலீடுகளுக்கும், வீட்டுக் கடன், கார் கடன் போன்ற முக்கிய கடன்கள் வாங்கவும் வங்கிக் கணக்கு மிக அவசியமான ஒன்றாக இருக்கிறது.

வங்கிச் சேமிப்புக் கணக்கின் முக்கிய பயன் என்னவெனில், பணம் தேவைப்படும்பட்சத்தில் எப்போது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். இப்போது மூலை முடுக்கெல்லாம் ஏடிஎம் மையங்கள் வந்துவிட்டதால், டெபிட் கார்டை பயன்படுத்தி, நினைத்த நேரத்தில் பணத்தை எடுத்துக்கொள்ளலாம்.

கணக்கில் இருக்கும் பணம் பாதுகாப்பாக இருப்பதுடன், அதற்கு குறைந்த பட்சம் 4% வட்டி தரப்படுகிறது. சில வங்கிகளில் முதலீட்டுத் தொகை ரூ.1 லட்சத்தை தாண்டும் போது 67% வரை வட்டி தரப்படுகிறது.

### சேமிப்புக் கணக்கு வருமானம்!

சேமிப்புக் கணக்கு மூலம் கிடைக்கும் வட்டி வருமானம், பணவீக்க விகிதத்தைவிட (விலைவாசி உயர்வு) அதிகமாக இருக்க வாய்ப்பு மிகக் குறைவு. உதாரணத்துக்கு, பணவீக்க விகிதம் 6%, வங்கி சேமிப்புக் கணக்கு வட்டி 4% என்றால் உண்மையான வருமானம் (46%) 2%. எனவே, சேமிப்புக் கணக்கில் அதிகத் தொகையைப் போட்டு வைப்பது லாப கரமாக இருக்காது.

ரூ.1 லட்சத்துக்கு மேல் வங்கி சேமிப்புக் கணக்கில் போட்டு வைக்க வேண்டிய சூழ்நிலை இருந்தால், பல வங்கிகளில் பிரித்துப் போட்டு வைக்கலாம். அல்லது குடும்ப உறுப்பினர்களின் பெயரில் உள்ள வங்கிக் கணக்கில் போட்டு வைப்பதன் மூலம் பாதுகாப்பைத் தேடலாம்.

இலங்கையை பொறுத்தவரையில், வங்கிகள் திவால் என்பது அரிதான விஷயம்தான். அதுவும் பொதுத்துறை வங்கிகள் திவால் ஆவதற்கான வாய்ப்பு மிக மிகக் குறைவு. அப்படியே நடந்தாலும் அந்த வங்கி வேறு வங்கியுடன் இணைக்கப்பட்டு விடும் என்பதால், வங்கிக் கணக்கில் போட்ட பணம் பறிபோய் விடுமோ என்று பயப்படத் தேவை இல்லை.

என்றாலும், வங்கிக் கணக்கு என்பது ஒவ்வொருவருக்கும் தேவைப்படும் அடிப்படை விஷயம் மட்டுமே. அதை எல்லாமாக நினைத்து நாம் தேங்கி நின்றுவிடக் கூடாது. அப்படியானால், அடுத்து என்ன செய்ய வேண்டும்?

### வட்டி எப்போது கணக்கில் சேர்க்கப்படும்?

வட்டி தினசரி கணக்கிடப்படும். இதற்கு சொஃப்ட்வேர் வந்துவிட்டதால், வங்கியில் இருக்கும் தொகைக்கு ஏற்ப வட்டி போடப்படும். ஆனால், வட்டி ஆறு மாதங்களுக்கு ஒரு முறைதான் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப் படும். உதாரணத்துக்கு, ஜூன் 30 மற்றும் டிசம்பர் 31 ஆகிய திகதிகளில் வட்டி வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

### வட்டி எப்படிக் கணக்கிடுகிறார்கள்?

வங்கி சேமிப்புக் கணக்கில் ஒரு மாதத்துக்கு ஒரு முறை எப்படி வட்டி கணக்கிடப்படுகிறது என்பதைப் பார்ப்போம். ஒருவர் ரூ.10 லட்சம் ரூபாயை 1ம் திகதி வங்கிக் கணக்கில் டெபாசிட் செய்கிறார். இதில் ரூ.9.8 லட்சத்தை 25ம் தேதிகதி எடுக்கிறார். மாதக் கடைசியில் அவர் கணக்கில் ரூ.20 ஆயிரம் இருக்கிறது. (இவருக்கான வட்டிக் கணக்கை எதிர்ப்பக்கமுள்ள அட்டவணையில் பார்க்கவும்).


வங்கி சேமிப்புக் கணக்கை சரிவர பராமரிக்கவில்லை எனில், அதற்கு அபராதம் இருக்கிறது.


1. நீங்கள் தந்த காசோலை பணமில்லாமல் திருப்பி அனுப்பப் பட்டால் (செக் பவுன்ஸ்) அபராதம் உண்டு.
2. உங்கள் கணக்கில் கலெக் ஷன் போட்ட வேறு வங்கியின் செக் பணம் இல்லாமல் திரும்பினால் அபராதம் விதிக்கப்படும்

அடுத்து, வங்கிக் கணக்கில் பணம் போடும்போதும் எடுக்கும்போதும், அதனை எஸ்எம்எஸ் ஆகக் கொடுக்கும் வசதியை அவசியம் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இதற்கு உங்கள் செல் நம்பரை வங்கிக் கணக்குடன் இணைக்க வேண்டும். இதற்கென தனிப் படிவம் அல்லது விண்ணப் படிவத்திலே இதற்கான இடம் இருக்கும். அப்படிச் செய்யும்போது, நீங்கள் எந்தத் தொகைக்கு மேல் கணக்கில் போட்டாலும் அல்லது எடுத்தாலும் (உதாரணத்துக்கு ரூ.1,000) உங்களுக்கு எஸ்எம்எஸ் அனுப்பப்படும்.

(பணம் பெருகும்)

---





அ்வன்.

சாரதி மெதுவாக பேருந்தை நிறுத்தினார். வெளியே நின்ற காரிலிருந்து ஒருவர் இறங்கி வந்து வண்டிக்குள் ஏறினார். சாரதியுடன் சிரித்துக் கதைத்துவிட்டு "என் பெயர் நிக்கோ," என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். அவர்தான் நாங்கள் தங்கப்போகும் விடுதியின் உரிமையாளர் என்று புரிந்துகொண்டேன்.

எங்களது பயணபெட்டி எங்கேஎன்று கேட்டு அவைகளில் பெரியதை நிக்கோ தூக்கிக்கொண்டார். நான் பேருந்துச் சாரதியின் கையைக் குலுக்கி நன்றி சொல்லி விடைபெற்றுக்கொண்டேன். அரைகுறை நித்திரையுடன் கீழே இறங்கிய கதிரின் தலையைத் தடவி "போய் வாருங்கள்," என்று அன்புடன் சொன்னார் அவர்.

கீழிறங்கிக் காருக்குள் ஏறியதும் நிக்கோ அதைச் செலுத்தத் தொடங்கினார். மணி இரவு பதினொன்றைத் தாண்டியிருந்தது. வெளியே எதுவுமே தெரியாத இருட்டு. பிரதான பாதையிலிருந்து பிரிந்த ஒரு கிளை வீதியில் காரைத் திருப்பினார் நிக்கோ.

"நீங்கள் இரவு ஏதாவது சாப்பிட்டீர்களா?"

நிக்கோவின் கேள்விக்குப் பதிலாக நாங்கள் எங்கள் அன்றைய பயணத்தைப் பற்றிச் சொன்னேன்.

"இங்கே பக்கத்தில் கடைகளெதுவும் இல்லை. இப்போதைக்கு நான் உங்களுக்குச் சாப்பிடுவதற்காக சாண்ட்விச்சும், சூப்பும் ஒழுங்கு செய்திருக்கிறேன். நிறையக் களைத் திருப்பீர்கள். உடலைக் கழுவிச் சாப்பிட்டுவிட்டு உறங்கி ஆறுதலாக எழும்புங்கள், நாளை காலையில் சாவகாசமாகப் பேசலாம்."


அவர் சொல்லி முடிக்கவும் கார் தங்கும் விடுதிக்குப் போய்ச் சேர்ந்திருந்தது.

அது ஒரு இரண்டு மாடி வீடு. வெளியே பெரிய முற்றம் இருந்தது தெரிந்தது. அதைத் தவிர அவ்விருட்டில் வேறொன்றையும் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

எங்களை உள்ளே கூட்டிச்சென்று தங்குமறையைக் காட்டினார் நிக்கோ. குளியலறையும் மலசலகூடமும் அறையுடன் சேர்ந்திருந்தன. வசதியான அறை.

பேருந்தில் நித்திரை கொண்டிருந்ததால் உற்சாகம் திரும்பி வந்திருந்தது கதிருக்கு. அவ்வறையிலிருந்த இரட்டைக் கட்டிலில் ஏறித் துள்ளிப் பார்த்தான் அவன். அவ்வீட்டின் சமையலறையிலிருந்த மேசையில் எங்களுக்காகத் தயார்ப்படுத்தப்பட்ட உணவைக் காட்டினார் நிக்கோ. அங்கேயே தேநீரோ, கோப்பியோ தயாரிக்க எல்லாம் இருப்பதையும் காட்டினார். அவ்விடுதியில் தங்குகிறவர்களுக்கான சாப்பாட்டு அறையையும் காட்டினார். அதன்பிறகு எங்களிடமிருந்து விடைபெற்றுச் சென்றார் நிக்கோ. தொடரும்.

# திருந்தாத ஹொங்கொங் வீரர்கள்!




ஹொங்கொங்கின் இர்பான் அகமட், நதீம் அகமட், ஹசீப் அம்ஜத் ஆகியோர் ஐசிசி ஆட்ட நிர்ணய சூதாட்ட தடுப்பு விதிகளை 19 முறை மீறி சூதாட்டத்தில் ஈடுபட்டதாக எழுந்த புகாரின் அடிப்படையில் இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 2015 உலகக்கோப்பை தகுதிச்சுற்று போட்டிகளில் சூதாட்டப்புகாரில் சிக்கியுள்ளனர். சகோதரர்களான இர்பான் மற்றும் நதீம் 2016 டி20 உலகக்கோப்பையிலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட போட்டிகளில் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதுதவிர இர்பான் மீது 2014 உலக டி20 தொடர் சிம்பாவேவுக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் சூதாட்டத்தில் ஈடுபட்ட புகாரும் கூடுதலாக உள்ளது. அதேபோல் உலக டி20 தகுதிச் சுற்றுப் போட்டிகளில் 2015லும் ஒரு போட்டி அல்லது அதற்கு மேற்பட்ட போட்டிகளில் சூதாட்டம் ஆடிய குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இர்பான் 9 முறை தவறிழைத்துள்ளார், சகோதரர் நதீம் 5 முறை தவறிழைத்துள்ளார்.

2014ல் ஆடப்பட்ட உலகக்கோப்பைத் தகுதி சுற்றில் கனடாவை ஹொங்கொங் 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது, இதற்கு முன்பாக ஸ்கொட்லாந்துடன் ஆடியது, இந்த 2 போட்டிகளிலும் இவர்கள் மூவரும் பேசிவைத்து மோசமாக ஆடியதாக புகார் எழுந்து நிரூபணம் ஆகியுள்ளது.

28 வயதான இர்பான் தொடக்க வீரரும் வேகப்பந்து வீச்சாளருமாவார். இவர் முன்னதாக ஐசிசி சூதாட்ட விதிமுறைகளை மீறியதற்காக இரண்டரை ஆண்டுகள் தடை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. அப்போது இவர் தவறிழைக்கவில்லை, ஆனால் சூதாட்டக்காரர்கள் தன்னை அணுகியதை இவர் முழு விவரத்துடன் ஐசிசிக்கு தெரியப்படுத்தவில்லை.



# விமானியாக கிரிக்கெட்டை துறந்த வீரர்!


விமான பைலட்டாக வர வேண்டும் என்பதற்காகச் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து 21 வயதில் ஹொங்கொங் அணி வீரர் கிறிஸ் கார்ட்டர் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 18வயதாக இருக்கும்போது விக்கெட் கீப்பராக இடம் பெற்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் அறிமுகமானார். இதுவரை 11 சர்வதேச ஒருநாள்போட்டிகளிலும், 13 டி20 போட்டிகளிலும் கார்ட்டர் விளையாடியுள்ளார்.


ஆசியக் கோப்பை தகுதிச்சுற்றுப் போட்டியின் போது, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான இறுதி ஆட்டத்தில் 33 ரன்கள் சேர்த்து ஹொங்கொங் அணியை ஆசியக் கோப்பைக்கு தகுதிபெறச் செய்ய கார்ட்டர் முக்கிய காரணமாக அமைந்தார். இந்த அணியின் இளம் வீரரான கிறிஸ் கார்ட்டர் கனவு என்பது கிரிக்கெட் வீரராக வேண்டும் என்பதை விட, விமான பைலட்டாக வேண்டும் என்பதுதான். ஆதலால், ஆசியக்கோப்பைப் போட்டி முடிந்தவுடன் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துவிட்டு, அவுஸ்திரேலியாவில் பெர்த் நகரில் 55 வார பைலட் பயிற்சிக்கு சென்றுள்ளார்.

# உயிர்பிழைத்ததே பெரிய கதை!

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் மத்யூ ஹைடன் கடலில் அலைச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்ட போது, மிகப்பெரிய விபத்தில் சிக்கி, ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

குயின்ஸ்லாந்தில் உள்ள நோர்த் ஸ்டிராட்போர்க் தீவுக்கு ஹைடன், தனது மகன், குடும்பத்தாருடன் வெள்ளிக்கிழமை சென்றார். அப்போது கடலில் அலைச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டுள்ளார். அப்போது, இந்த விபத்து நடந்துள்ளது. ஹைடனின் முதுகு தண்டுவடம்செல்லும்கழுத்துப்பகுதி, தலை, நெற்றுப்பகுதி, என பல்வேறு இடங்களில் பலத்த காயங்களுடன் படுத்தபடுக்கையாக உள்ளார். தற்போது ஓரளவு தேறிவரும் நிலையில் புகைப்படத்தை இன்ஸ்ட்ராகிராமில் பகிர்ந்துள்ளார். நாளேடுஒன்றிற்கு அளித்தபேட்டியில் மிகப்பெரிய ஆபத்தான விபத்தில் இருந்து தப்பித்து நான் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறேன். என்னைக் காப்பாற்றியவர்களுக்கு நன்றி. நான் அலைச்சறுக்கு விளையாட்டில் இருந்தபோது, தொடர்ச்சியாக அரை டஜனுக்கும் அதிகமான ராட்சத அலைகள் தொடர்ந்து என்னைத் தாக்கின. அப்போது அலை என்னை உள்ளே அமுழ்த்து சென்றதால், அதற்குள் சிக்கிக்கொண்டேன். அங்கிருந்து தூக்கி வீசப்பட்டு மிகப்பெரிய மணற்பரப்பில் நான் படுகாயங்களுடன் கிடந்தேன். என்னால் அந்த இடத்தில் இருந்து நகர்ந்து செல்லக்கூட முடியவில்லை. அப்பகுதியில் இருந்தவர்கள் என்னை மீட்டு சிகிச்சை அளித்தனர். அப்போது எனக்கு உடலில் பல்வேறு காயங்கள், எலும்பு முறிவுகள் இருப்பது தெரியவந்தது. நான் பிழைத்தது கடவுளின் கருணை' என்றார்.





# நண்பேண்டா!

WWE போட்டிகளில் சில காலம் ஒதுங்கியிருந்த பிக் ஷோ மீண்டும் அரங்கிற்குதிரும்பியிருக்கிறார். விசயம் அதுவல்ல.மனிதர் இப்பொழுது புதியவராகி விட்டார். 90 பவுண்ட்ஸ் எடையை இழந்திருக்கிறார். ஓய்வில் இருந்தபோது எடையை எப்படி இழந்தீர்கள் என்று கேட்டால், ஜோன் சீனாவின் பக்கம் கையை காட்டுகிறார். தனது நெருக்கமான நண்பராக சீனா ஒருமுறை சவால் விட்டதாகவும், அந்த சவாலை ஏற்று கடுமையான உடற்பயிற்சிகள், டயட் இருந்து எடையை குறைத்தேன் என்கிறார். நாற்பது வயதுக்குள் வந்தாலே உடல் எடையை சீராக பராமரித்தால்தானே, நீண்டகாலம் விளையாட முடியும் என்கிறார் பிக் ஷோ.

அதுசரி, அவரது எடை குறைப்பு பயிற்சிகளிற்கு டிப்ஸ் கொடுத்தது யார் தெரியுமா ஜோன் சீனாதானாம்!

# உகூரர்களைக் குடிபெயர்க்கும் சீனா



சீனா தனது சிறுபான்மை இனத்தவர்களில் ஒன்றான உகூரர்களை மறுவாழ்வு மையங்களுக்கு அனுப்பி சமூகத்தில் சேர்ந்து வாழ்வதற்குப் பழக்குவதாகச் சொல்லி அவர்களுடைய இனத்தின் அடையாளங்களைத் திட்டமிட்டு அழித்து வருகிறது என்று சமீப வருடங்களில் பல நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

சுமார் ஒன்று முதல் ஒன்றரை மில்லியன் உகூரர்கள் சீனாவில் வாழ்கிறார்கள். அதைத் தவிர துருக்கி, ரஷ்யா, உஸ்பெக்கிஸ்தான் ஆகிய நாடுகளிலும் வாழும் அவர்கள் இஸ்லாமியர்கள் ஆகும். சர்வதேச ரீதியில் சமீப காலத்தில் காணக்கூடியதாக இருக்கும் தீவிரவாதம் உகூரர்களிடையேயும் பரவிவருவதாகக் கூறும் சீனா அவர்கள் பரவலாக வாழும் பகுதிகளில் கண்காணிப்பை அதிகரித்துப் புதிய கட்டுப்பாடுகளையும் அறிமுகப்படுத்தி வருகிறது. உதாரணமாக, அவர்களின் பல பள்ளிவாசல்கள் தகர்க்கப்பட்டு, குரான் கல்வி தடைசெய்யப்பட்டது. குரான் கல்விக்குப் பதிலாக கம்யூனிஸ்ட் கோட்பாடுகளைக் கற்பதற்கு அவர்கள் கட்டாயமாக அனுப்பப்படுகின்றனர்.

அப்படியான நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நிறைவேற்றுவதற்காக உகூரர்கள் ஷிங்ஜியாங் நகரில் ஒரு முகாம் கட்டப்பட்டது. பலமான இராணுவ முகாமும், முக்கிய வளங்களையும் கொண்ட ஷிங்ஜியாங் பிராந்தியத்தில் உகூரர்கள் பெரும்பாலும் வாழ்ந்து வந்தனர். கடந்த வருட ஆரம்பத்திலிருந்து அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பகுதிகளிலிருந்து குடிபெயர்க்கப்பட்டு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறார்கள்.

தமது இனமும், பாரம்பரியமும் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருவதாக நீண்ட காலமாகவே குற்றஞ்சாட்டிவரும் உகூரர்களிடையே அவற்றுக்கு எதிரான அமைப்புக்களும் பிறந்திருக்கிருக்கின்றன. அவற்றில் சில தீவிரவாத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றன. அப்படியான நடவடிக்கைகள் சீனாவின் கம்யூனிச அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளை நியாயப்படுத்தச் சாதகமாக அமைந்து வருகின்றன.

சர்வாதிகார ஆட்சியான சீனா மாவோ சேதுங்கின் காலத்தில் கலாச்சார புரட்சி என்ற பெயரில் சீனாவின் வெவ்வேறு இனத்தவர்கள் அவர்கள் வாழ்ந்து வந்த இடங்களிலிருந்து குடியெழுப்பப்பட்டு வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். பொதுவுடமைக் கோட்பாடுகளின்படி நாட்டு மக்கள் அனைவருக்கும் புதிய ஒரு அடையாளத்தை உண்டாக்குவதற்காக அவர்களது பழைய அடையாளத்தை அழிப்பதற்கு அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நீண்ட கால இடைவெளிக்குப் பின்பு ஷி ஜின்பிங்கின் தலைமையின்போது மீண்டும் தூசி தட்டி எடுக்கப்பட்டிருக்கின்றன.

உகூரர்கள் மீதான சீனாவின் நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபை ஓரிரு மாதங்களுக்கு முன்னர் விவாதத்துக்கு எடுத்து நடந்து வருபவை பற்றிக் கவலை தெரிவித்திருக்கிறது. அமெரிக்க அரசும் சீனாவின் உயர் அதிகாரிகளுக்கு எதிரான சர்வதேசக் கட்டுப்பாடுகள் போடப்படவேண்டும் என்று ஜனாதிபதியை வேண்டி வருகின்றன.

சமீப வாரங்களில் ஷிங்ஜியாங் நகரில் இருக்கும் மறுவாழ்வு முகாம்கள் நிறைந்துவிட்டிருக்கின்றன. அதனால், ஒரு பகுதியினர் இரகசியமாக வெவ்வேறு நகரங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறார்கள். அந்த நகரைச் சுற்றியுள்ள போக்குவரத்து வழிகள் பொதுமக்களுக்கு முற்றாகத் தடை செய்யப்பட்டு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டிருப்பாதாகக் குறிப்பிடப்படுகின்றது. பல குடும்பங்கள் பிரிக்கப்பட்டு வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். வெளிநாடுகளில் அகதிகளாக வாழும் உகூரர்கள் பலரும் தங்களால் சீனாவில் வாழும் தமது உறவினர்களுடன் தொடர்பு கொள்ள முடியாமலிருப்பதாகவும் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரிகளால் இஷ்டத்துக்கு இடம்பெயர்க்கப்பட்டு வருவதாகக் குற்றஞ் சாட்டுகிறார்கள்.

உலக யன்னல்
தேசமித்ரன்




# ருமேனியாவில் ஒரு பொதுத்தேர்தல்

தனி மனிதர்களின் பாலியல் உரிமைகள் பற்றித் தாராளமனப்பான்மையான முடிவுகளை எடுத்துப் பெரும்பாலானவர்களையும் இந்திய உச்ச நீதிமன்றம் அதிரவ்வைத்துக்கொண்டிருக்கும் இதே சமயத்தில், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஒன்றான ருமேனியா தனது நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றத்தை உண்டாக்கி ஓரினச்சேர்க்கையை விரும்புகிறவர்களிடையேயான திருமணத்தை எதிர்காலத்திலும் நாடு அங்கீகரிக்காமல் செய்யப் பொதுத் தேர்தலை ஒழுங்குசெய்தார்கள்.

ருமேனியாவின் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் மூன்று மில்லியன் பேரின் கையெழுத்துக்களைச் சேர்த்து திருமணம் என்றால் அது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே மட்டும்தான் நடக்கலாம் என்ற கோரிக்கைக்கான பொது வாக்கெடுப்பை ஐப்பசி 6,7 திகதிகளில் நடத்தை வைத்தார்கள். பல ஊழல்கள் வெளிப்படுத்தப்பட்டதால் மக்களிடையே பெரும் அதிருப்தியைப் பெற்றிருக்கும் ஆளும் கட்சியினர் மக்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்புவதற்காகவே அந்தத் தேர்தலை ஒழுங்கு செய்தார்கள் என்று குறிப்பிடப்படுகிறது. அக்கட்சியின் உயர்மட்டத்தினர் தாம் அத்தேர்தலில் எந்தப் பகுதியினருக்கும் ஆதரவளிக்கவில்லை என்று சொல்லிக்கொண்டாலும் உத்தியோக பூர்வமில்லாத முறையில் தேர்தல் சமயத்தில் ஓரினச் சேர்க்கையினரைப் பற்றிய அவதூறுகளைப் பரப்புவதில் ஈடுபட்டார்கள்.

இப்போதுள்ள ருமேனிய திருமணச்சட்டம் கூட ஓரினத்தவர்கள் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கவில்லை. ஓர்த்தடொக்ஸ் கிறீஸ்தவம் பலமாக இருக்கும் ருமேனியா பழமைவாதிகளின் பிடியிலேயே இருக்கிறது. அதனால், ஏற்கனவே அப்படியான உறவிலிருப்பவர்கள் வெளியே அதைக் காட்டிக்கொள்ள முடிவதில்லை. பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்பு அப்படியான உறவுள்ளவர்கள் என்று சந்தேகப்படுகிறவர்கள் மீது பலர் வன்முறையைப் பிரயோகித்திருக்கிறார்கள்.

லஞ்ச ஊழல்கள் செய்ததாகக் கருதப்படும் ஆளும்கட்சி அரசியல்வாதிகள் பலர், ஒரு சட்ட மசோதாவைக் கொண்டுவந்து தங்களைத் தாங்களே மன்னித்துக்கொள்ளும் முயற்சியில் பாராளுமன்றத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த முயற்சியை எதிர்த்து ருமேனியர்கள் பல தடவைகள் நாடு தழுவிய மறியல்களும், ஊர்வலங்களும் நடாத்தி வருகிறார்கள். ஆனாலும், ஆளும் கட்சியினரோ பொறுப்பிலிருப்பவர்களை மாற்றி, மாற்றி நியமித்துத் தங்கள் ஆட்சிக் கதிரையை விட்டு இறங்க மறுத்து வருகிறார்கள்.

ஏற்கனவே ஆட்சியினரின் மீது கொதிப்பிலிருக்கும் மக்களோ அவர்களது எண்ணத்தை அறிந்துகொண்டு நடந்த பொதுத் தேர்தலை பெருமளவில் புறக்கணித்தார்கள். தேர்தலில் 30 விகிதமானவர்கள் வாக்களித்து அவர்கள் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றுவதற்கு ஆதரவாக வாக்களித்தால் மட்டுமே அது நிறைவேற்றப்படும் என்பது நிலைமை. சுமார் 20 விகித வாக்காளர்கள் மட்டுமே வாக்குச் சாவடிகளுக்குப் போனார்கள். அதனால் தேர்தல் செல்லுபடியாகாது என்று முடிவு செய்யப்பட்டது.

# செல்பிகளும் சாவுகளும்...

தன்னைத்தானே படங்கள் எடுக்கும் செல்பிகளில் பிரபலம் பற்றி எவரும் சுட்டிக்காட்டத் தேவையில்லை. அப்படியான படங்களை ஆபத்தான இடங்களில் எடுப்பதும் பலருக்கும் விருப்பமானது. அதனால் பலரும் தங்களைத் தாங்களே ஆபத்தான நிலைமைக்கு உள்ளாக்குகிறார்கள். விளைவாகப் பல விபத்துக்களும், இறப்புக்களும் உண்டாகின்றன.

அதன் தாக்கத்தின் அளவைப் புரிந்து கொள்ள இந்தியாவைச் சேர்ந்த the Journal of Family Medicine and Primary Care என்ற விஞ்ஞான சஞ்சிகை அது பற்றிய ஒரு ஆராய்ச்சியை நடாத்தியது. 2011 ஐப்பசி மாதத்திலிருந்து கார்த்திகை 2017 ம் மாதம் வரை உலகில் 259 பேர் செல்பி எடுக்க முற்பட்டபோது இறந்திருக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறது அந்தச் சஞ்சிகை.

அந்த விபத்துக்களில் இறந்து போனவர்களில் 72 விகிதமானவர்கள் ஆண்கள் என்றும், பெரும்பாலானோரின் வயது 30 க்குக்கு குறைவானது என்றும், நீரில் மூழ்கி இறந்தவர்களே அவர்களில் பெரும்பாலானோர் என்றும் குறிப்பிகிறது.

இப்படியான இறப்புக்களில் பெரும்பாலானவை விபத்துக்கள் என்று நாடுகள் பொதுவாகப் பதிந்துவிடுவதால் இந்த இலக்கம் நம்பக்கூடியது அல்ல என்றும் உண்மையாக இறந்தவர்களின் தொகை இதைவிட மிகவும் அதிகமானது என்றும் குறிப்பிடுகிறது அந்தச் சஞ்சிகை.





# புலிகளின் ஆயுதக்கப்பல் ரூட்!

பீஷ்மர்

விடுதலைப்புலிகளின் ஆயுத பரிவர்த்தனை விவகாரங்களை பற்றிய சில மேலோட்டமான குறிப்புக்களை கடந்த வாரத்தில் குறிப்பிட்டிருந்தோம். புதுக்குடியிருப்பிற்கு அப்பாலான ஆனந்தபுரம் ஙிளிஙீ பற்றிய தகவல்களை எழுதிக் கொண்டிருந்த சமயத்தில், வாசகர்களில் சில சந்தேகங்களை தெளிவுபடுத்த, இடையீடாக சில தகவல்களை குறிப்பிடுவதாக கடந்த வாரத்தில் குறிப்பிட்டிருந்தோம்.

புலிகளின் தளபதி தீபனிற்கும், சாள்ஸ் அன்ரனிக்குமிடையில் "கெமிஸ்றி" அவ்வளவு பொருந்தி வரவில்லை, புதுக்குடியிருப்பு களமுனையில் தீபன் கொஞ்சம் மனஸ்தாபத்துடன் இருந்தார் என்பதை குறிப்பிட்டிருந்தோம். ஆட்லறி செல் உதவி தேவையென்றால் கூட தீபனால் பெற முடியாமல் இருந்தது, அதற்கான சூழ்நிலை பற்றியும் குறிப்பிட்டிருந்தோம்.

விடுதலைப்புலிகளின் சர்வதேச ஆயுத பரிமாற்றம் எப்படி தடுக்கப்பட்டிருந்தது, புலிகளால் ஏன் இயங்க முடியாமல் போனது என்பதையும் குறிப்பிட்டிருந்தோம்.

புலிகளின் ஆயுதம் நிரப்பிய டாங்கர் கப்பல்கள் சர்வதேச கடற்பரப்பில் வைத்து, அல்லது சர்வதேச கடற்பரப்பிலிருந்து இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைய எத்தனிக்கும் சமயத்திலேயே தாக்கியழிக்கப்பட்டு கொண்டிருந்தன. இதன்பின்னரே, புலிகள் சிறிய றோலர் படகுகள் மூலம் மன்னார் க்டல்வழியாக ஆயுதங்களை கொண்டு வரும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினர்.

தென்கிழக்காசிய கடற்பரப்புக்களிலிருந்து பெரிய ரக றோலர்களில் ஆயுதங்களை கொண்டு வந்து, இலங்கை கடற்பரப்பிற்கு நெருக்கமாக வைத்து, மீன்பிடி றோலர்களில் ஆயுதங்களை மாற்றி விடுவது திட்டத்தின் முதற்கட்டம்.

விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப்பலை சர்வதேச உளவு அமைப்புக்கள், சட்டலைட்கள் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக் கொண்டு தேடிக் கொண்டிருக்க, அவர்களிற்கு போக்குக்காட்டிவிட்டு இந்த ஆயுதப் பரிமாற்றத்தை செய்ய வேண்டும். ஆனால் புலிகள் முன்னர் செய்ததை போல, பெரிய அளவில் ஆயுதங்களை இறக்க முடியாது.


ஆயுதங்கள் நிரப்பிய டாங்கர் கப்பல்களில் இருந்து புலிகள் எப்படி ஆயுதங்களை இறக்குவார்கள் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். என்றாலும், அப்போது தவறவிட்ட வாசகர்களிற்காக, சம்பவ ஒழுங்கின்படி, ஆயுதம் இறக்கும் விசயத்தையும் சொல்லி விடுகிறோம்.

இலங்கைக்கும், இந்தியாவிற்கும் அண்மையில் உள்ள நிக்கோபர் தீவுக் கூட்டங்களிற்குள்தான் விடுதலைப் புலிகளின் ஆயுதம் நிரப்பப்பட்ட டாங்கர் கப்பல்கள் தரித்து நிற்கும். காரணம், அந்த பகுதிதான் இந்தியா, அமெரிக்காவின் ராடர் வீச்செல்லை இல்லாத பகுதி. இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்குமான கடல் எல்லைப்பகுதி அது. இரண்டு தரப்பும் அந்த இடத்தில் அலம்சியமாக இருந்தார்கள். அந்தமான் தீவில் இந்தியாவின் ராடர் நிலையமொன்று உள்ளதுதான். ஆனால் அது சம்பிரதாயமானது. அந்த நிலையத்தில் இருந்தவர்களை புலிகள் சில சமயம் "கவனித்திருக்கலாம்". ஆனால், அது வீச்சான, புலிகளின் ஆயுதக்கப்பல்களை கண்டறியும் வல்லமையற்றது என்றுதான் ஆயுத டாங்கர்களுடன் செல்லும் புலிகளிற்கு சொல்லப்பட்டிருந்தது.

நிக்கோபர் தீவுகள் என்பது ஆயிரக்கணக்கான தீவுக்கூட்டங்களின் தொகுப்பு. அங்கு மனிதர் வாழ்வது மிகச்சில தீவுகளில்தான். எஞ்சியவை மனிதர்கள் வாழாதவை. தென்கிழக்காசிய நாடுகளில் பதிவுசெய்யப்பட்ட புலிகளின் ஆயுதக்கப்பல்கள் வடகொரியா உள்ளிட்ட சில நாடுகளில் ஆயுதம் வாங்குவதை பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

புலிகளின் ஆயுதக்கடத்தல் நெட்வேர்க்கில் அதுதான் முதலாவது கட்டம். ஆயுதங்களை வாங்கக்கூடிய நாடுகளை அடையாளம் கண்டு, கறுப்பு சந்தை முகவர்களை பிடித்து எப்படியாவது ஆயுதங்களை தயார் செய்வது முதலாவது கட்டம். அப்போது புலிகளிற்கு கணசமாக ஆயுதம் விற்பனை செய்து கொண்டிருந்த நாடு வடகொரியா. ரஷ்ய, சீன தயாரிப்பு ஆயுதங்கள் புலிகளிற்கு தாராளமாக வந்து சேர்ந்த வழி இதுதான்.

ஆயுதக்கடத்தல் வலைமைப்பின் முதலாவது அணி, எந்த நாட்டில் ஆயுதங்களை தயார் செய்து வைத்திருக்கிறதோ, அந்த நாட்டில், அல்லது பக்கத்திலுள்ள வசதியான துறைமுகத்தில்வைத்து புலிகளின் ஆயுத டாங்கர்களில் வைத்து ஆயுதங்கள் ஏற்றப்படும். இது இரண்டாவது கட்டத்தின் ஆரம்பம். உதாரணமாக வடகொரியாவில் ஏற்றப்படுகிறது என வைத்தால், தாய்லாந்தினதோ, இந்தோனேஸியாவினதோ கொடியுடன் அல்லது பனமா போன்ற வேறு சில நாடுகளின் கொடிகளுடனோ சாதாரண சரக்கு டாங்கர்கள் மாதிரி சர்வதேச கடலில் நுழைந்து விடும். அதன்பின், சர்வதேச கடலில் பயணித்துக் கொண்டிருக்கும் நூற்றுக் கணக்கான கப்பல்களில் ஒன்று. இலகுவில் கண்டுபிடிக்க முடியாது.




இந்தோனேசியா, தாயலாந்துக்கு நெருக்கமாக சில சமயங்களில் அந்த நாட்டு துறைமுகங்களிற்கும் வந்து, மலேசியாவிற்கு அருகாக பயணித்து, நிக்கோபர் தீவுக்கூட்டங்களிற்குள் கப்பல் நுழைந்து விடும்.

நிக்கோபர் தீவுக்கூட்டங்களில் பெரும்பாலானவற்றில் ஆட்களே இல்லையென்று ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். அப்படி ஆளற்ற, சர்வதேச கடலில் பயணிக்கும் கப்பல்களின் கண்ணில் படாமல், தீவுக் கூட்டங்களிற்குள் நிறுத்தி வைப்பார்கள்.

ஆயுதங்கள் நிரப்பப்பட்ட ராங்கர் ஒன்று நிக்கோபர் தீவுக்கூட்டத்திற்குள் வந்ததும், உடனடியாக அதை முல்லைத்தீவுக்கு கிட்டவாக சென்று ஆயுதங்களை பரிமாறிக் கொள்வதில்லை. வாய்ப்பான சமயம் அமைய வேண்டும்.

சர்வதேச கடலில் இருந்து ஆயுதங்களை பெரிய தொடரணியாக கொண்டு வருவதென்பது சாத்தியமற்றது. கடற்புலிகளின் ஆளணியை பெரியளவில் திரட்டி செய்ய வேண்டிய நடவடிக்கை. முல்லைத்தீவு கடற்பரப்பில் அல்லது அதற்கு பக்கத்தில்தான் ஆயுத பரிமாற்றம் நடக்க வேண்டும். திருகோணமலை, காங்கேசன்துறை கடற்படைத்தளத் திற்குமிடையில் கடற்படையின் ரோந்து கிரமமாக நடந்து வரும். அதைவிட சக்திவாய்ந்த ராடர் இரண்டு கடற்படை முகாம்களிலும் இருந்தன. புலிகளின் ஆயுத பரிவர்த்தனையை தடுப்பதற்காகவே பின்னர் கட்டைக்காட்டில் ஒரு ராடர் நிலையத்தை கடற்படை அமைத்தது.

கடற்படையின் ரோந்து குறைவாக இருக்கும் சமயம் எதுவென்றால், கடலில் கொந்தளிப்பாக இருக்கும் சமயம், கடுமையான மழைக்காலம் போன்றன. இந்த சமயத்தை விடுதலைப்புலிகள் மிஸ் பண்ண மாட்டார்கள். அப்படியான சமயங்களிற்காக காத்தருப்பார்கள்.

இப்படியான சந்தரப்பங்கள்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

அமையும் வரையும் நிக்கோபர் தீவுக் கூட்டத்திற்குள் ஆயுதம் நிரப்பப்பட்ட ராங்கர் காத்திருக்கும். சில சமயங்கள் ஆயு மாதங்கள் வரை கூட காத்திருக்கும்.

மிக அத்தியாவசிய ஆயுதங்கள், இனியும் ராங்கர் காத்திருக்க முடியாது என்ற நிலைமையேற்படும் போது, புலிகள் இன்னொரு உத்தியையும் கையாள்வார்கள். காங்கேசன்துறை அல்லது திருகோணமலை போன்ற பெரிய தளங்களில் அதிகாலைகளில் கரும்புலி தாக்குதலிற்கு திட்டமிடுவார்கள்.

ஏன் அதிகாலையை தேர்வு செய்தார்கள்?

இரவில் இரகசியமாக நெருங்கி செல்லலாம் என்பதாலா?

அதுவும் ஒரு காரணம்தான். ஆனால் பிரதான காரணம் வேறு.

இயற்கை சூழல் கைகொடுக்காத நிலையில், கடற்படையுடன் கடுமையான சண்டை பிடித்து ஆயுதங்களை இறக்க புலிகள் தயாராவார்கள். இதற்காக முன்னிரவிலேயே முல்லைத் தீவு கரையிலிருந்து புறப்படுவார்கள். அது கடற்படையின் ராடரில் பதிவாகும். ஆனால் நள்ளிரவில் கடற்படை தாக்குதலிற்கு இறங்காது.

முன்னரே திட்டமிட்ட நாளிலேயே புலிகளின் இந்த நடவடிக்கை அமையும். நிக்கோபர் தீவுக்கூட்டத்திற்குள் மறைந்து நிற்கும் புலிகளின் ஆயுதக் கப்பல் புறப்பட்டு, இலங்கைக்கு நெருக்கமாக ஆனால் சர்வதேச கடற்பரப்பில் வரும். குறிப்பிட்ட சமயத்தில் கப்பல் நிற்கும் பொசிஷனை ஜி.பிஎஸ் தொழில்நுட்பம் மூலம் கடற்புலிகளிற்கு அறிவிப்பார்கள். அந்த பொசிஷனிற்கு செல்லும் கடற்புலிகளின் விநியோக படகுகள், ஆயுதங்களை ஏற்றிக் கொள்வார்கள்.

விநியோக படகுகளில் ஆயுதங்கள் ஏற்றப்பட்டதும், சண்டை படகுகளின் பாதுகாப்புடன் முல்லைத்தீவு கரை நோக்கி திரும்புவார்கள். இப்பொழுது ஓரளவு விடியத் தொடங்கும்.


இந்த சமயத்தில்தான் புலிகள் சில சமயங்களில் கடற்படை முகாம்கள் மீது தாக்குதல்கள் நடத்தியிருந்தார்கள். அது கடற்படையின் கவனத்தை திசைதிருப்ப நடத்தப்பட்டவை. இப்பொழுது உங்களிற்கு, கடற்படை முகாம்கள் மீது புலிகள் நடத்திய தாக்குதல்கள் நினைவிற்கு வரலாம். அந்த சமயங்களில் எல்லாம் முல்லைத்தீவு கடல்வழியாக புலிகளின் ஆயுத விநியோக படகுகள் வந்து கொண்டிருந்தனவா என நீங்கள் யோசிப்பது புரிகிறது.

நீங்கள் நினைப்பது கிட்டத்தட்ட சரிதான்!

கடற்புலிகளின் ஆயுத விநியோகத்தில் அரச படைகளின் மேலாதிக்கம் எப்பொழுது ஏற்பட்டதெனில், வான்படையின் வலு அதிகரிக்கப்பட்ட பின்னர். இலங்கை வான்படையில் மிகையொலி ஜெற் விமானங்களான கிபிர், மிக் விமானங்களின் வரவிற்கு பின்னர் கடற்புலிகளின் விநியோக வண்டிகளின் மீது தாக்குதல் நடத்தப்பட ஆரம்பித்தது. சில சமயங்களில் கடலில் சில படகுகள் தாக்கப்பட்டன. சில சமயங்களில் கரையோரத்தில் சில தாக்கப்பட்டன. என்றாலும், எப்படியோ ஆயுத விநியோகம் நடந்து கொண்டிருந்தது. அதாவது, முல்லைத்தீவிற்கு அப்பால், சர்வதேச கடற்பரப்பில் புலிகளின் ஆயுத ராங்கர்கள் வரும்வரை, விடுதலைப்புலிகளின் ஆயுத பரிவர்த்தனையை நிறுத்தவே முடியாதென்ற யதார்த்தத்தை உலகத்திற்கு மூன்றாம் ஈழப் போர்க்காலம் உணர்த்தியது.

இதன் அடுத்த கட்டமே, மூன்றாம் ஈழப்போரின் இறுதிக்கு பின்னர், புலிகளின் சர்வதேச நெற் வேர்க்கை புலனாய்வு அமைப்புக்கள் மோப்பம் பிடித்த விடயம். ஆயுதக்கப்பல்களை ஓட அனுமதித்துக் கொண்டு, விடுதலைப் புலிகளின் சர்வதேச ஆயுத பரிவர்த்தனையை நிறுத்த முடியாதென்பதை கண்டு, சர்வதேச நெற்வேர்க்கிலேயே உலக உளவு அமைப்புக்கள் கைவைத்ததே, புலிகளின் ஆயுதக் கப்பல்கள் வரிசையாக தகர்க்கப்பட்ட சம்பவம். இதில் இலங்கை கடற்படையையும் குறைத்து மதிப்பிட முடியாது. வல்லரசு நாடுகளின் கடற்படையினர் மட்டுமே செய்யும் பலநாள் ஆழ்கடலில் பயணித்து எதிரிக்கப்பல்களை தகர்க்கும் நடவடிக்கையை செய்ய வல்லவர்களாக இலங்கை கடற்படையும் மாறியிருந்தது.

சரி, கடந்த பாகத்தின் இறுதியில் மன்னார் கடலில் அமிழ்ந்தபடி ஒரு றோலர் பயணித்துக் கொண்டிருந்தது, அதில் கடற்படைக்கு சந்தேகம் ஏற்பட்டது என்று முடித்திருந்தோம். இந்த வாரத்தில் அதைப்பற்றி சொல்லவில்லையே என கேட்கிறீர்களா, இந்த வாரம் கொஞ்சம் அதிகமாகவே விசயங்களை சொன்னதால், கடந்த வார தொடர்ச்சியை, அடுத்த வாரத்தில் குறிப்பிடுகிறோம். **(தொடரும்)**



**முல்லைத்தீவிற்கு அப்பால், சர்வதேச கடற்பரப்பில் புலிகளின் ஆயுத ராங்கர்கள் வரும்வரை, விடுதலைப்புலிகளின் ஆயுத பரிவர்த்தனையை நிறுத்தவே முடியாதென்ற யதார்த்தத்தை உலகத்திற்கு மூன்றாம் ஈழப் போர்க்காலம் உணர்த்தியது.**

---

7-ம் பக்க தொடர்ச்சி...

செலவு அறிக்கை உறுப்பினர்களுக்குத் தரப்பட வேண்டுமென்ற எதிரணியினரின் விடாப்பிடியான கோரிக்கை சபையில் பெரும் அமளிதுமளியை ஏற்படுத்தியது.


ஒரு கட்டத்தில் எதிரணி உறுப்பினர்கள் அமர்ந்திருந்த கதிரைகளிலிருந்து எழுந்து நின்று வாதித்ததுடன், வாதம் உச்சக்கட்டமானதும் உறுப்பினர்கள் பலர் தத்தமது கதிரைகளில் ஏறி நின்றும் வாதித்தனர்.

தங்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களே நிதிக்குழுவில் அங்கம் வகிப்பதால் மாதாந்த வரவுசெலவு அறிக்கை அவர்களுக்கு வழங்கப்படுவதாகவும், சபை உறுப்பினர்களுக்கு வழங்க முடியாதெனவும் மேயர் றகீப் பதிலளித்ததோடு அந்த நிலைப்பாட்டில் அவர் உறுதியாகவுமிருந்தார்.

இதனால் பெரும் களேபரம் ஏற்படவே சபை அமர்வை முடிவுறுத்துவதாக அறிவித்துவிட்டு சபா மண்டபத்திலிருந்து வெளியேறினார்.

இதனையடுத்து கொதிப்படைந்த குறித்த எதிரணியினரான சாய்ந்தமருது சுயேச்சைஅணி, தமிழரசுகட்சி, மற்றும் சிலகட்சி உறுப்பினர்களென 26 உறுப்பினர்கள் ஒப்பமிட்டு கிழக்கு மாகாண ஆளுநரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளதுடன், மட்டக்களப்பிலுள்ள ஆளுநர் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்தியுள்ளனர்.

இதன் போது கல்முனை மேயர் ஹிட்லர் போன்று செயற்படுவதாகக் குறிப்பிடும் சுலோக அட்டையொன்றையும் ஏந்தியிருந்ததைக் காண முடிந்தது.



மேயரின் செயற்பாடுகளில வெளிப்படைத் தன்மையில்லை, சபை அமர்வுகளின் போது மேயர் தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்கிறார், நிகழ்ச்சி நிரல்படி அமர்வுகளை நடத்துவதில்லை, தீர்மானங்களை வாக்கெடுப்புக்கு விடுவதில்லை, நிதிக்குழு தீர்மானங்களை மீறிய தன்னிச்சையான செயற்பாடுகள் என்பன போன்ற குற்றச் சாட்டுக்களை ஆளுநருக்கு வழங்கிய மகஜரில் உறுப்பினர்கள் குறிப்பிட்டிருந்ததாகவும் அறியவருகின்றது.

இதன் பின்னர் மேயர் சட்டத்தரணி றகீப் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் வகையில், உறுப்பினர்கள் சிலர் சகிதம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றைக் கடந்தவாரம் ஏற்பாடு செய்து விளக்கமளித்தார்.

அவர் கூறுகையில்,

"என் மீது சில உறுப்பினர்கள் அபாண்டமான பொய்க்குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர். முலீநகரசபை நிருவாகமும் மக்கள் சேவைகளும் சிறப்பாக நடைபெறுவதைப் பொறுக்க முடியாத பேர்வழிகளின் செயல் இது.

நான் ஹிட்லர் மாதிரி செயற்படவில்லை, சகல உறுப்பினர்களையும் அனுசரித்தே செயற்படுகின்றேன். இங்கு நிதிக்கையாடல் செய்ய எவருமில்லை, ஆனால் சபையின் நிதிக்குழு, நிதி ஆய்வுக்குழு எனும் நிலைக்கு மாறியுள்ளது.

சிலர் தெருவிளக்கு அரசியல் நடத்துகிறார்கள், சிலர் ஊடக சந்திப்புக்களை நடத்தி பயன் தரும் நல்ல திட்டங்களுக்கு கூட மாற்றுக் கருத்துக்களை கூறி விளம்பரம் தேடுகிறார்கள், சில சுயேச்சை உறுப்பினர்கள் தமது பிரதேசத்திற்கே எல்லாம் நடக்க வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள்.

போதாதென்று மேயரான என்னை பொம்மையாக பாவிக்க வேண்டுமென்ற நப்பாசையுடனுமுள்ளனர்.

நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் கௌரவ உறுப்பினர்களின் சிறப்புரிமையை பறிக்கவில்லை. முலீநகரசபை சிறப்பாக நடக்க வேண்டும், இதற்காக முதல்வரின் தற்றுணிவு அதிகாரமும் பயன்படுத்தப்படும்.

மாநகரசபையின் கட்டளைச் சட்டத்தைஅறியாதுசிலஉறுப்பினர்கள் செயற்பட முற்படுகின்றனர். ஒருசிலருக்காக கல்முனை மாநகரம் வாழாதிருக்க முடியாது.

எதிர்காலத்தில் மாநகரசபை அமர்வுகளில் எந்த உறுப்பினரும் அநாகரிகமாக நடக்க இடமளியேன். முதல்வர் அனுமதியின்றி எவரும் பேச முடியாது. ஆநாகரிகமாக எவரும் நடந்தால் சபையை விட்டு வெளியேற்றுவதுடன் அவசியமானால் ஒருமாத தடையும் விதிப்பேன். என் அதிகாரத்தை இனி செயற்படுத்த தயங்கேன்". இப்படிக் கூறினார் மேயர் றகீப்!

கல்முனை மாநகரசபை அமர்வுகள் சமூக நிலைக்குத் திரும்புமா? மக்கள் சேவைக்கென மக்களால் அனுப்பப்பட்டவர்களிடையே இத்தனை இழுபறிகளா? எதிர்காலம் தான் பதில் தரவேண்டும்.

கவிஞர் மகுடேசுவரன்



# சொல்லேர் உழவு

## கலவி தெரியும்... கண்கலவி தெரியுமா? 5




ஆங்கிலத்தில் ஒரு சொல்லுருபை முன்பின்னாக ஒட்டி எண்ணற்ற புதுச்சொற்கள் உருவாவதைப் பார்த்தோம். தமிழில் அப்படி முன்பின்னாக ஒட்டி எப்படிச் சொற்களை உருவாக்குகிறோம்? அத்தன்மையை நன்கு விளங்கிக் கொள்ள எடுத்துக்காட்டுகளின் வழியே தமிழ்ச்சொற்களை அறிய வேண்டும். பிற மொழிகளில் பத்துச் சொற்கள் உருவாகின்ற இடத்தில் தமிழில் நூறு சொற்கள் உருவாகும். அந்நூறும் முடிவான கணக்கில்லை. மேலும் சொற்களை உருவாக்கிச் செல்லலாம். சொற்களைத் தோற்றுவிக்கும் மொழி வாய்பாடுகளை அறிந்திருந்தால் புதுச்சொற்களை யாரும் ஆக்கலாம்.

தமிழில் ஒரு சொல்லொற்று எப்படியெல்லாம் புதுச்சொற்களை உருவாக்கிச் செல்கிறது என்பதைப் பார்ப்போம். எடுத்துக்காட்டுக்குக் 'கண்' என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். கண் என்னும் அச்சொல்லின் எளிய பொருள் என்ன? பார்ப்பதற்குப் பயன்படும் உடற்பகுதி. கண்ணால் பார்க்கிறோம். கண் என்பதற்கு அஃதொன்றே பொருளில்லை. மேலும் பல பொருள்கள் இருக்கின்றன. மரக்கணுக்களும் கண் என்றே கூறப்படும். மூங்கில், முரசடிக்கும் இடம், மூட்டுவாய், பெருமை, இடம், அறிவு, பற்றுக்கோடு, உடம்பு, அசை, உடலூக்கம் ஆகிய வேறு பல பொருள்களும் இருக்கின்றன.

'தமிழில் ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள், ஒரு பொருளுக்குப் பல சொற்கள்' என்னும் தலையாய தன்மையை நாம் எப்போதும் நினைவிற்கொள்ள வேண்டும். அப்படிக்கொண்டால்தான் ஒரு சொல்லின் வெவ்வேறு பொருள் வாய்ப்புகளை நோக்கி நம் எண்ணம் நகர்ந்தபடியே இருக்கும். ஒரு பொருளுக்கு வழங்கப்படுகின்ற வெவ்வேறு சொற்களுக்கான தேட்டமும் வரும்.

இவ்விடத்தில் நாம் 'கண்' என்பதற்கு வழங்கப்படுகின்ற 'பார்க்கும் உடலுறுப்பு' என்னும் பொருளை எடுத்துக்கொள்கிறோம். அப்பொருள் வழியே நாம் ஆக்கிக்கொண்ட வெவ்வேறு சொற்கள் என்னென்ன ?

கண்ணில் ஒரு கட்டி வந்தால் அது 'கண்கட்டி'.

கண்ணைப் பொத்தினால் அது 'கண்கட்டு'.

நம் கண்ணை மறைக்குமாறு ஒரு வித்தையைச் செய்து ஏமாற்றி வியக்க வைத்தால் அது 'கண்கட்டு வித்தை'. கண்ணைக் கட்டியதுபோல் ஏதோ செய்துவிட்டான்.

தேங்காய்க்குக் கண்கள் இருப்பதை அறிவோம். தேங்காயின் குடுமிப் பகுதியில்மூன்றுதுளைகள் இருப்பதைக் கண் என்றே வழங்குவர். கண்ணுள்ள அந்த மேல்மூடியைக் 'கண்கயில்' என்பார்கள். கயில் என்றால் பற்றித் தூக்கும் பிடரிப் பகுதி. தேங்காயின் மேற்பகுதியில்தான் அதன் கண்பகுதி இருக்கும். அதனால் அதனைக் கண்கயில் என்றார்கள்.

கண்ணெதிரே கடவுளைப்போல் ஒருவர் தோன்றி நலம் செய்தால் அவரைக் 'கண்கண்ட தெய்வம்' என்போம். தெய்வம் கண்ணுக்குத் தெரியாதது. அவரோ கண்ணால் காணும்படி எதிரே நிற்கின்ற தெய்வம்.

காதற் குறிப்போடு தலைவனும் தலைவியும் பார்த்துகொள்கின்ற பார்வைக்குக் 'கண்கலவி' என்றே பெயர். 'சைட் அடிக்கிறது' என்று பேச்சு வழக்கில் சொல்கிறார்கள். பார்த்து மகிழ்தல். கண்கலவி என்பது அதற்கு ஓரளவு பொருந்துகிறது. கண்கலவியில் இருதரப்பும் பங்கெடுக்கிறது. 'சைட் அடிப்பது' ஒருதலையாக இருக்கலாம்.

காணத் திகட்டாத பார்வையின்பத்திற்குரியதைக் 'கண்காட்சி' என்கிறோம். அந்தக் காட்சியானது பெரிதினும் பெரிதாக இருப்பின் அதைக் 'கண்கொள்ளாக் காட்சி' என்கிறார்கள்.

ஒருசெயலைச்செய்வதற்குஏவுபவன் 'கண்காட்டி'. நடந்துகொண்டிருக்கும் ஒரு செயலை மேற்பார்வையிடுபவன் 'கண்காணி'. கண்ணால் காண்பதன் வழியே மேற்பார்வையிடுபவன். அந்தச் செயல் 'கண்காணிப்பு'. கண்காணிப்புக்குத் தரும் கூலி 'கண்கூலி'.

நேரடியாகப் பார்த்ததைக் 'கண்கூடாகக் கண்டேன்' என்று சொல்வார்கள். கண்கள் அந்தக் காட்சியில் கூடின என்பது பொருள். சினந்தால் அது 'கண்சிவப்பு'. கண்சி வந்தால் மண்சிவக்கும். தூக்கத்திற்கு முன்னான நிலை 'கண்சுழல்தல் அல்லது கண்சொக்குதல்'. கண்ணால் தெரிவிக்கும் குறிப்பு 'கண்சாடை'. உறங்குவதும்கூட 'கண்ணுறக்கம்'.

இச்சொற்களையும் சொற்றொடர்களையும் இயல்பாகப் பயன்படுத்திக் கொண்டிருந்த நமக்கு இப்போது அதன் தோற்றுவாய்த் தன்மையை உணர்ந்தவுடன் சற்றே வியப்பேற்படுகிறது. ஆம், ஒரேயொரு சொல்வேரைப் பயன்படுத்தி நாமும் பற்பல சொற்களை உருவாக்குகிறோம். நான் மேலே சொன்னவை கொஞ்சம்தான். இன்னும் பல சொற்கள் இருக்கின்றன. அப்படி உருவாக்கித்தான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

நாம் எடுத்துக்கொண்ட சொல்வேர் கண் என்பதால் அவையெல்லாம் நல்ல பயன்பாட்டில் உள்ளன. ஓரளவு அறிந்த சொற்களாகவும் சொற்றொடர்களாகவும் இருக்கின்றன. கண்கலவி, கண்கயில் போன்ற அருஞ்சொற்களும் கிடைத்தன. நாம் நன்கறியாத சொல்வேர்களும் பற்பல சொற்களை உருவாக்குகின்றன. அறியாத சொல்வேரை அறிந்தால் அங்கேயும் கொத்து கொத்தாக புதுச்சொற்களை அறிந்துகொள்ளலாம்.

(தொடரும்)

---

9-ம் பக்க தொடர்ச்சி...

**நிர்வாகத்தில் சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரித்து கண்டறிவது பற்றி தமிழ் தேசிய கூட்டமைப்பும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் தேர்தல் வாக்குறுதியளித்திருந்தன. இரண்டும் அங்கு பெரிய கட்சிகள். ஏன் அந்தவிசாரணைகள் ஆரம்பிக்கப்படவில்லை?**

**வி.மண்வண்ணன்:** இரண்டாவது அமர்வின் போதே கடந்த ஆட்சியில் கஸ்தூரியார் வீதியில் கட்டப்பட்ட கடைத் தொகுதி சம்மந்தமாகவும் அதில் இடம்பெற்ற முறைகேடுகள் சம்மந்தமாகவும் சபையின் கவனத்திற்கு கொண்டு வந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தேன். அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று முதல்வர் கூறியிருந்தாலும் எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

ஆட்சியிலிருப்பவர்கள், பழைய ஊழல்களை கண்டுபிடிக்காமல் இருக்கும் ஒரு போக்குத்தான் இது. முன்னையதை நாம் பிடிக்க மாட்டோம், எங்களதை அடுத்து வருபவர் பிடிக்ககூடாது என்ற போக்கு.


ஆனால் நாங்கள் அதிகாரத்தில் இருந்திருந்தால், களவெடுத்தும் இருக்கமாட்டோம், எங்கள் களவுகளை படித்து விடுவானோ என அஞ்சி, களவெடுத்தவர்களை சும்மா விட்டும் இருக்கமாட்டோம்.

**தீபம்: அடுத்த மாகாண சபைத் தேர்தலில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?**

**வி.மண்வண்ணன்:** மாகாண சபைத் தேர்தல்களில் வடக்கிலும் கிழக்கிலும் நாங்கள் நிச்சயமாகப் போட்டியிடுவோம். ஆனால் எங்களுடைய நிலைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளும் தரப்புக்களோடு கூட்டிணைந்து அரசியல் பயணத்தைத் தொடர்வதற்கு நாங்கள் உறுதியாக இருக்கிறோம். தமிழ் மக்கள் பேரவையால் ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் திர்வுத் திட்டத்தை முன்வைத்து அதை இலக்காக வைத்து செயற்படுவோம். தேர்தலுக்காக மட்டும் அந்த அரசியல் கோட்பாடுகளைக் கையிலெடுப்பதும் நடைமுறையில் அதற்கு தலைகீழாக நடப்பதுமான தரப்புக்களை அரவணைத்துச் செல்ல முடியாது. தமிழினத்திற்கு எதிராக அழிப்புச் செய்தவர்களோடு கூட்டிணைந்தவர்களோடும் சேர்ந்து பயணிக்க முடியாது. தூய்மையாக இருக்கக் கூடிய தரப்புக்களோடு இதயசுத்தியோடு தமிழ் மக்களுக்காகச் செயற்படும் தரப்புக்களோடு நாங்கள் மாகாண சபையில் மட்டுமல்ல அதைத் தாண்டியும் கூட்டாகச் சேர்ந்து செயற்படுவதற்கு தயாராக இருக்கிறோம்.

**தீபம்: முதலமைச்சர் ஒரு அணியை உருவாக்க முயல்வதாக தெரிகிறது. தமிழ் தேசிய மக்கள் முன்னணி அதில் இணையுமா அல்லது தனி வழியா?**

**வி.மண்வண்ணன் :** முதலமைச்சர் ஒரு கட்சியை ஆரம்பித்து தூய்மையான அரசியலை முன்னெடுக்க வந்தால் அவருடன் சேர்ந்து நாங்கள் செயற்படுவோம். அவருடன் இது சம்மந்தமாக பேச்சுக்களும் நடைபெறுகிறது. அதனால் அது தொடர்பான விரிவாக தற்சமயம் சொல்ல முடியாது. ஆனால் முதலமைச்சர் ஒரு புதுக் கட்சியை உருவாக்கும் பட்சத்தில் கொள்கைக்காக முதலமைச்சரின் தலைமையில் அவரைத் தலைமையாகக் கொண்டு பயணிக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்.


18
மூன்று கில்லாடிகள்!
கதை, படம்: ராஜே
முன்கதை: பிரெஞ்சு விமானி ஹெலனின் தலைமையில் கிளம்பிய விமானங்களை ஜெர்மனிய விமானங்கள் தாக்கத் தயாராக இருந்தன. ஜெர்மனிய விமானங்களோ ஃபிரான்ஸின் சாலைப் போக்குவரத்து, ரயில் பாதை, தொழிற்சாலைகள் என எல்லாவற்றையும் துவம்சம் செய்தபடி பறந்தன... அதில் ஒரு ஜெர்மன் விமானி, தனியாக வானில் சிக்கிய ஹெலனின் விமானத்தை கண்காணித்தான்...
ஜெர்மனி விமான வீரனின் பார்வையில் ஹெலன் சிக்கினான்.
பிரெஞ்சு விமானப்படை நம்மை அட்டாக் பண்ண போர்க்களத்தில் இறங்கி விட்டார்கள். தீர்த்துக்கட்டி விட வேண்டியதுதான்!
ஜெர்மனி வீரன் ஹெலனைப் பின் தொடர்ந்தான். பின்னால் தனக்கு ஆபத்து வருவதை ஹெலன் உணரவில்லை.
ஆனால், விமானத்திலுள் இருந்த கண்ணாடியில் எப்பொழுதும் ஒரு கண் வைத்திருப்பான்.
ஆஹா! ஜெர்மனிக்காரன் நம்மைப் பின் தொடர்ந்து வருகிறானே! இவனிடம் சிக்கிவிடக் கூடாது.
இவனுக்குப் போக்குக்காட்டி இவனைத் திணறடிக்கணும்.
நாம் இவனைப் பின் தொடர்ந்து வருவதை இவன் உணரக் கூடாது.
எனக்கு இவன்தான் முதல் பலி
ஜெர்மனி வீரன் தாக்கியதில் ஹெலனின் விமான மேற்கூரைமீது மட்டும் குண்டு உரசிச் சென்றது.
ஆனால், ஹெலன் தாக்கப்பட்டதுபோல் விமானத்தைத் தலைகீழாகச் செலுத்தினான்.
ஒரே அடியில் வீழ்ந்துவிட்டான் திறமையற்ற விமானியாக இருப்பானோ?
கீழே ஹெலனின் விமானம் இறங்கிக் கொண்டிருந்தது.
ஜெர்மனி விமானியின் பார்வை அடுத்த பிரெஞ்சு விமானத்தின்மீது விழுந்தது.
குருவி சுடுவதுபோல் இவனுகளைச் சுட்டுத் தள்ளணும்.
ஹெலன் சுதாரித்தான்.
இப்பொழுது நான் மேலே வருகிறேன்.
ஹெலன் ஜெர்மனி விமானத்தை முன்னேவிட்டுப் பின்தொடர்ந்தான்.
ஹெலன் பின் தொடர்வதை அறியாத ஜெர்மனி விமானி, முன்னே செல்லும் இரு விமானங்களைக் குறி வைப்பதில் கவனமாய் இருந்தான்.
ஹெலன் சரியான கோணத்தில், மிகச்சரியாக ஜெர்மனி விமானத்தைச் சுட்டான்.
என் குறி தப்பாதுடா
அடுத்த வினாடி ஜெர்மனி விமானம் பற்றியெரியத் தொடங்கியது.
தொடரும்...

# புதிர் விளையாட்டு




## ரெட்டைப் பிறவி!

எந்த மாற்றமும் இல்லாமல், அச்சு அசலா இருக்கும் ஜோடி எது?


## கலக்கலாம்... கலர் அடிக்கலாம்!

புள்ளிகளைப் பார்த்து, சரியான வண்ணங்களைத் தீட்டு!




## அஞ்சுக்கு 5


எனக்கும் என் தம்பிக்கும் 5 வித்தியாசங்கள் இருக்கு. கண்டுபிடிங்க பார்ப்போம்!



## பூனை வேணுமா பூனை?

போஸ்ட் கார்டு சைஸில் அட்டையை எடுத்துக்கங்க. இங்கே இருக்கும் படத் துண்டுகளை வெட்டி ஒட்டுங்க. அழகான பூனையை உருவாக்குங்க!






## வழி காட்டு!

கூட்டத்தை விட்டுப் பிரிந்த கோழிக் குஞ்சுக்கு சரியான வழியைக் காட்டுங்க ஃப்ரெண்ட்ஸ்!

## என் நிழல் எது?

என்னைச் சுற்றி எத்தனையோ நிழல்கள். இதில் எது என்னோட நிழல்?




### விடைகள்:

ரெட்டைப் பிறவி!



வழி காட்டு!



என் நிழல் எது?



அஞ்சுக்கு 5















விளம்பரத் தொடர்புகளுக்கு 0768255563, 0214927561













விளம்பரத் தொடர்புகளுக்கு 0768255563, 0214927561


இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி,
கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 14.10.2018 அன்று வெளியிடப்பட்டது.